# 1689

# விசுவாச அறிக்கை

## The 1689 Confession of Faith

RP
REFORMED PUBLICATIONS

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**1689 விசுவாச அறிக்கை**

*முதல் பதிப்பு: 2002*
*இரண்டாம் பதிப்பு: 2010*
*மூன்றாம் பதிப்பு: 2015*

*கிடைக்குமிடம்:*
**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைபேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த
மேலதிக தகவல்களுக்கு www.biblelamp.org
வலைப்பூவைப் பார்க்கவும்.

# பொருளடக்கம்

1. பரிசுத்த வேதாகமம்........10
2. கடவுளும் பரிசுத்த திரித்துவமும்........15
3. கடவுளின் ஆணை........17
4. கடவுளின் படைப்பு........20
5. தெய்வீக பராமரிப்பு........21
6. மனிதனின் வீழ்ச்சியும் பாவமும்,
அதற்குரிய தண்டனையும்........24
7. கடவுளின் உடன்படிக்கை........26
8. மத்தியஸ்தராகிய கிறிஸ்து........27
9. சுயாதீன சித்தம்........32
10. திட்ப உறுதியான (தவிர்க்க முடியாத) அழைப்பு........34
11. நீதிமானாக்குதல்........35
12. மகவேட்பு........38
13. பரிசுத்தமாக்குதல்........38
14. இரட்சிக்கும் விசுவாசம்........40
15. மனந்திரும்புதலும் இரட்சிப்பும்........41

16. நற்கிரியைகள் ........ 43

17. பரிசுத்தவான்களின் விடாமுயற்சி ........ 46

18. கிருபையின் நிச்சயமும் இரட்சிப்பும் ........ 48

19. கடவுளின் நீதிச் சட்டம் ........ 50

20. நற்செய்தியும் அதன் செல்வாக்கும் ........ 53

21. கிறிஸ்தவ சுதந்திரமும் மனச்சாட்சியின் சுதந்திரமும் ........ 55

22. ஆராதனையும் ஆண்டவரின் நாளும் ........ 56

23. நீதியுள்ள ஆணையிடுதலும் உறுதிமொழிகளும் ........ 60

24. குடிமக்களின் அரசு ........ 61

25. திருமணம் ........ 62

26. திருச்சபை ........ 63

27. பரிசுத்தவான்களின் ஐக்கியம் ........ 68

28. திருமுழுக்கும், திருவிருந்தும் ........ 70

29. திருமுழுக்கு ........ 70

30. திருவிருந்து ........ 71

31. மரணத்திற்குப்பின் மனிதனின் நிலையும்
மரித்தோரின் உயிர்த்தெழுதலும் ........ 74

32. இறுதி நியாயத்தீர்ப்பு ........ 75

# அறிமுகம்

*பரிசுத்த வேதாகமத்தின் வேத சத்தியங்களை முறையாகத் தொகுத்து வழங்குகிறது 1689 விசுவாச அறிக்கை. 1677 ஆம் ஆண்டில் மூப்பர்களையும், விசுவாசிகளையும் கொண்ட இங்கிலாந்தில் இருந்த பல சபைகள் இணைந்து இதை முதலில் வெளியிட்டன. கிறிஸ்தவர்கள் அதிகமாக அரசால் துன்புறுத்தப்பட்டு வந்த காலமிது.*

*1644-1648 ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலங்களில் இங்கிலாந்தையும், ஸ்கொட்லாந்தையும் சேர்ந்த பியூரிட்டன் பெரியோர்கள் வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையைத்* (Westminster Confession of Faith) *தொகுத்து வெளியிட்டனர். அதேவேளை கொங்கிரிகேஷனல் சபை* (Congregationalists) *அமைப்பைத் தழுவியவர்களும் சவோய் விசுவாச அறிக்கையை* (Savoy Declaration of Faith and Order) *1658 ஆம் ஆண்டில் வெளியிட்டனர். வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கை பிரஸ்பிடீரியன் சபை அமைப்பு முறையின் அடிப்படையில் எழுதப்பட்டிருந்தது. திருச்சபையின் தன்மை, திருமுழுக்கு, திருவிருந்து, சபை அரசமைப்பு போன்ற விஷயங்களில் அவர்களிலிருந்து வேறுபட்ட கோட்பாடுகளை பாப்திஸ்து விசுவாசிகள் கொண்டிருந்தனர். 1644 ஆம் ஆண்டில் பாப்திஸ்துகள் ஏற்கனவே ஒரு சுருக்கமான விசுவாச அறிக்கையை எழுதி வைத்திருந்தனர். காலங்கூடி வந்தபோது அவர்கள் வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையையும், சவோய் விசுவாச அறிக்கையையும் தழுவி, பாப்திஸ்து கோட்பாடுகளின் அடிப்படையில் 1677 ஆம் ஆண்டில் ஒரு விசுவாச அறிக்கையை எழுதினர். இம்மூன்று விசுவாச அறிக்கைகளும் சீர்திருத்தக் கோட்பாடுகளைப்*

*பின்பற்றியதால் பல விதங்களில் ஒன்றையொன்று ஒத்திருந்தன. கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ சபைகளும் அக்காலத்தில் அரசால் துன்புறுத்தப்பட்டதால் இவ்விசுவாச அறிக்கையை பாப்திஸ்துகளால் உடனடியாக வெளியிட முடியவில்லை. 1689 ஆம் ஆண்டில் அரசின் துன்புறுத்தல் நின்று வழிபாட்டு சுதந்திரம் கிடைத்தபோது 37 பாப்திஸ்து போதகர்கள் இணைந்து இவ்விசுவாச அறிக்கையை வெளியிட்டனர். அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு இங்கிலாந்திலும், வேல்ஸ் தேசத்திலும் பார்டிகுலர் அல்லது கல்வினிச பாப்திஸ்து சபைகளின்* (Particular or Calvinistic) *விசுவாச அறிக்கையாக இதுவே இருந்தது. இது இலண்டன் விசுவாச அறிக்கை என்றும் அழைக்கப்பட்டது. 1744 ஆம் ஆண்டில் வட அமெரிக்காவில் இருந்த கல்வினிச பாப்திஸ்து சபைகள் இதை அங்கீகரித்து ஏற்று பிலடெல்பியா விசுவாச அறிக்கை* (Philadelphia Confession of Faith) *என்ற பெயரில் பயன்படுத்தினர்.*

*இலண்டனில் நியூ பார்க் சாலை சபையின் போதகராக இருந்த சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் 1853 ஆம் ஆண்டில் தனது சபையினதும் தம்மைச் சார்ந்திருந்த சபைகளினதும் அத்திவாரத்தை உறுதிப்படுத்தி வேத சத்தியங்களில் வழி நடத்த 1689 விசுவாச அறிக்கையை மறுபடியும் வெளியிட்டார். இதற்கு எழுதிய முன்னுரையில் ஸ்பர்ஜன், "உங்கள் விசுவாசத்தைக் குறித்து வெட்கப்படாதீர்கள். சத்தியத்தின் காரணமாக நமக்கு ஒரு கொள்கைச் சின்னம் தேவைப்படுகிறது. மகத்துவமான நற்செய்தியின் நோக்கத்தை நிறைவேற்றத் துணைபுரிய, அதன் முக்கிய கோட்பாடுகளுக்கு இச்சிறுநூல் தெளிவான சாட்சியாக விளங்கும்" என்று எழுதினார். இது போதிக்கும் வேத சத்தியங்களை விசுவாசிக்காது தெளிந்த மனச்சாட்சியுடன் எவரும் சபையில் அங்கத்தவராக இருக்க முடியாது என்றும் சொன்னார். அதற்குப்பின் 19 ஆம் நூற்றாண்டில் பல தடவைகள் இது மறு வெளியீடு செய்யப்பட்டது.*

*திருச்சபை சீர்திருத்தத்திற்கு சீர்திருத்தக் கோட்பாடுகளின் அவசியத்தை உணர்ந்த சபைகள் இதை ஏற்றுப் பயன்படுத்தின. முன்னூறு வருடங்களுக்கு முன்னால் எழுதப்பட்டிருந்த போதும் இவ்விசுவாச அறிக்கை இன்றும் உலகெங்கும் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு சீர்திருத்த பாப்திஸ்து சபைகளின் விசுவாச அறிக்கையாக விளங்குகிறது.*

*வேத சத்தியங்களை முறையாகத் தொகுத்தளிக்கும் இவ்விசுவாச அறிக்கை வேதத்தின் அதிகாரத்தை தன்னில் கொண்டிருக்க வில்லை. இது வேதத்திற்கு அடிமை. வேதத்திற்கு மட்டுமே அடிபணிய வேண்டிய விசுவாசிகள் வேதசத்தியத்தில் மேலான அறிவை பெற்றுக்கொள்ளவும், திருச்சபைகள் வேதசத்தியங்களின் அடிப்படையில் இயங்கவும் இவ்விசுவாச அறிக்கை பயன்படும். நாம் விசுவாசிக்கும் சத்தியங்களை வெட்கப்படாமல் எடுத்துச் சொல்லவும், அவற்றைப் பாதுகாத்து வளர்க்கவும் இவ்விசுவாச அறிக்கை துணை செய்யும். இளைய சமுதாயத்திற்கு இது வழிகாட்டியாக அமைவதோடு, வேத ஆதாரங்களுடன் அவர்கள் தங்களுடைய விசுவாசத்திற்கான காரணத்தையும் எடுத்துக்கூற துணைபுரியும் என்று ஸ்பர்ஜன் வலியுறுத்தினார்.*

*இதுவரை ஆங்கிலத்தில் இருந்த இவ்விசுவாச அறிக்கை, தமிழ் விசுவாசிகளுக்கும் திருச்சபைகளுக்கும் பயன்படும்படியாக முதன் முதலாக தமிழில் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இப்போது திருத்தங்கள் செய்து மூன்றாம் பதிப்பாக சீர்திருத்த வெளியீடுகளின் மூலம் வெளியிடப்படுகிறது. சபைப் போதகர்கள் இதைப் படித்து வேத சத்தியங்களில் மேலான அறிவு பெற்று தம் மக்களுக்கு அவற்றைத் தெளிவாகப் போதிக்கவும், அச்சத்தியங்களின்படி சபையை வழி நடத்தவும் இது உதவும். தமிழ் மக்கள் மத்தியில் சீர்திருத்தக் கோட்பாடுகள் வளரவும், வேதசத்தியங்களின் அடிப்படையில் திருச்சபைகள் இயங்கவும் இவ்விசுவாச அறிக்கை பயன்பட கர்த்தர் ஆசீர்வதிக்கட்டும்.*

## விசுவாச அறிக்கை ஏன் அவசியம்?

1. *நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பதைத் தயக்கமில்லாமல் வெளிப்படையாக எடுத்துக்கூற விசுவாச அறிக்கை உதவுகிறது. சிலர்* No Creed, No Confession, Bible alone *என்று கூறி தாம் விசுவாசிப்பதை வெளிப்படையாக சொல்லத் தயங்குகிறார்கள். விசுவாச அறிக்கை மனிதனால் எழுதப் பட்டது என்று கூறி அதை வேதத்திற்கு விரோதமானதாக தவறாகக் கருதுகிறார்கள். ஆனால், விசுவாச அறிக்கை நமது நன்மைக்காக வேதசத்தியங்களை மட்டுமே தொகுத்துத் தந்து அவற்றை நாம் நாடறியப் பறைசாற்ற உதவுகிறது.*
2. *சபைப் போதகர்களும், சபை அங்கத்தவர்களும் வேதத்தை விட்டு விலகிப்போகாதபடித் தம்மைக் காத்துக்கொள்ள*

*இது உதவுகிறது. இவ்விசுவாச அறிக்கையை பயன்படுத்தும் சபைகளில் இதனை ஏற்றுக்கொள்ளாத போதகர்களுக்கு இடமில்லை, அங்கத்தவர்களுக்கும் இடமில்லை; "தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருக்கிற எந்த இராஜ்யமும் பாழாய்ப்போகும்" என்று இயேசு சொன்னார். ஆர்மீனியனிசப் போதனைகள், பெலேஜியனிசப் போதனைகள், கெரிஸ்மெட்டிக் போதனைகள் என்று எல்லாவற்றையும் விசுவாசிக்கும் போதகர்களையும் அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய ஒரு சபை எப்படி ஒரே சத்தியத்தில் கூடி ஜெபிக்கவோ, ஆராதிக்கவோ, ஊழியம் செய்யவோ முடியும்? ஆகவே, விசுவாச அறிக்கையை முறையாகப் பின்பற்றும் சபைகளில் கலப்படமான இறையியலுக்கு இடமிருக்காது.*

3. *ஒரு சபை தனது போதக ஊழியத்தை இதன் அடிப்படையில் ஆராய்ந்து தன்னையும், தனது போதகர்களையும் காத்துக் கொள்ள முடியும். போதகர்கள் (வேதத்தில்) உண்மையுள்ள மனிதர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் (2 தீமோத்தேயு 2:2) சொல்லுகிறார். அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைக் கொண்டவர்களாகவும், எதிர் பேசுகிறவர்களை கண்டனம் செய்ய வல்லவர்களாகவும் இருக்க வேண்டும் (தீத்து 1:9) என்றும் சொல்லுகிறார். வேதாகமக் கல்லூரிகள் இத்தகைய மனிதர்களை உருவாக்குவதை எதிர்பார்க்க முடியாத இந்நாட்களில் விசுவாச அறிக்கையைப் பயன்படுத்தி சபை தன் போதகர்கள் சத்தியத்தில் உண்மையுள்ளவர்களாகவும் அதை மட்டுமே போதிக்கிறவர்களாகவும் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள முடியும்.*

4. *போலிப் போதனைகள் சபையை அணுகும்போது அவற்றை வேதரீதியில் ஆராய்ந்து அவற்றில் இருந்து சபையைப் பாதுகாத்துக்கொள்ள விசுவாச அறிக்கை துணை செய்கிறது. சபையில் சத்தியத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்ற போது அவற்றைத் தவிர்த்துக்கொள்ளவும் விசுவாச அறிக்கை துணை செய்கிறது.*

5. *விசுவாச அறிக்கையைப் பயன்படுத்தி வேத சத்தியங்களை முறையாகப் போதித்து சபை மக்களை சத்தியத்தில் வளர்க்க முடியும். வினாவிடைப் போதனையும்* (Catechism) *இதே வகையில் உதவும்.*

6. *சபையில் ஒழுங்கை நிலைநாட்டி தேவையானபோது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விசுவாச அறிக்கை துணை செய்கிறது. சத்தியத்தை விட்டு விலகிப் போகிறவர்களை இனங்கண்டு அவர்களைத் திருத்தவும், சபையைப் பாதுகாக்கவும் உதவுகிறது.*

7. *சத்தியத்தின் அடிப்படையில் அமையாத சபைக் கூட்டும், ஐக்கியமும், ஆத்மீக வளர்ச்சிக்கு உதவாது. விசுவாச அறிக்கை நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பதை மற்றவர்கள் அறிந்துகொள்ளவும், அவற்றை விசுவாசிப்பவர்களோடு சேர்ந்து நாம் ஐக்கியத்தில் வரவும், வளரவும் துணைபுரியும்.*

8. *இறுதியாக, நமது சபைகளுக்கு வரலாற்று ரீதியிலான ஒரு தொடர்ச்சியை (Historical Continuity) விசுவாச அறிக்கை அளிக்கிறது. நாம் காளான்கள் போல இன்று முளைத்து நாளை அழியப்போகிறவர்கள் அல்ல. நமக்கு ஒரு வரலாறு இருக்கிறது என்ற ஒரு நம்பிக்கையையும் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு புத்துணர்ச்சியையும் விசுவாச அறிக்கை அளிக்கிறது. நமது சீர்திருத்தத் தந்தையரும், பியூரிட்டன் பெரியவர்களும் வேதம் வெளிப்படுத்தும் இச்சத்தியங்களையே நம்பிப் போதித்து சபை வளர்த்துள்ளார்கள். வளர்ச்சி கண்டார்கள் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து ஊக்கத்தோடு ஊழியம் செய்ய விசுவாச அறிக்கை உதவும். நமது சந்ததியினருக்கு நமது பிதாக்களின் விசுவாசத்தை விட்டுச் செல்லும் பாக்கியத்தை இது நமக்கு அளிக்கிறது.*

# 1
# பரிசுத்த வேதாகமம்

**1.** இரட்சிப்புக்கு இன்றியமையாத சகலவிதமான அறிவையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிவையும் அளிக்கக்கூடிய, தவறிழைக்காத நியதியாகவும் (கட்டளைவிதி), உறுதியானதாகவும், போதுமானதாகவும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே அமைந்துள்ளது. இயற்கையும், படைப்பின் கிரியைகளும் (பொது வெளிப்பாடு), மனிதன் எந்தவித சாக்குப்போக்கும் சொல்ல இடமளியாதபடி, தேவனுடைய ஞானம், வல்லமை, நற்குணம் ஆகியவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தினாலும், இரட்சிப்புக்கு இன்றியமையாத கடவுளைப்பற்றிய அறிவையும், அவரது சித்தத்தையும் வெளிப்படுத்த வல்லமையற்றவையாக உள்ளன. ஆகவே, தேவன் தமது திருச்சபைக்கு வெவ்வேறு காலங்களில் பல்வேறுவிதத்தில் தம்மையும், தமது சித்தத்தையும் வெளிப்படுத்தினார். அதுமட்டுமல்லாது, சத்தியத்தின் பாதுகாப்பிற்காகவும், பரப்புதலுக்காகவும், தீய மனிதர்கள், பிசாசு, உலகம் ஆகியவற்றின் தொல்லைகளின் மூலம் திருச்சபை பாதிப்புறாதபடி நிலைநிறுத்தப்பட்டு ஆறுதல் பெறவும், தம் சித்தத்தைக்குறித்தும், தம்மைக் குறித்துமான வெளிப்பாட்டை எழுத்துவடிவில் அருளத் திருவுளங் கொண்டார்.

*2 தீமோத்தேயு 3:15-17; ஏசாயா 8:20; லூக்கா 16:29,31; எபேசியர் 2:20; ரோமர் 1:19-21; 2:14-15; சங்கீதம் 19:1-3; எபிரெயர் 1:1; நீதிமொழிகள் 22:19-21; ரோமர் 15:4; 2 பேதுரு 1:19-20.*

**2.** பரிசுத்த வேதாகமம் அல்லது எழுத்து வடிவில் அமைந்த தேவனுடைய வார்த்தை, கீழ்வரும் பழைய, புதிய ஏற்பாடுகளை மட்டுமே கொண்டது.

**பழைய ஏற்பாடு:**

*ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 இராஜாக்கள், 2 இராஜாக்கள், 1 நாளாகமம், 2 நாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர், யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு, ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல், தானியேல், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா.*

**புதிய ஏற்பாடு:**

*மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலருடைய நடபடிகள், ரோமர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர், 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், எபிரெயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா, யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்.*

*மேல்வரும் புத்தகங்கள் அனைத்தும் தேவனுடைய ஏவுதலினால், நமது விசுவாசத்திற்கும் வாழ்க்கைக்கும் நியதிப் பிரமாணமாக இருக்கும்படியாக அளிக்கப்பட்டுள்ளன.*

*2 தீமோத்தேயு 3:16.*

**3.** *தள்ளுபடி புத்தகங்கள் (Apocrypha) என அழைக்கப்படுபவை தெய்வீக ஏவுதலால் அருளப்படாதவையால் பரிசுத்த வேதாகமத்தில் அவற்றிற்கு இடமில்லை. ஆகையால், அவை ஏனைய சாதாரண புத்தகங்களைப்போல் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர திருச்சபையில் அவற்றிற்கு எந்தவிதமான அதிகாரமுமில்லை.*

*லூக்கா 24:27,44; ரோமர் 3:2.*

**4.** *பரிசுத்த வேதாகமத்தின் அதிகாரம் எந்த ஒரு மனிதனிலோ அல்லது சபையின் சாட்சியிலோ தங்கியிராமல் அதன் ஆக்கியோனாகிய உண்மையுள்ள கடவுளை முழுமையாக சார்ந்துள்ளது. அது கடவுளின் திருவார்த்தையாக இருப்பதால் அதற்கு நாம் அடிபணிதல் வேண்டும்.*

*1 தெசலோனிக்கேயர் 2:13; 2 தீமோத்தேயு 3:16; 2 பேதுரு 1:19-21; 1 யோவான் 5:9.*

**5.** *திருச்சபையினுடைய சாட்சியினால் உந்தப்பட்டு நாம் பரிசுத்த வேதாகமத்தைப்பற்றிய ஓர் உயர்வான மரியாதைக்குரிய எண்ணத்தைக் கொண்டிருக்கலாம். அதன் உள்ளடக்கங்களின் தெய்வீகத்தன்மை, அதன் போதனைகளின் நற்பயன், அதன் மாண்புமிக்க தன்னியல்பு, ஆரம்பம் முதல் இறுதிவரை எல்லாப் பகுதிகளும் ஒன்றோடொன்று ஒத்துப்போகும் தன்மை, எல்லா வகையிலும் எல்லா மகிமையையும் தேவனுக்கே கொடுக்கும் அதன் மாட்சி, இரட்சிப்புக்குரிய ஒரே வழிமுறையைக்குறித்த அதன் முழுமையான வெளிப்படுத்தல், அத்தோடு, அதனுடைய இன்னும் அநேக உயர்ந்த தன்மைகளும், முழுமையான பூரணத்துவமும், அது தேவனுடைய பரிசுத்த வேதாகமம் தான் என்று நிரூபிக்கும் அளவற்ற சாட்சியங்களை நமக்கு அள்ளித் தருகின்றது. ஆயினும், தவறிழைக்க இயலாத* (Infallible) *திருமறையின் இத்தெய்வீக அதிகாரத்தைக் குறித்த முழு நம்பிக்கையையும் விசுவாசத்தையும், பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த வேதாகமத்தின் மூலம் நமது இருதயத்தில் ஏற்படுத்தும் சான்றினாலும், நம்மில் நடப்பிக்கின்ற செயலின் மூலமும் மட்டுமே அனுபவிக்க முடியும்.*

*யோவான் 16:13-14; 1 கொரிந்தியர் 2:10-12; 1 யோவான் 2:20,27.*

**6.** *தேவனுடைய மகிமைக்கும், மனிதனுடைய இரட்சிப்புக்கும், விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் அவசியமான தேவனுடைய எல்லாத் திட்டங்களும் பரிசுத்த வேதாகமத்தில் திட்டவட்டமாக (வெளிப்படையாக) அல்லது உள்ளடக்கமாக (இன்றியமையா நிலையில்,* Necessarily contained*) காணப்படுகின்றது. இவற்றோடு எக்காலத்திலும், ஆவியின் பெயரில் எந்தவித புதிய வெளிப்பாடுகளையோ அல்லது மனித மரபுசார்ந்த வழிமுறைகளையோ சேர்க்கக்கூடாது. (இன்றியமையா நிலையில் என்ற பதம் நேரிடையான கட்டளைகளாக இல்லாமல் பொதுவான வகையில் கொடுக்கப்பட்டுள்ள தேவ போதனைகளைக் குறிப்பதாகும். இத்தகைய போதனைகளை நாம் வேதப்பகுதிகளை ஆராய்ந்து அதில் காணப்படும் தெளிவானதும், எளிதில் நிலைநாட்டக் கூடியதுமான முடிவுகளைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.) ஆயினும், தேவனுடைய*

வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இத்தகைய போதனைகளில் சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு தேவ ஆவியானவரின் ஆன்மீக அறிவொளி அவசியமானதாகும்.

அதேவேளை, கடவுள் வழிபாடு மற்றும் சபை ஆட்சியமைப்பு தொடர்புடைய - பொதுவாக எல்லா மனித நடவடிக்கைகளிலும், அமைப்புக்களிலும் கவனிக்கக் கூடியதுமான - சில சந்தர்ப்பங்களை நாம் இயற்கையின் விதிகள், கிறிஸ்தவ விவேகம், வேதாகமத்தின் பொதுவான விதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தீர்மானித்து அவற்றை எக்காலத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். (உதாரணமாக வாரத்தின் முதல் நாளில் வழிபாட்டிற்காக சபைகூடிவர வேண்டும் என்றுதான் வேதம் சொல்கிறதே தவிர, எந்தெந்த நேரங்களில் கூடிவரவேண்டுமென்று கூறவில்லை. நாம் இயற்கையின் விதிகளைப் பயன்படுத்தி எல்லோருக்கும் வசதியான நேரத்தில் கூடிவர வேண்டும்.)

*2 தீமோத்தேயு 3:15-17; கலாத்தியர் 1:8-9; யோவான் 6:45; 1 கொரிந்தியர் 2:9-12; 11:13-14; 14:26,40.*

**7.** வேதாகமத்தின் உள்ளடக்கங்கள் அனைத்தும் சமமான தெளிவினைக் கொண்டிராதது மட்டுமன்றி, எல்லா மனிதர்களும் அதில் சமமான தெளிவும் பெற்றிருப்பதில்லை. ஆனாலும், மனிதன் அறிந்து, விசுவாசித்து, கீழ்ப்படிய வேண்டிய இரட்சிப்பிற்கு இன்றியமையாதவைகள் அனைத்தும், படித்த அல்லது படிக்காத மனிதர்கள், சாதாரண வழிமுறைகளைத் தகுந்த முறையில் பயன்படுத்திப் போதுமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில், வேதத்தின் ஒரு பகுதியில் அல்லது பிற பகுதிகளில், தெளிவாக முன்னுரைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. (அச்சாதாரண வழிமுறைகளாவன: பயபக்தியோடு கூடிய வேதவாசிப்பும், அதன் அருளுரையைக் கேட்டலும், கற்றுக்கொள்ளத்தக்க மனப்பான்மையும் ஜெபமுமாகும். அத்தோடு, விசுவாசிகளின் துணையுமாகும்).

*2 பேதுரு 3:16; சங்கீதம் 19:7; 119:130.*

**8.** எபிரெய மொழியில் பழைய ஏற்பாடும், கிரேக்க மொழியில் புதிய ஏற்பாடும் (அதாவது, மொழிபெயர்க்கப்படுவதற்கு முன்பிருந்த அவற்றின் மூலமொழிகளில்) நேரடியாக தேவனால் ஏவப்பட்ட நாள் முதல், அவரது தனிப்பட்ட கவனத்தாலும்,

*முன்னுணர்வாலும் பரிசுத்தமாக பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, அவை நம்பிக்கைக்குரியவையாதலால், சகலவித மத சம்பந்தமான விவாதத்திற்குரிய காரியங்களிலும், திருச்சபை, அவற்றின் போதனையையே தீர்வாகவும் இறுதியானதாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடவுளின் மக்கள் அனைவருக்கும் வேதத்தில் உரிமையும் ஆர்வமும் இருப்பதோடு, அவர்கள் அதை தேவபயத்தோடு படிக்கவும், ஆராயவும் வேண்டுமென கட்டளையிடப்பட்டிருக்கின்றது. ஆனால், எல்லோருக்கும் எபிரெய, கிரேக்க மொழிகள் தெரிந்திராததால், வேதமளிக்கும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும்படி பரிசுத்த வேதாகமம், எல்லா உலக மொழிகளிலும் துல்லியமாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்.*

*ரோமர் 3:2; ஏசாயா 8:20; அப்போஸ்தலர் 15:15; யோவான் 5:39; 1 கொரிந்தியர் 14:6,9,11-12,24,28; கொலோசெயர் 3:16.*

**9.** *வேதாகமத்தை வேதாகமத்தால்தான் விளக்க வேண்டும் என்பது பரிசுத்த வேதாகமத்தின் பொருள் விளக்கங்குறித்த தவறிழைக்க இயலாத (நம்பத் தகுந்த) ஒரு விதிமுறை. அதாவது, அதன் ஒரு பகுதியை ஏனைய பகுதியோடு ஒப்பிட்டு விளக்க வேண்டும். ஆகவே, வேதாகமத்தில் (ஒன்றேயன்றி பல்வேறானதல்ல) ஒரு பகுதியின் தெளிவான உட்கருத்தைப் பற்றிக் கேள்வி எழும் போது, அதைவிட மிகத் தெளிவாய்ப் பேசுகிற மற்றப் பகுதிகளைக் கொண்டே அதன் கருத்தை முடிவு செய்ய வேண்டும்.*

*2 பேதுரு 1:20-21; அப்போஸ்தலர் 15:15-16.*

**10.** *சமய சம்பந்தமான எல்லா விவாதத்திற்குரிய காரியங்களும் வேதத்தால் மட்டுமே தீர்க்கப்பட வேண்டும். அதேவிதமாக, சமய சீரமைப்புக் குழுக்களின் எல்லாக் கட்டளைகளும், பூர்வகால எழுத்தாளர்களின் எண்ணங்களும், தனிப்பட்ட முறையில் அல்லது குழுவாக மனிதர்கள் கொண்டிருக்கும் தத்துவங்களும் பரிசுத்த ஆவியானவரால் நமக்கு அளிக்கப்பட்டுள்ள வேதாகமத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேயே, ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கப்படவோ வேண்டும். ஆவியானவரால் அளிக்கப்பட்டுள்ள வேதாகமத்திலேயே நமது விசுவாசம் அமைதி காண்பதால் அதன் தீர்ப்பிலேயே நாம் திருப்தி அடைய வேண்டும். (உலகப்பிரகாரமான மனிதன் தன் சுய எண்ணங்களிலும், வாதங்களிலுமே நம்பிக்கை வைத்திருக்கிறான்.*

*ஆனால், விசுவாசியினுடைய விசுவாசம் வேதாகமத்தின் தீர்ப்பிலேயே முழு நம்பிக்கை வைத்திருக்கின்றது.)*

*மத்தேயு 22:29,31-32; எபேசியர் 2:20; அப்போஸ்தலர் 28:23.*

# 2
# கடவுளும் பரிசுத்த திரித்துவமும்

1. *கடவுள் ஒருவராகவும் ஜீவனுள்ள மெய்யான தேவனாகவும் இருக்கிறார். அவர் தன்னியல்பானவராயும் (அவர் தன்னுடைய இயல்புக்குத் தேவையான எல்லா வல்லமையையும் தன்னிடத்தில் இருந்தே பெற்றுக்கொள்வதோடு, புறத்திலிருந்து எதுவுமே தேவையில்லாதவராகவும் இருக்கிறார்), தன்னியல்பிலும் முழுநிறைவிலும் எல்லையற்றவராகவும் இருக்கிறார். அவரால் மட்டுமேயன்றி வேறொருவராலும் அவரது உள்ளியல்பைப் புரிந்து, அறிந்துகொள்ள முடியாது. அவர் தூய ஆவியானவரும், கண்ணிற்கு புலப்படாத உருவமற்றவரும், மாறுதலுக்குரிய மனித உணர்ச்சிகளும் (கோபம், வெறுப்பு, பேராசை, பாலியல், அன்பு போன்ற மனிதனை ஆளும் உணர்ச்சிகள்) அற்றவர்; அவர் ஒருவரே என்றும் உள்ளவராக (மற்றெல்லோரும் அவரிடத்தில் இருந்தே ஜீவனைப் பெற்றுக்கொள்கிறார்கள்) மனிதன் அடையமுடியாத ஒளியின் மத்தியில் வாழ்கிறார்; அவர் மாறாதவர்; அளக்க முடியாதவர்; என்றுமுள்ளவர்; புரிந்துகொள்ள முடியாதவர் (மனிதனுடைய சிந்தனைகளுக்கும், அறிவிற்கும் அப்பாற்பட்டவர்); எல்லாம் வல்லவர்; எல்லாவிதத்திலும் எல்லையற்றவர்; மிகப்பரிசுத்தர்; மிகுந்த ஞானமுள்ளவர்; பெருஞ் சுதந்திரம் உள்ளவர்; முழுமையானவர்; எல்லாக் காரியங்களையும் தனது மாறாத பெருநீதியுள்ள சித்தத்தின் திட்டப்படி, தன் சுயமகிமைக்காகவே செய்பவர்; அவர் பேரன்பும், பேரருளும், பெருங்கருணையும், சகிப்புத்தன்மையும், நற்குணமும், உண்மையும் உள்ளவர்; அநீதியையும், ஒழுங்குமீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவர்; ஊக்கத்தோடு தம்மை நாடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர்; அதேநேரத்தில், அவர் குற்றப்பழிகளையும், குற்றவாளிகளையும் எவ்விதத்திலும் விட்டுவைக்காது, எல்லாப்*

*பாவங்களையும் வெறுத்தொதுக்கி, பெருநீதியோடும் பயங்கரத்தோடும் நியாயந்தீர்ப்பவர்.*

*ஆதியாகமம் 17:1; யாத்திராகமம் 3:14; 34:6,7; உபாகமம் 4:15,16; 6:4; 1 இராஜாக்கள் 8:27; நெகேமியா 9:32,33; சங்கீதம் 5:5,6; 90:2; 115:3; நீதிமொழிகள் 16:4; ஏசாயா 6:3; 46:10; 48:12; எரேமியா 10:10; 23:23,24; நாகூம் 1:2,3; மல்கியா 3:6; யோவான் 4:24; ரோமர் 11:36; 1 கொரிந்தியர் 8:4,6; 1 தீமோத்தேயு 1:17; எபிரெயர் 11:6.*

**2.** *கடவுள் ஜீவன், மகிமை, நற்குணம், பேரின்பம் அனைத்தையும் தன்னில் கொண்டும், தன்னிலிருந்தே பெற்றும், தனக்குள்ளும், தனக்காகவும், தன்னிறைவுடையவராய் ஒரு தனித்தன்மையைக் கொண்டு, தான் படைத்த படைப்புயிர்களிடமிருந்து எவ்வித மகிமையையும் பெறாது, அவற்றின் தேவையற்றுமிருக்கிறார். இதற்கு மாறாக, தன் சுயமகிமையைக் கடவுளே அவர்களுக்குள்ளும், அவர்கள் மூலமும், அவர்களிடத்தும், அவர்கள் மேலும் வெளிப்படுத்திக் காட்டுகிறார். உயிருள்ளவை அனைத்தும், தங்கள் நிலைபேற்றிற்கு அவரையே காரணகர்த்தராகக் கொண்டு, அவர் மூலமும், அவராலும், அவருக்காகவுமே வாழ்கின்றன. எல்லாப் படைப்புயிர்கள் மூலமாகவும், அவற்றிற்காகவும், அவற்றிற்குள்ளும் தான் விரும்பியதைச் செய்யும் முழுமையான இறை ஆண்மையுள்ள அதிகாரத்தை அவர் கொண்டிருக்கிறார். அவருக்கு முன்பாக அனைத்தும் திறந்தபடி வெளிப்படையாக இருக்கின்றன. அவரது அறிவு, படைப்புயிர்களில் தங்கியிராது எல்லையற்றதாகவும், தவறாநிலையுடையதாகவுமுள்ளது (அதாவது, அவர் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகளை அறிந்துகொள்வதற்கு, தேவதூதர்களிலோ, மனிதரிலோ தங்கியிருப்பதில்லை). ஆகவே, எந்த நிகழ்ச்சியுமே அவரைப் பொறுத்தவரையில் தற்செயலானதோ, நிச்சயமற்றதோ அல்ல. அவர், தன் திட்டங்கள், செயல்கள், கட்டளைகளனைத்திலும் மகா பரிசுத்தர். தேவதூதர்களும், மனிதர்களும், தம்மைப் படைத்தவருக்கு அளிக்கவேண்டிய சகலவிதமான வழிபாட்டையும், ஊழியத்தையும், கீழ்ப்படிவையும், அவர் கேட்கச் சித்தமாயிருக்கின்ற எதையும் அவருக்குத் தரவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.*

*யோபு 22:2,3; சங்கீதம் 119:68; 145:17; 148:13; எசேக்கியேல் 11:5; தானியேல் 4:25,34,35; யோவான் 5:26; அப்போஸ்தலர் 15:18; ரோமர் 11:34-36; எபிரெயர் 4:13; வெளிப்படுத்தல் 5:12-14.*

**3.** *அவரது எல்லையற்ற தெய்வீக உள்ளியல்பில் பிதா, வார்த்தை அல்லது குமாரன், ஆவியானவர் மூவரும் ஒருங்கிணைக்கப் பட்டிருக்கிறார்கள். உள்ளியல்பு (சாரம்), வல்லமை, நித்தியம் ஆகியவற்றில் அவர்கள் அனைவரும் ஒருவரே. அதேவேளை ஒவ்வொருவரும் பிரிக்கப்படாத முழுமையான தெய்வீகத்தையும் உடையவர்களாய் இருக்கிறார்கள். பிதாவானவர் வேறெந்த உயிரினத்தில் இருந்தும் பெறப்படவில்லை; அவர் எந்தவொரு உயிரினத்தாலும் தோற்றுவிக்கப்படாததோடு, எந்தவொரு உயிரினத்திலிருந்தும் தோற்றுவிக்கப்படவுமில்லை. குமாரன் தந்தையிடமிருந்து நித்தியமாய் தோன்றினவராய் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர், தந்தையிடமிருந்தும், குமாரனிடமிருந்தும் நித்தியமாய் வெளிப்படுகிறவராய் இருக்கிறார். தொடக்கமற்ற மூவருமே எல்லையற்ற ஒரே கடவுளாய் இருப்பதால் அவர்களுடைய இயற்கைத் தன்மையையோ, உள்ளியல்பையோ பிரித்துப் பார்க்கக்கூடாது. ஆனாலும் அவர்களுக்கிடையிலான தனிப்பட்ட உறவைக்குறித்தும் (அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் குடும்ப உறவு), அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பல்வகையான செயல்கள் குறித்தும் வேதத்தில் வேறுபடுத்திக்காட்டப்பட்டுள்ளது. கடவுளோடு நமக்குள்ள எல்லா ஐக்கியத்திற்கும், அவரில் நாம் தங்கியிருப்பதால் நாம் பெறும் ஆறுதலுக்கும் திரித்துவத்தைக் குறித்த இந்தக் கோட்பாடே அடிப்படையாக அமைகின்றது.*

*யாத்திராகமம் 3:14; மத்தேயு 28:19; யோவான் 1:14,18; 14:11; 15:26; 1 கொரிந்தியர் 8:6; 2 கொரிந்தியர் 13:14; கலாத்தியர் 4:6; 1 யோவான் 5:7.*

# 3
# கடவுளின் ஆணை

1. *கடவுள் தனது பேரறிவும் பரிசுத்தமும் கொண்ட சுயசித்தத்தின் ஆலோசனையினால் இனி நிகழப்போகிற அனைத்துக் காரியங்களையும் சுதந்திரமாகவும், மாறாத் தன்மையுடனும் நித்தியத்திலிருந்து தாமே தமக்குள்ளாகத் தீர்மானித்திருக்கிறார் (அதாவது, எவற்றாலும் உந்தப்படாது*

*அவர் தன் திட்டங்களை செயற்படுத்துவது மட்டுமன்றி அணுவளவும் மாற்றம் இன்றி அவரது நோக்கங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படுகின்றன). அதேவேளை, அவர் பாவத்தின் காரணகர்த்தரோ அல்லது அதைச் செய்வதில் எவரோடும் எந்தக் கூட்டும் உள்ளவரோ (அதற்குப் பொறுப்பானவரோ) அல்ல. அவரது ஆணையின் காரணமாக படைப்புயிர்களின் சித்தத்திற்கு ஊறேற்படாமலும், துணைப்பொருட்கள் அல்லது இடைக்காரணங்களின் சுதந்திரமான செயற்பாடுகள் நீக்கப்படாமலும் (துணைக்காரணங்கள் இடையூராக வராமல்) அனைத்தும் அவரால் நிலைநாட்டப்படுகின்றன. இவை எல்லாவற்றிலும், அனைத்தின் மீதும் ஆணை செலுத்தி அமைவுறச் செய்யும் கடவுளுடைய ஞானமும், தனது ஆணையை நிறைவேற்றும் அவரது வல்லமையும், நேர்மையும் வெளிப்படுகின்றது (கடவுளின் நேர்மை என்பது, அவருடைய பரிசுத்த குணாதிசயங்களுக்கும் வார்த்தைக்கும் ஏற்றபடி நடக்கும் அவரது நிலைதடுமாறாத் தன்மையைக் குறிக்கும்).*

*எண்ணாகமம் 23:19; ஏசாயா 46:10; யோவான் 19:11; அப்போஸ்தலர் 4:27,28; ரோமர் 9:15,18; எபேசியர் 1:3-5,11; எபிரெயர் 6:17; யாக்கோபு 1:13; 1 யோவான் 1:5.*

**2.** *அனைத்து சந்தர்ப்பங்களிலும் நிகழக்கூடிய அனைத்தையும் கடவுள் அறிந்திருந்தபோதும், எதிர்காலத்தில் அவற்றை அவர் முன்னறிந்திருந்ததனாலோ அல்லது சில சூழ்நிலைகளின் கீழ் அவை எவ்வகையிலாவது நடைபெறும் என்பதாலோ அவர் எதையும் ஆணையிடவில்லை.*

*அப்போஸ்தலர் 15:18; ரோமர் 9:11,13,16,18.*

**3.** *கடவுளின் ஆணையின் மூலமாக அவரது மகிமை வெளிப்படும்படியாகவும், அவரது மேன்மை பொருந்திய கிருபை வெளிப்பட்டு துதிபெறவும், சில மனிதர்களும், தேவதூதர்களும் இயேசு கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவனை அடையும்படி முன்குறிக்கப்பட்டுள்ளார்கள். ஏனையோர் அவரது மேன்மையான நீதி வெளிப்பட்டு துதிபெறும்படியாக தங்கள் பாவத்தில் தொடர்ந்திருந்து நியாயமான கண்டனத்தைப் பெறும்படியாக விடப்பட்டுள்ளார்கள்.*

*மத்தேயு 25:34; ரோமர் 9:22,23; எபேசியர் 1:5,6; 1 தீமோத்தேயு 5:21; யூதா 4.*

**4.** இவ்வாறாக, முன்குறிக்கப்பட்ட தேவதூதர்களும் மனிதர்களும் தனித்துவத்தோடும் மாறாநிலையிலும் நியமிக்கப்பட்டிருப்பதோடு அவர்களின் தொகை நிச்சயிக்கப்பட்டதாகவும் வரையறுக்கப்பட்டதாகவும் இருப்பதால் அவை எவ்விதத்திலும் அதிகரிக்கப்படவோ குறைக்கப்படவோ மாட்டாது.

*2 தீமோத்தேயு 2:19; யோவான் 13:18.*

**5.** மனிதகுலத்திலிருந்து முன்குறிக்கப்பட்டவர்கள், கடவுளின் நிலைபேறுடைய மாறாத செயல், நோக்கம், இரகசியத் திட்டம், திருவுளப்பிரியம் ஆகியவற்றோடு பொருந்தி உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். படைப்புயிர்களில் காணப்படும் எதுவுமே ஒரு காரணமாகவோ, கட்டுப்பாடாகவோ அமைந்து, அவற்றால் உந்தப்படாது, எக்காலத்திலுமுள்ள மகிமைக்காக, கடவுள் தனது சுதந்திரமான கிருபையினாலும் அன்பினாலும் அவர்களை இயேசு கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டார்.

*ரோமர் 8:30; 9:13,16; எபேசியர் 1:4,9,11; 2:5,12; 1 தெசலோ 5:9; 2 தீமோத்தேயு 1:9.*

**6.** கடவுள், தெரிந்தெடுக்கப்பட்டவர்களை தனது மகிமைக்காக நியமித்ததோடு மட்டுமல்லாது, நித்தியமும், பூரணசுதந்திரமும் உடைய தனது சித்தத்தினால் அதற்கான எல்லா வழிவகைகளையும் முன்குறித்துள்ளார். அதேவேளை, தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ஆதாமில் வீழ்ச்சியுற்றதனால், கிறிஸ்துவினால் மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியினுடைய நேர்பயனுடைய அழைப்பினால் விசுவாசத்திற்காக கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்டும், நீதிமான்களாக்கப்பட்டும், தத்தெடுக்கப்பட்டும், பரிசுத்தமாக்கப்பட்டும், விசுவாசத்தினால் இரட்சிப்பிற்காக அவரது வல்லமையினால் காக்கப்படுகிறார்கள். தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே கிறிஸ்துவினால் மீட்கப்பட்டும், நேர்பயனுடைய அழைப்பினால் அழைக்கப்பட்டும், நீதிமான்களாக்கப்பட்டும், தத்தெடுக்கப்பட்டும், பரிசுத்தமாக்கப்பட்டும் இரட்சிக்கப்படுகிறார்கள்.

*யோவான் 6:64; 10:26; 17:9; ரோமர் 8:30; 1 தெசலோனிக்கேயர் 5:9,10; 2 தெசலோனிக்கேயர் 2:13; 1 பேதுரு 1:2,5.*

7. *இந்த மறைபொருளுடைய முன்குறித்தல் கோட்பாடானது, கடவுளுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது சித்தத்தில் அக்கறை கொண்டு அவற்றிற்கு கீழ்ப்படியும் மனிதர்கள், நிச்சயமான நேர்பயனுள்ள அழைப்பின்மூலம் தங்களுடைய நித்திய தெரிந்துகொள்ளுதலில் உறுதிபெறும்படியாக விசேஷமான விவேகத்தோடும் கவனத்தோடும் கையாளப்பட வேண்டும். ஆகவே, இந்தக் கோட்பாடு உண்மையோடு நற்செய்திக்கு அடிபணியும் அனைவரும் கடவுளைப் போற்றவும் மதிக்கவும், வியந்து பாராட்டவும் காரணமாகவும், தாழ்மையுணர்வு, ஊக்கம், அளவற்ற ஆறுதல் என்பவற்றை அளிப்பதற்குக் காரணமாகவும் இருக்க வேண்டும்.*

*லூக்கா 10:20; ரோமர் 11:5,6,20,33; எபேசியர் 1:6; 1 தெசலோ 1:4,5; 2 பேதுரு 1:10.*

# 4
# கடவுளின் படைப்பு

1. *ஆதியில் கடவுளாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோர் தம்முடைய மகிமையுள்ள நித்திய வல்லமை, ஞானம், நற்குணம் ஆகியவற்றின் வெளிப்பாட்டிற்காக ஆறு நாட்களில் உலகத்தையும், காணக்கூடியதும், காணமுடியாததுமான அதிலுள்ள அனைத்தையும் படைக்கத் திருவுளங்கொண்டார். அவையனைத்தும் மிக நல்லவையாக இருந்தன.*

*ஆதியாகமம் 1:31; யோபு 26:13; யோவான் 1:2,3; ரோமர் 1:20; கொலோசெயர் 1:16; எபிரெயர் 1:2.*

2. *கடவுள் மற்ற எல்லா படைப்புயிர்களையும் படைத்த பின்பு, அறிவுள்ளதும் அழியாததுமான ஆன்மாக்களோடு, ஆணும் பெண்ணுமாக மனித இனத்தை அவருக்காக வாழவேண்டிய வாழ்க்கையைக் கொடுத்துப் படைத்தார். அவர்கள் கடவுளுடைய சாயலில் படைக்கப்பட்டு, அறிவையும், நேர்மையையும், மெய்யான பரிசுத்தத்தையும் கொண்டு, தங்களுடைய இருதயத்திலே எழுதப்பட்டிருக்கும் கடவுளுடைய நியாயப்பிரமாணத்தை*

*நிறைவேற்றும் வல்லமையுடையவர்களாய் இருந்தார்கள். அதேவேளை, மாறும் தன்மையுள்ள தங்களுடைய சுயசித்தத்தின் முழுச்சுதந்திரத்தோடு (கட்டுப்பாட்டை மீறும் சுதந்திரம்) பாவம் செய்யக்கூடிய சாத்தியத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.*

*ஆதியாகமம் 1:27; பிரசங்கி 7:29; ஆதியாகமம் 1:26; ரோமர் 2:14,15; ஆதியாகமம் 3:6.*

3. *இருதயத்திலே எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாமல், நன்மை தீமை அறியக்கூடிய மரத்திலிருந்து எதையும் உணவாகக் கொள்ளக் கூடாது எனவும் அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. இக்கட்டளையைக் கடைப்பிடித்தவரை அவர்கள் கடவுளோடு ஆனந்தமாக ஐக்கியத்தை அனுபவித்ததுடன் எல்லாப் படைப்புயிர்கள் மீதும் தன்னாதிக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.*

*ஆதியாகமம் 2:17; 1:26,28.*

# 5
# தெய்வீக பராமரிப்பு

1. *அனைத்தையும் படைத்த நல்லவராகிய கடவுள், தமது அளவற்ற வல்லமையாலும், ஞானத்தாலும் மிகுந்த விவேகமுள்ள தமது பரிசுத்த பராமரிப்பினாலும் பெரிதானதிலிருந்து சிறியதான எல்லாப் படைப்புயிர்களையும், பொருட்களையும், தன்னுடைய படைப்பின் நோக்கத்தின் நிறைவேற்றுதலுக்காகத் தாங்கி, வழிகாட்டி ஆண்டு வருகிறார். தவறாநிலையுடைய முன்னறிவாலும் தமது சுயசித்தத்தின் தன்னுரிமையுள்ள மாறாத்திட்டத்தின் மூலமும், மகிமையுள்ள தமது ஞானம், வல்லமை, நீதி, எல்லையற்ற நற்குணம், இரக்கம் ஆகியவற்றின் துதிக்காகவும் கடவுள் அனைத்தையும் ஆண்டு வருகிறார்.*

*யோபு 38:11; சங்கீதம் 135:6; ஏசாயா 46:10,11; மத்தேயு 10:29-31; எபேசியர் 1:12; எபிரெயர் 1:3.*

**2.** *அனைத்திற்கும் காரணகர்த்தாவாகிய கடவுளுடைய முன்னறிவின் மூலமும், ஆணையின் மூலமும் எல்லாக் காரியங்களும் மாறாத்தன்மையுடனும், தவறாநிலையிலும் நேரிட்டபோதும் எதுவுமே எவருக்கும் தற்செயலாகவோ அல்லது அவரது பராமரிப்புக்கு (தெய்வ செயல்) அப்பாற்பட்டோ நிகழ்வதில்லை. அதேவேளை, கடவுள் இடைக்காரணங்களின் தன்மையின்படி தமது பராமரிப்பின் மூலம் தேவைக்கேற்பவும், சுதந்திரமாகவும், எதிர்பாராவேளைகளிலும் சம்பவங்கள் நிகழ உத்தரவிடுகிறார் (இயற்கையின் விதிகள் போன்ற துணைக்காரணங்களின் நடவடிக்கைகள் அல்லது மனிதனின் சுதந்திரமான நடவடிக்கைகள் அல்லது காரண காரியம் என்ற விதி போன்றவற்றின் மூலம் சம்பவங்கள் நிகழ அவற்றை ஒழுங்கு படுத்தி அனுமதியளிக்கிறார்). இத்தகைய வழிமுறைகளைப் பயன்படுத்தி அவற்றின் மூலமாக கடவுள் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்.*

*ஆதியாகமம் 8:22; நீதிமொழிகள் 16:33; அப்போஸ்தலர் 2:23.*

**3.** *சாதாரணமாக தனது பராமரிப்பில் கடவுள் பல சாதனங்களைப் பயன்படுத்திக்கொள்கிறார். அவற்றின் துணை யில்லாமல் அவரால் தன்னுரிமையோடு இயங்க முடியும். அவரால் சுயவிருப்பப்படி அச்சாதனங்களுக்கு வழமைக்குமாறாக பயன்திறத்தை அளிக்கவும் அல்லது அவற்றிற்கு எதிர்மறையாக செயல்படவும் முடியும்.*

*ஏசாயா 55:10,11; தானியேல் 3:27; ஓசியா 1:7; அப்போஸ்தலர் 27:31,44; ரோமர் 4:19-21.*

**4.** *கடவுளின் வல்லமையும், கண்டு அறியமுடியாத ஞானமும், எல்லையற்ற நன்மையும் எல்லையற்றதும், அனைத்தையும் உள்ளடக்கியதாயும் இருப்பதால் அவருடைய இறை ஆண்மையுடைய நோக்கங்களின்படி முதல் மனிதன் பாவத்தில் விழுந்தமையும், ஏனைய தேவதூதர்களும், மனிதர்களும் பாவத்தில் வீழ்ந்த செயல்களும் நிகழ்ந்தன. கடவுள் வெறுமனே இவற்றின் நிகழ்வுகளுக்கு அனுமதிகொடாமல், பலவிதங்களில் அவர் பாவத்தை வல்லமையோடும் ஞானத்தோடும் கட்டுப்படுத்தியும், கட்டளையிட்டும், அதிகாரம் செலுத்தியும் தனது பரிசுத்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்கிறார். இருப்பினும் இந்நிகழ்வுகளின் பாவம் தேவதூதர்களிடமிருந்தும்,*

*மனிதர்களிடமிருந்தும் தோன்றினவையே அல்லாமல் மிகப்பரிசுத்தமும், நீதியும் கொண்ட கடவுளிடம் இருந்து தோன்றவில்லை. அவர் பாவத்தின் காரணகர்த்தரோ அல்லது அதை அனுமதிப்பவரோ அல்ல.*

*ஆதியாகமம் 50:20; 2 சாமுவேல் 24:1; 2 இராஜாக்கள் 19:28; 1 நாளாகமம் 21:1; சங்கீதம் 50:21; 76:10; ஏசாயா 10:6,7,12; ரோமர் 11:32-34; 1 யோவான் 2:16.*

5. *மகா ஞானமும், நீதியும், கருணையுமுள்ள கடவுள் தன்னுடைய மக்களை அடிக்கடி பலவிதமான சோதனைகளுக்குள்ளாகப் போகும்படியும், அவர்கள் தங்களுடைய சொந்த இருதயத்தின் பாவத்தை அறிந்துகொள்ளவும் அனுமதிக்கிறார். அவர்கள் செய்த பாவங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதற்காகவும், அவர்களுடைய இருதயங்களில் காணப்படும் பாவத்தின் வல்லமையையும், கபடத்தையும் வெளிப்படுத்தி தாழ்மையைப் படிப்பிப்பதற்காகவும் இதை அவர் செய்கிறார். எல்லா சமயங்களிலும் எப்போதும் அவர்கள் கடவுளில் தங்கியிருக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி, எதிர்காலத்தில் பாவத்தில் இருந்து அவர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டே அவர் இவற்றைச் செய்கிறார். இவ்விதமாகவும், வேறு பலவிதங்களிலும் அவருடைய நீதியுள்ள பரிசுத்த நோக்கங்கள் நிறைவுபெறுகின்றன. அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் நிகழும் அனைத்தும் அவருடைய தீர்மானத்தின்படி அவருடைய மகிமைக்காகவும், அவர்களுடைய நன்மைக்காகவுமே நிகழ்கின்றன.*

*2 நாளாகமம் 32:25,26,31; ரோமர் 8:28; 2 கொரிந்தியர் 12:7-9.*

6. *நீதியுள்ள நீதிபதியாகிய கடவுள் கேடான, பரிசுத்தமற்ற மனிதர்களை நியாயந்தீர்க்கிறார். அவர்களுடைய பாவத்தினால் அவர்களுடைய இருதயத்தை இருளடையச் செய்து கடினப்படுத்துகிறார். அவர்களுடைய மனத்திற்கு அறிவொளி தந்து, இருதயத்தில் கிரியை செய்திருக்கக்கூடிய கிருபையை அவர்கள் அடையமுடியாதபடி தடுத்துக்கொள்வதோடு, வேறு சிலருக்கு அவர் கொடுத்திருந்த வரங்களையும் திரும்ப எடுத்துக்கொள்கிறார். அவர்கள் தங்களுடைய கேடான இருதயத்தின் பாவத்தினால் பாவ சந்தர்ப்பங்களை நாடிப் பயன்படுத்திக்கொள்ளும்படியான சந்தர்ப்பங்களிலும் கடவுள்*

*அவர்களை விடுகிறார். வேறுவிதத்தில் கூறப்போனால், அவர்களில் காணப்படும் உள்ளார்ந்த பாவத்தின் சீரழிவுகளுக்கும், உலகத்தின் சோதனைகளுக்கும், சாத்தானின் வல்லமைக்கும் அவர்களைக் கைவிட்டுவிடுகிறார். இதன் காரணமாக ஏனையோருடைய இருதயங்களை மென்மையாக்கக் கடவுள் பயன்படுத்தும் அதே சாதனங்களை அவர்கள் தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.*

*யாத்திராகமம் 8:15,32; உபாகமம் 2:30; 29:4; 2 இராஜாக்கள் 8:12,13; சங்கீதம் 81:11,12; ஏசாயா 6:9,10; மத்தேயு 13:12; ரோமர் 1:24-26,28; 11:7,8; 2 தெசலோனிக்கேயர் 2:10-12; 1 பேதுரு 2:7,8.*

7. *கடவுளின் பொதுவான பராமரிப்பு எல்லாப் படைப்புயிர்களையும் அடைகின்றது. ஆனால், மிகச் சிறப்பான விதத்தில் அது அவருடைய திருச்சபையின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. திருச்சபையின் நலனுக்காக அனைத்தும் தேவ பராமரிப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.*

*ஏசாயா 43:3-5; ஆமோஸ் 9:8,9; 1 தீமோத்தேயு 4:10.*

# 6
# மனிதனின் வீழ்ச்சியும் பாவமும், அதற்குரிய தண்டனையும்

1. *மனிதனை, நேர்மையானவனாகவும் பூரணமானவனாகவும் கடவுள் படைத்து, தனக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே நல்வாழ்வு என்றும், மீறினால் மரணம் நிச்சயம் என்றும் போதிக்கும் நீதிச்சட்டத்தை அவனுக்குத் தந்தபோதும், அந்நிலைமையில் அவன் அதிக நாட்கள் வாழவில்லை. சாத்தான் பாம்பின் சூழ்ச்சித்திறத்தின் மூலம் ஏவாளைத் தன்வயப்படுத்தி, அவள் மூலம் ஆதாமையும் தன் வழியில் செல்லத் தூண்டினான். ஆதாமோ, எவ்வித புறத்தூண்டுதலுமின்றி தன்னிச்சையாக விலக்கிவைக்கப்பட்ட கனியைப் புசித்ததன் மூலம், படைப்பின்*

*சட்டத்தையும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையையும் மீறி நடந்தான். கடவுள் விவேகமும், பரிசுத்தமும் உடைய தனது திட்டத்தினால் இச்செயலைத் தன்னுடைய சுயமகிமைக்கென்றே அனுமதிக்கத் திருவுளங்கொண்டார்.*

*ஆதியாகமம் 2:16-17; 3:12-13; 2 கொரிந்தியர் 11:3.*

**2.** *நமது முதல் பெற்றோர் இப்பாவத்தின்மூலம் தங்களுடைய நேர்மையையும், கடவுளோடிருந்த ஐக்கியத்தையும் இழந்தபோது, நாமும் அவர்களுடன் இருந்தோம். (அதாவது அவர்கள் செய்த பாவம் நம்மையும் உள்ளடக்கியதால், ஓரினமாக நாமும் அவர்களோடு பாவத்தில் வீழ்ந்தோம்). ஆகவே, இதன் மூலம், மரணம் எல்லோருக்கும் சம்பவித்தது, எல்லோரும் பாவத்தில் மரித்து, தங்களுடைய ஆவி, சரீரம் ஆகியவற்றின் அனைத்துப் பகுதிகளிலும் முழுமையாகக் கறைபடிந்து காணப்படு கிறார்கள்.*

*ரோமர் 3:23; 5:12-21; தீத்து 1:15; ஆதியாகமம் 6:5; எரேமியா 17:9; ரோமர் 3:10-19.*

**3.** *கடவுளின் நியமனத்தால், முதல் மனித ஜோடியே எல்லா மனித இனத்திற்கும் ஆதாரமாகவும், அதன் பிரதிநிதிகளாகவும் இருந்தார்கள். நமது முதல் பெற்றோரின் பாவத்தின் குற்றப்பழியும், கறைபடிந்த இயல்பும், பிறப்பின் மூலமாக அவர்களுடைய அனைத்து வழித்தோன்றல்களின் மீதும் சாட்டப்பட்டது. ஆகவே, ஆதாம், ஏவாளினுடைய வழித்தோன்றல்கள், கருவிலேயே பாவத்தில் உருவாகி, இயற்கையாகவே (கடவுளின்) கோபாக்கினையின் குழந்தைகளாய், பாவத்தின் ஊழியர்களாயும், மரணத்திற்குட்பட்டவர்களாயும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து விடுவித்தாலன்றி மீட்படைய இயலாமல், ஆவிக்குரியதும், இவ்வுலகிற்குரியதும், எல்லையற்றதுமான பல்வேறு துன்பங்களுக்கும் உட்பட்டு வருகிறார்கள்.*

*ரோமர் 5:12-19; 1 கொரி 15:21,22,45,49; சங் 51:5; யோபு 14:4; எபேசியர் 2:3; ரோமர் 6:20; எபிரெயர் 2:14-15; 1 தெசலோ 1:10.*

**4.** *நம்மனைவரையும் எவ்வித நன்மையும் செய்ய முற்றிலும் இயலாதவர்களாயும், ஆற்றலற்றவர்களாயும், எல்லாவித நன்மைக்கும் எதிரானவர்களாயும், எல்லாவிதமான கேட்டையும் செய்ய முழுமையான நாட்டங்கொண்டவர்களாயும்*

*மாற்றியிருக்கும் இம் மூலபாவத்திலிருந்தே எல்லா மீறுதல்களும் தோன்றி வெளிவருகின்றன.*

*யாக்கோபு 1:14-15; மத்தேயு 15:19; ரோமர் 8:7; கொலோ 1:21.*

**5.** *இவ்வுலக வாழ்க்கையில் பாவத்தினால் கறைபடிந்த மனித இயல்பு (கிறிஸ்துவுக்குள்) மறுபடியும் பிறந்தவர்களில் நிலைத்திருக்கின்றது. (மனிதனின்) இக்கறைபடிந்த இயல்பு (கிறிஸ்துவுக்குள்) மன்னிக்கப்பட்டும், பெலனற்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டும் இருந்தபோதும், அதனுடைய அனைத்து இயங்கும் ஆற்றல்களும் மெய்யாகவும், முழுமையாகவும் பாவத்தன்மையுடையவை.*

*ரோமர் 7:18,23; பிரசங்கி 7:20; 1 யோவான் 1:8; கலாத்தியர் 5:17.*

# 7
# கடவுளின் உடன்படிக்கை

**1.** *தேவனுக்கும் அவருடைய படைப்பான மனிதனுக்கும் இடையிலுள்ள இடைவெளி மிக அதிகமாக இருப்பதால், மனிதர்கள் சிந்திக்கும் ஆற்றலைக் கொண்டவர்களாய், தம்மைப் படைத்தவருக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாயிருந்தும், கடவுளே தானாக முன்வந்து மனமிரங்கி உடன்படிக்கையை ஏற்படுத்தியிராவிட்டால் அவர்களால் ஜீவனை பிரதிபலனாக ஒருபோதும் அடைந்திருக்க முடியாது.*

*யோபு 35:7,8; லூக்கா 17:10.*

**2.** *மேலும், மனிதன் பாவத்தில் விழுந்ததன் காரணமாக கடவுளின் நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்குக் கீழாக தன்னைக் கொண்டு வந்திருப்பதால் பாவிகளுக்கு இலவசமாக ஜீவனையும், இரட்சிப்பையும் இயேசு கிறிஸ்துவின் மூலமாகக் கொடுப்பதற்காக ஒரு கிருபையின் உடன்படிக்கையை ஏற்படுத்துவது கடவுளுக்குப் பிரியமாயிருந்தது. இரட்சிப்பை அடையும்படியாக மனிதர்கள் தன்னை விசுவாசிக்க வேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கிறார்.*

அத்தோடு அவர்கள் தாமே விருப்பத்துடன் விசுவாசிக்கும் ஆற்றலை அடையும்படிக்கு நித்திய ஜீவனுக்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட அனைவருக்கும் தனது பரிசுத்த ஆவியைத் தருவதாக கடவுள் வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

*ஆதி 2:17; சங்கீதம் 110:3; எசேக்கியேல் 36:26,27; மாற்கு 16:15,16; யோவான் 3:16; 6:44,45; ரோமர் 3:20,21; 8:3; கலாத்தியர் 3:10.*

3. கடவுளின் உடன்படிக்கை சுவிசேஷத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. ஆரம்பத்தில், ஆதாமுக்கு ஸ்திரீயின் வித்தினால் உண்டாகும் இரட்சிப்பைக்குறித்த வாக்குத்தத்தத்தின் மூலம் அது வெளிப்படுத்தப்பட்டது. பின்பு இரட்சிப்பின் முழு வெளிப்பாடும் புதிய ஏற்பாட்டில் நிறைவேறும்வரையிலும் படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டது. தெரிந்துகொள்ளப் பட்டவர்களின் இரட்சிப்பானது நித்தியத்தில் பிதாவுக்கும் குமாரனுக்குமிடையில் ஏற்பட்ட மீட்பின் உடன்படிக்கையை ஆதாரமாகக் கொண்டது. விழுந்துபோன ஆதாமின் சந்ததியில் யாரெல்லாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் ஜீவனையும், அழிவற்ற வாழ்வையும் இவ்வுடன்படிக்கையின் கிருபையின் மூலமாக மட்டுமே பெற்றுக்கொள்கிறார்கள். ஏனெனில், ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னிருந்த நிலைமையில் பெற்றிருந்த ஆசீர்வாதங்களின் நிபந்தனைகளின்படி அவனுடைய சந்ததியினர் தேவ சமூகத்தில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

*ஆதியாகமம் 3:15; யோவான் 8:56; அப்போஸ்தலர் 4:12; ரோமர் 4:1-5; 2 தீமோத்தேயு 1:9; தீத்து 1:2; எபிரெயர் 1:1,2; 11:6,13.*

# 8
# மத்தியஸ்தராகிய கிறிஸ்து

1. கடவுள் தன்னுடைய நித்திய நோக்கத்தை நிறைவேற்று வதற்காக தனது ஒரேபேறான குமாரனோடு தான் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி அவரைத் தனக்கும் மனிதனுக்கும் இடையிலான மத்தியஸ்தராகத் தெரிவு செய்து நியமித்தார். மேலும், அவரை தீர்க்கதரிசியாகவும்,

ஆசாரியராகவும், அரசராகவும், தமது சபையின் தலைவராகவும், இரட்சகராகவும் ஏற்படுத்தினார். அத்தோடு அனைத்தின் சுதந்திரவாளியாகவும், இவ்வுலகத்தின் நியாயாதிபதியாகவும் கடவுள் அவரை நியமித்தார். நித்தியத்திலிருந்தே கடவுள் தனது குமாரனுக்கு சந்ததியாகப் போகிறவர்களை அவரிடம் தந்திருந்தார். குமாரன் அவர்களை குறிப்பிட்ட காலத்தில் மீட்டு, அழைத்து, நீதிமான்களாக்கி, பரிசுத்தப்படுத்தி, மகிமைப்படுத்தும் செயலில் ஈடுபட்டார்.

*சங்கீதம் 2:6; ஏசாயா 42:1; 53:10; லூக்கா 1:33; யோவான் 17:6; அப்போஸ்தலர் 3:22; 17:31; ரோமர் 8:30; எபேசியர் 1:22,23; எபிரெயர் 1:2; 5:5,6; 1 பேதுரு 1:19,20.*

**2.** கடவுளுடைய குமாரனாகிய பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாம் நபரே இவ்வுலகத்தை படைத்து, தான் படைத்த அனைத்தையும் தாங்கி ஆளுகை செய்யும் தெய்வீக நபராவார். அவரே மெய்யான, நித்திய தேவனும், பிதாவின் மகிமையின் பிரகாசமானவரும், பிதாவின் அதே சாரத்தைக் கொண்டவரும், அவருக்கு சமமானவருமாவார். இவரே, குறிக்கப்பட்ட காலத்தில் மனித சுபாவத்தை அதன் எல்லா அடிப்படைக் குணாதிசயங்களோடும், அதற்குரிய எல்லா இயலாமைகளோடும், பாவம் நீங்கலாக தன் மீது சுமந்தார். யூதா கோத்திரத்துப் பெண்மணியான மரியாளின் மீது பரிசுத்த ஆவியானவர் வந்தபோது, உன்னதமானவருடைய வல்லமை அவள் மீது நிழலிட்டபோது கன்னிமரியாளின் கர்ப்பத்திலே அவர் பரிசுத்த ஆவியானவரால் கருத்தரிக்கப்பட்டார். மேலும், வேதம் சொல்வதுபோல் அவர் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் ஆபிரகாம் மற்றும் தாவீதினுடைய சந்ததியுமானார். இவ்விதமாக முழுமையான, பூரணமான, முற்றிலும் வேறுபட்ட தெய்வீக மற்றும் மானிடத்தன்மைகளாகிய இவ்விரண்டும் ஒரே நபரில் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டது. இருந்தபோதும், இவ்விரண்டு தன்மைகளும் ஒரு தன்மை இன்னொரு தன்மையாக மாற்றமடையாமலும், ஒன்றோடொன்று கலந்துவிடாமலும், வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் எந்தவிதக் குழப்பமுமில்லாமல் அவரில் காணப்படுகின்றன. இப்படியாக, கடவுளுடைய குமாரன் இப்போது மெய்யான தேவனாகவும், மெய்யான மனிதனாகவும் இருக்கும் வேளையில் கடவுளுக்கும் மனிதனுக்குமிடையில் மத்தியஸ்தராகிய ஒரே கிறிஸ்துவாகவும் இருக்கிறார்.

*மத்தேயு 1:22,23; லூக்கா 1:27,31,35; யோவான் 1:14; ரோமர் 8:3; 9:5; கலாத்தியர் 4:4; 1 தீமோத்தேயு 2:5; எபிரெயர் 2:14,16,17; 4:15.*

**3.** தெய்வீகம் மற்றும் மானிடத் தன்மைகளாகிய இவ்விரண்டும் கடவுளுடைய குமாரனின் ஆள்தத்துவத்தில் இவ்விதமாக இணைக்கப்பட்டு, அவர் பரிசுத்தப்படுத்தப்பட்டு, அளவில்லாமல் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார். அறிவு மற்றும் ஞானத்தின் பொக்கிஷங்கள் அனைத்தும் அவரிலேயே காணப்படுகின்றன. அவர் பரிசுத்தமுள்ளவராயும், கபடமற்றவராயும், பாவத்தினால் கறைபடாதவராயும், கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராயும் இவ்விதமாக பிதாவுக்குப் பிரியமான அனைத்தும் நிறைந்தவராகக் காணப்பட்டார். இவ்விதமாக அவர் ஒரு மத்தியஸ்தருடைய வேலையையும், பிணையாளி யினுடைய வேலையையும் செய்வதற்குரிய சகல தகுதிகளையும் கொண்டவராக இருந்தார். அழைக்கப்படாமல் இவ்வேலையை அவர் தானே செய்ய முற்படவில்லை; மாறாக பிதாவினால் இவ்விதமாகச் செயல்படும்படிக் கட்டளையிடப்பட்டார். அத்தோடு, அவருடைய பிதா அவர் ஆளுவதற்கான முழு அதிகாரத்தையும் தந்து அனைவரையும் நியாயந்தீர்க்கவும் கட்டளையிட்டார்.

*சங்கீதம் 45:7; மத்தேயு 28:18; யோவான் 1:14; 3:34; 5:22,27; அப்போஸ் 2:36; 10:38; கொலோ 1:19; 2:3; எபிரெயர் 5:5; 7:22,26.*

**4.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மத்தியஸ்த ஊழியத்தை மிகவும் விருப்பத்தோடு பொறுப்பேற்றார். அதை செய்து முடிப்பதற்காக தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டு அதைப் பூரணமாக நிறைவேற்றினார். நாம் பொறுப்பேற்று அனுபவிக்க வேண்டிய தண்டனைகளை அவர் தன்மேல் சுமந்து அனுபவித்து நமக்காக சாபமானார். தனது ஆத்துமாவில் நாம் புரிந்துகொள்ள முடியாத அளவு கடுமையான வேதனையை அனுபவித்தார். தனது சரீரத்தில் ஏற்பட்ட மிகவும் வேதனையுள்ள துன்பங்களையும் சகித்துக் கொண்டார். சிலுவையில் அறையப்பட்டதன் மூலமாக அவர் மரித்தார். மரண நிலையில் இருந்தபோது அவரது சரீரம் அழுகிப் போகவில்லை. பாடுகளை அனுபவித்த அதே சரீரத்தோடு மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுந்தார். அதே சரீரத்துடன் அவர் பரலோகத்திற்கு எழுந்தருளி பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்து தமது மக்களுக்காக வேண்டுதல்

*செய்து வருகிறார். உலகத்தின் முடிவில் மனிதர்களையும் தேவதூதர்களையும் நியாயந்தீர்க்க அவர் வருவார்.*

*சங்கீதம் 40:7,8; ஏசாயா 53:6; மத்தேயு 3:15; 26:37,38; 27:46; மாற்கு 16:19; லூக்கா 22:44; யோவான் 10:18; 20:25,27; அப்போஸ் 1:9-11; 10:42; 13:37; ரோமர் 8:34; 14:9,10; 1 கொரி 15:3,4; 2 கொரி 5:21; கலா 3:13; 4:4; எபி 9:24; 10:5-10; 1 பேதுரு 3:18; 2 பேதுரு 2:4.*

**5.** *கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கடவுளுடைய நியாயப் பிரமாணத்திற்கு தாம் பரிபூரணமாக கீழ்ப்படிந்ததன் மூலமாகவும், நித்திய ஆவியினாலே ஒரே தரம் தன்னைத்தானே பலியாகக் கொடுத்ததன் மூலமும் தெய்வீக நீதியின் எல்லாக் கோரிக்கைகளையும் முழுவதுமாக திருப்தி செய்தார். அவர் ஒப்புரவாகுதலை இவ்விதமாக உண்டுபண்ணி, பிதாவினால் தமக்கு கொடுக்கப்பட்ட எல்லோருக்காகவும் பரலோக ராஜ்யத்தில் ஒரு நித்திய சுதந்திரத்தை கிரயம் செலுத்தி வாங்கினார்.*

*யோவான் 17:2; ரோமர் 3:25,26; எபிரெயர் 9:14,15; 10:14.*

**6.** *மீட்பின் கிரயம் கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்பாக இவ்வுலகத்தில் செலுத்தப்படவில்லை. ஆனால், அவருடைய மீட்கும் செயலின் மதிப்பு, பயனுரம், பலாபலன்கள் அனைத்தும் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உலகம் உருவான நாள் முதல் எல்லாக் காலங்களிலும் பயனுள்ளதாக ஆக்கப்பட்டிருந்தது. இது அவரை வெளிப்படுத்திய வாக்குத்தத்தங்கள், மாதிரிகள், பலிகள் மூலமாக நிறைவேற்றப்பட்டது. அவை அவரை சர்ப்பமாகிய பிசாசின் தலையை நசுக்கும் ஸ்திரீயின் வித்தாகவும், உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகவும் அடையாளம் காட்டின. அவர் கிறிஸ்துவாக நேற்றும், இன்றும், என்றென்றும் மாறாதவராக இருக்கிறார்.*

*1 கொரி 4:10; எபிரெயர் 4:2; 13:8; 1 பேதுரு 1:10,11; வெளி 13:8.*

**7.** *தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான மத்தியஸ்த வேலையில் கிறிஸ்து தமது இரண்டு சுபாவங்களின்படி செயல்படுகிறார். ஒன்று தெய்வீக சுபாவம் மற்றொன்று மானிட சுபாவம். இந்த இரண்டு சுபாவங்களுக்குமுரிய பொருத்தமான காரியங்களை அவர் அந்தந்த சுபாவத்தில் செய்கிறார். இருந்தபோதும் அவரது ஆள்தத்துவத்தின் ஒருமை காரணமாக,*

*சில வேளைகளில் அவருடைய ஒரு சுபாவத்திற்குரிய செயலை, அவரில் மற்ற சுபாவம் தலைதூக்கி நிற்கும்போது அந்த சுபாவத்திற்குரியதாக வேதாகமம் விளக்குகிறது.*

*யோவான் 3:13; அப்போஸ்தலர் 20:28.*

**8.** *கிறிஸ்து தான் யாருக்காகவெல்லாம் நித்திய மீட்பை பெற்றுக்கொண்டாரோ அவர்கள் அனைவருக்கும் அதை நிச்சயமாகவும், திட்ப உறுதியாகவும் அளித்துப் பலிதமாக்குகிறார். அவர்களுடைய சார்பில் அவர் பரிந்து பேசுகிறார். தமது ஆவியின் மூலமாக அவர்களைத் தன்னோடு இணைத்துக்கொள்கிறார். தனது வார்த்தையிலும், வார்த்தையின் மூலமும் இரட்சிப்பின் இரகசியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். தனது வார்த்தையினாலும் ஆவியினாலும் அவர்களுடைய இருதயத்தை ஆண்டு அவர்கள் விசுவாசிக்கும்படியும், கீழ்ப்படியும்படியும் தூண்டுகிறார். அவர் தனது அதிசயமானதும், ஆராய முடியாததுமான பராமரிப்பின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி தமது வல்லமையினாலும், ஞானத்தினாலும் அவர்களுடைய எல்லா சத்துருக்களையும் மேற்கொள்கிறார். இந்தக் காரியங்கள் அனைத்துமே அவருடைய இலவசமான ஆளுமையுள்ள கிருபையினால் செய்யப்படுகின்றது. அதுவும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் காணப்படக்கூடிய எந்த நன்மையையும் முன்னறிந்ததன் விளைவாக அல்லாமல் நிபந்தனையற்ற முறையில் இவை செய்யப்படுகின்றன.*

*சங்கீதம் 110:1; யோவான் 3:8; 6:37; 10:15,16; 17:6,9; ரோமர் 5:10, 8:9,14; 1 கொரிந்தியர் 15:25,26; எபேசியர் 1:8,9; 1 யோவான் 5:20.*

**9.** *கிறிஸ்து மட்டுமே கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருக்கத் தகுதியுள்ளவர். அவரே, கடவுளின் திருச்சபையின் தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், அரசராகவும் இருக்கிறார். அவரது ஆசாரியப் பணியை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு சிறு பகுதியையோ அவரிடமிருந்து வேறு எவருக்கும் மாற்ற முடியாது.*

*1 தீமோத்தேயு 2:5.*

**10.** *கிறிஸ்துவின் இந்த மூன்று வகையான ஊழியங்களும் நமக்குத் தேவை. நமது மடமையின் நிமித்தமாக அவருடைய தீர்க்கதரிசனப்பணி நமக்குத் தேவை. நாம் கடவுளைவிட்டு*

சோரம் போனவர்கள் என்பதாலும், நமது சிறந்த சேவைகள் அனைத்தும் குறைபாடுள்ளவை என்பதாலும் நம்மைக் கடவுளோடு ஒப்புரவாக்கவும், நம்மை தேவ சமூகத்திலே அங்கீகரிக்கப்பண்ணவும் அவருடைய ஆசாரியப்பணி நமக்குத் தேவை. நாம் கடவுளை விட்டு விலகுகிறபடியினாலும், நம்மால் ஒருபோதும் அவரிடம் சுயமாகத் திரும்ப முடியாது என்பதாலும், நமது ஆவிக்குரிய எதிரிகளிடமிருந்து மீட்கப்பட்டு நாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் நமக்கு உணர்த்தவும், நம்மைக் கீழ்ப்படுத்தவும், தம்மிடம் இழுத்துக்கொள்ளவும், பராமரிக்கவும், பாதுகாக்கவும், இறுதியில் தமது பரலோக ராஜ்யத்தில் நம்மைப் பிரகாசிக்கச் செய்யவும் அவரது அரச ஊழியம் நமக்குத் தேவையாயிருக்கிறது.

*சங்கீதம் 110:3; லூக்கா 1:74,75; யோவான் 1:18; 16:8; கலாத்தியர் 5:17; கொலோசெயர் 1:21.*

# 9
# சுயாதீன சித்தம்

1. கடவுள் இயற்கையிலேயே, மனித சித்தத்தை அது தான் எடுக்கும் தீர்மானத்தின்படி நடக்கக்கூடிய வல்லமையையும், சுதந்திரத்தையும் கொண்டுள்ளதாகப் படைத்திருந்தார். இச்சுயாதீனமான சித்தம் நன்மையையோ, தீமையையோ செய்வதற்கு புறநிர்ப்பந்தங்களினால் பாதிப்புறாமலும், இயற்கையாக அதன் உள்ளியல்பினால் வற்புறுத்தப்படாமலும் உள்ளது.

*மத்தேயு 17:12; யாக்கோபு 1:14; உபாகமம் 30:19.*

2. பாவமற்ற நிலையில், மனிதன் சுயாதீனமும் வல்லமையுமுள்ள சித்தத்தையும், நன்மையானதையும், கடவுளுக்கு ஏற்புடையதை செய்யக்கூடிய தன்மையையும் கொண்டிருந்தான். இருந்தபோதும் அவன் மாறும் இயல்புடையவனாக இருந்தபடியால் தனது நேர்மையான நிலையில் இருந்து அவனால் விழ முடிந்தது.

*பிரசங்கி 7:29; ஆதியாகமம் 3:6.*

**3.** *மனிதன் பாவத்தில் வீழ்ந்ததால் இரட்சிப்போடு கூடிய எந்தவித ஆவிக்குரிய நன்மைகளையும் செய்யக்கூடிய தனது சித்தத்தின் வல்லமையைப் பூரணமாக இழந்தான். இயல்பாகவே மனிதன் ஆவிக்குரிய நன்மைகளை முற்றிலும் எதிர்ப்பவனாகவும் பாவத்தில் மரித்தவனாகவும் உள்ளான்.*

*ரோமர் 5:6; 8:7; எபேசியர் 2:1,5; தீத்து 3:3-5; யோவான் 6:44.*

**4.** *கடவுள் பாவிக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தி அவனைக் கிருபையின் நிலைக்குக் கொண்டு வரும்போது, இயற்கையாகவே அவனை அடிமைப்படுத்தியிருக்கும் பாவத்திலிருந்து அவனுக்கு விடுதலை தந்து கிருபையின் மூலமாக மட்டுமே அவன் சுயாதீனமான சித்தத்துடன் ஆவிக்குரிய நன்மைகளைச் செய்யும்படிச் செய்கிறார். ஆனால், அவனுள் தொடர்ந்திருக்கும் பாவசுபாவத்தினால் நன்மைகளை மட்டுமன்றி அவன் கேடானவைகளையும் செய்யச் சித்தங்கொள்கிறான். (மனமாற்றமடைந்த மனிதனின் சித்தம் இன்னும் பூரணமடையாவிட்டாலும் அது புதுப்பிக்கப்பட்டுள்ளது. மனமாற்றத்திற்கு முன்பு மனித சித்தம் ஆவிக்குரிய நன்மைகளைச் செய்யக்கூடிய விருப்பத்தையோ வல்லமையையோ கொண்டிருக்க வில்லை).*

*கொலோசெயர் 1:13; யோவான் 8:36; பிலிப்பியர் 2:13; ரோமர் 7:15,18,19,21,23.*

**5.** *உன்னத நிலையிலேயே மனித சித்தம் பூரணமாகவும், மாற்றம் எதுவுமின்றி சுயாதீனமாக நன்மையானதை மட்டும் செய்யக்கூடியதாக அமையும்.*

*எபேசியர் 4:13.*

# 10
# திட்ப உறுதியான (தவிர்க்க முடியாத) அழைப்பு

1. *தம்மால் தீர்மானிக்கப்பட்டதும், தமக்கு ஏற்புடையதுமான காலத்தில் கடவுள் தாம் நித்திய ஜீவனுக்காக தெரிந்து கொண்டவர்களை சுபாவத்திலேயே அவர்களைப் பிடித்திருந்த மரணத்தில் இருந்து விடுவித்து இயேசு கிறிஸ்துவின் மூலமாக கிருபையையும் இரட்சிப்பையும் அடைய தனது வார்த்தையாலும் ஆவியாலும் திட்ப உறுதியாய் அழைத்தார். இரட்சிப்பை அடைந்தவர்கள் ஆன்மீக அறிவொளியைப் பெற்றிருப்பதால் கடவுளுடைய செயல்களை அறிந்துகொள்ளத் தொடங்குகிறார்கள். கடவுள் அவர்களுடைய கல்லான இருதயத்தை அகற்றி அவர்களுக்கு மென்மையான இருதயத்தைத் தருகிறார். அவர்களுடைய சித்தத்தைப் புதுப்பித்து தமது எல்லாம் வல்ல வல்லமையினால் நன்மையானவற்றை அவர்கள் நாடிப் பின்பற்றச் செய்து அதேவேளை திட்ப உறுதியாய் அவர்களை இயேசு கிறிஸ்துவிடம் இட்டுச் செல்கிறார்.*

*உபாகமம் 30:6; சங்கீதம் 110:3; உன்னதப்பாட்டு 1:4; எசேக்கியேல் 36:26,27; அப்போஸ்தலர் 26:18, ரோமர் 8:30; 11:7; எபேசியர் 1:10,11,17,19; 2:1-6; 2 தெசலோனிக்கேயர் 2:13,14.*

2. *இந்தத் திட்ப உறுதியான அழைப்பு கடவுளுடைய இலவசமானதும், விசேஷமானதுமான கிருபையினால் மட்டுமே ஏற்படுவதாகும். ஒரு மனிதன் ஆவியினால் புதுப்பிக்கப்பட்டு, ஜீவனடையும் வரை அவன் பாவத்தில் மரித்தவனாகவே காணப்படுகிறான். ஆகவே, இரட்சிப்பைப் பொறுத்தவரையில் மனிதன் அதில் எந்தப் பங்கும் வகிக்காதவனாகக் காணப்படுகிறான். ஏனெனில், அது அவனில் முன் உணரப்பட்ட எந்த நன்மையின் அடிப்படையிலோ அல்லது அவனில் தங்கியுள்ள எந்த வல்லமையின் அடிப்படையிலோ ஏற்பட்டதல்ல. கிறிஸ்துவை மரணத்தில் இருந்து எழுப்பிய அதே வல்லமையே மனிதன் கடவுளுடைய அழைப்பிற்கு செவிகொடுக்கவும், அவ்வழைப்பு அளிக்கும் கிருபையை அணைத்துக்கொள்ளவும் செய்கிறது.*

*யோவான் 5:25; 1 கொரிந்தியர் 2:14; எபேசியர் 1:19,20; 2:5,8; 2 தீமோத்தேயு 1:9.*

**3.** *தம் விருப்பப்படி எப்போதும், எங்கேயும், எவ்வாறும் கிரியை செய்யும் கிறிஸ்து, குழந்தைப் பருவத்தில் இறக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட குழந்தைகளை ஆவியின் மூலம் மறுபிறப்பளித்து இரட்சிக்கிறார். வெளிப்படையாக நற்செய்தியின் பிரசங்கத்தினால் அழைக்கப்பட முடியாத தெரிந்து கொள்ளப்பட்ட அனைத்து மனிதர்களையும் பொறுத்தவரையிலும் இது உண்மையே.*

*யோவான் 3:3,5,6,8.*

**4.** *நற்செய்திப் பிரசங்கிகள் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும்படிக் கொடுக்கும் அழைப்பைக் கேட்டும், ஆவியின் பொதுவான சில செயல்களின் கீழ் வரவும் வாய்ப்பும் பெற்றவர்கள் பிதாவினால் திட்ப உறுதியாக கிறிஸ்துவிடம் இட்டுச் செல்லப்படாததால் இரட்சிப்பைப் பெறும் சித்தங்கொள்ளவோ அல்லது அதை அடையவோ முடியாதவர்களாக இருக்கிறார்கள். அதேபோல், கிறிஸ்தவ மார்க்கத்தைச் சாராதவர்கள் இயற்கை அளிக்கும் போதனைகளையும், தங்களுடைய மதம் தரும் போதனைகளையும் எவ்வளவுதான் பின்பற்றி தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள தளராத முயற்சி எடுத்தாலும் அவர்களால் இரட்சிப்பை அடைய முடியாது.*

*மத்தேயு 13:20,21; 22:14; யோவான் 4:22; 6:44,45,65; 17:3; அப்போஸ்தலர் 4:12; எபிரெயர் 6:4-6; 1 யோவான் 2:24,25.*

# 11
# நீதிமானாக்குதல்

1. *கடவுள் தாம் திட்ப உறுதியாய் அழைப்பவர்களை இலவசமாக நீதிமான்களாக்குகிறார். இதை அவர் அவர்களுள் நீதியை உட்புகுத்துவதன் மூலமாக அல்லாமல் அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களை நீதிமான்களாக எண்ணி ஏற்றுக் கொள்ளுவதன் மூலம் செய்கிறார். அவர்களில் நிகழ்ந்த அல்லது*

அவர்கள் செய்த எந்தச் செயல்களின் மூலமாகவுமல்லாமல் கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே இதை அவர் செய்கிறார். அவர்களுக்கு அளிக்கப்பட்ட, அதாவது அவர்களுடைய கணக்கில் வைக்கப்பட்ட நீதி, அவர்களுடைய விசுவாசமோ அல்லது விசுவாசிக்கும் செயலோ அல்லது நற்செய்தியைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியும் அவர்களுடைய ஏதாவதொரு செய்கையாகவோ அல்லாமல் கிறிஸ்துவினுடைய கீழ்ப்படிவாகவே உள்ளது. கிறிஸ்துவினுடைய கீழ்ப்படிவு, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து அதை முழுமையாகக் கடைப்பிடித்தல், மரணத்திற்குத் தன்னை உட்படுத்திக் கீழ்ப்படிதல் ஆகிய இரண்டு தன்மைகளையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வாறாக நீதிமான்களாக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் நீதியை விசுவாசத்தினால் பெற்று அதில் ஆறுதல் அடைகிறார்கள். இவ்விசுவாசம் அவர்களால் உண்டானதாக அல்லாமல் தேவனுடைய ஈவாக இருக்கின்றது.

*யோவான் 1:12; ரோமர் 3:24; 4:5-8; 5:17-19; 8:30; 1 கொரிந்தியர் 1:30,31; எபேசியர் 1:7; 2:8-10; பிலிப்பியர் 3:8,9.*

**2.** கிறிஸ்துவையும் அவரது நீதியையும் பெற்று அதைச் சார்ந்திருக்கும் விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானாக்குதல் பெறப்படுவதாக இருக்கிறது. ஆனாலும், இது எப்போதுமே நீதிமானாக்கப்பட்டவனில் தரித்திராமல் ஏனைய அனைத்து இரட்சிப்பின் கிருபைகளோடும் இணைந்தே காணப்படுகின்றது. அத்தோடு, இது உயிரற்ற விசுவாசமாக இல்லாமல் அன்போடு செயல்படுவதாகவும் உள்ளது.

*ரோமர் 3:28; கலாத்தியர் 5:6; யாக்கோபு 2:17,22,26.*

**3.** தனது கீழ்ப்படிவினாலும், மரணத்தினாலும் கிறிஸ்து நீதிமான்களாக்கப்பட்ட அனைவரது கடன்களையும் முழுமையாகத் தீர்த்தார். கல்வாரியில் தனது இரத்தத்தைச் சிந்தி தன்னைப் பலியாகக் கொடுத்ததன் மூலமும், அவர்களுக்குப் பதிலாக அவர்களுடைய தண்டனையைத் தாமே அனுபவித்ததன் மூலமும், அவர்கள் மீதிருந்த கடவுளுடைய நீதியின் எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றினார். ஆனாலும், இலவசமான கிருபையின் மூலமாகவே அவர்கள் முழுமையாக நீதிமான்களாக்கப் பட்டார்கள். ஏனெனில், முதலாவதாக, கிறிஸ்து அவர்கள் சார்பாக கிரியை செய்யும்படியாக பிதாவினால் இலவசமாகக் கொடுக்கப்பட்ட ஈவு. இரண்டாவதாக, கிறிஸ்துவின் கீழ்ப்படிவும்,

*நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை அவர் நிறைவேற்றியதும் அவர்கள் சார்பாக இலவசமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மூன்றாவதாக, அவர்களில் காணப்பட்ட எதுவுமே இத்தகைய கருணைகளுக்கு அவர்களைத் தகுதியாக்கவில்லை. ஆகவே, கடவுளுடைய பூரணமான நீதியும், கிருபையும் பாவிகளினுடைய நீதிமானாக்குதலினால் மகிமைப்படுத்தப்படுகிறது.*

*ஏசாயா 53:5,6; ரோமர் 3:26; 8:32; 2 கொரிந்தியர் 5:21; எபேசியர் 1:6,7; 2:7; எபிரெயர் 10:14; 1 பேதுரு 1:18,19.*

**4.** *தெரிந்துகொள்ளப்பட்ட அனைவரையும் நீதிமான்களாக்க கடவுள் அநாதி காலத்தில் ஆணையிட்டதோடு, அனைத்தும் கூடிவந்த காலத்தில் கிறிஸ்து அவர்களுடைய பாவத்திற்காக மரித்து உயிர்த்தெழுந்தார். இருந்தபோதும் பரிசுத்த ஆவி கிறிஸ்துவின் ஆள் தன்மை, கிரியை ஆகியவற்றின் நன்மைகளை அவர்களில் பயன்படுத்தும்வரை தனிப்பட்ட முறையில் அவர்கள் நீதிமான்களாக்கப்படவில்லை.*

*ரோமர் 4:25; கலாத்தியர் 3:8; கொலோசெயர் 1:21,22; 1 தீமோத்தேயு 2:6; தீத்து 3:4-7; 1 பேதுரு 1:2.*

**5.** *நீதிமான்களாக்கப்பட்ட அனைவரது பாவங்களையும் கடவுள் தொடர்ந்து மன்னிக்கிறார். அவர்கள் தங்களுடைய நீதிமான்களாக்கப்பட்ட நிலையை ஒருபோதும் இழந்துவிட முடியாது. ஆனால், அவர்கள் பாவத்தின் காரணமாக கடவுளின் தண்டனைக்கு உரித்தான கோபத்திற்குட்படலாம். அந்நிலையில் அவர்கள் தங்களைத் தாழ்த்தி, தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு கடவுளுடைய மன்னிப்பிற்காக இரங்கி தங்களுடைய விசுவாசத்தையும், மனந்திரும்புதலையும் புதுப்பித்தாலன்றி கடவுள் பொதுவாக தன்னுடைய முகப்பிரகாசத்தை அவர்களுக்கு அளிக்கமாட்டார்.*

*சங்கீதம் 32:5; சங்கீதம் 51; 89:31-33; மத்தேயு 6:12; 26:75; யோவான் 10:28; 1 யோவான் 1:7,9.*

**6.** *பழைய ஏற்பாட்டுக் காலத்து விசுவாசிகள் புதிய ஏற்பாட்டுக் காலத்து விசுவாசிகளைப் போலவே நீதிமான்களாக்கப் பட்டார்கள்.*

*ரோமர் 4:22-24; கலாத்தியர் 3:9.*

# 12
# மகவேட்பு

1. தன்னுடைய ஒரே குமாரனான இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் நீதிமான்களாக்கப்படுகிற அனைவரும் புத்திரசுவிகாரக் கிருபையில் பங்குகொள்ள உத்தரவாதம் அளிக்கிறார். இதன் மூலமாக அவர்கள் கடவுளுடைய பிள்ளைகளின் உரிமைப் பேறுகளையும், சிறப்புரிமைகளையும் அனுபவித்து மகிழும்படி அவரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அத்துடன் கடவுளின் திருப்பெயர் அவர்கள் மேல் எழுதப்பட்டு புத்திரசுவிகார ஆவியையும் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். மேலும், கிருபாசனத்தண்டையில் தைரியமாய்ச் சேரும் வாய்ப்பும் கடவுளை "அப்பா, பிதாவே" என்று அழைக்கும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. கடவுள் அவர்களைத் தந்தையைப்போல இரக்கம் காட்டி, பாதுகாத்து, பராமரித்துக் கண்டிக்கவும் செய்கிறார். மேலும், அவர் அவர்களை ஒருபோதும் தள்ளிவைப்பதில்லை. ஆனால், அவர்கள் மீட்பின் நாளுக்கென்று தொடர்ந்து முத்திரையிடப்பட்டிருப்பதால் நித்திய இரட்சிப்பின் வாரிசுகளாக வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்கிறார்கள்.

*சங் 103:13; நீதி 14:26; ஏசாயா 54:8,9; புலம்பல் 3:31; யோவான் 1:12; ரோமர் 8:15,17; 2 கொரி 6:18; கலாத்தியர் 4:4-6; எபேசியர் 1:5; 2:18; 4:30; எபிரெயர் 1:14; 6:11; 12:6; 1 பேதுரு 5:7; வெளி 3:12.*

# 13
# பரிசுத்தமாக்குதல்

1. கிறிஸ்துவின் திட்ப உறுதியான அழைப்பினால் அழைக்கப் பட்டும், மறுபிறப்பைப் பெற்றும் அவரோடு இணைக்கப் பட்டவர்களில் புதிய இருதயமும், புதிய ஆவியும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அத்தோடு, கடவுளுடைய வார்த்தையினாலும், விசுவாசிகளில் வாசம் செய்யும் ஆவியினாலும் விசுவாசிகளில்

*பரிசுத்தமாக்குதலாகிய செயல் நடைபெறுகிறது. கிறிஸ்துவின் மரணத்தினாலும், உயிர்த்தெழுதலினாலும் ஏற்பட்ட பலாபலன் களினால் இவ்வாசீர்வாதங்கள் அனைத்தும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. விசுவாசிகளில் பாவத்திற்கு இருந்த ஆளுகை பூரணமாக முறியடிக்கப்பட்டுள்ளது. அவர்களில் அது ஏற்படுத்தும் கேடான இச்சைகள் தொடர்ந்து பலவீனப்படுத்தப் பட்டு ஒறுத்தடக்கப்பட்டுள்ளன. அத்தோடு, அவர்களில் காணப் படும் இரட்சிப்பின் கிருபைகள் தொடர்ந்து உயிர்ப்பிக்கப்பட்டு வலுப்படுத்தப்படுகின்றன. எந்தப் பரிசுத்தமில்லாமல் ஒருவர் கர்த்தரைத் தரிசிக்க முடியாதோ அம்மெய்யான பரிசுத்தத்திற்கான பயிற்சி இவ்வாறாகவே விசுவாசிகளில் நடைபெறுகின்றது.*

*யோவான் 17:17; அப்போஸ் 20:32; ரோமர் 6:5,6,14; 2 கொரி 7:1; கலாத்தியர் 5:24; எபேசியர் 3:16-19; கொலோ 1:11; 1 தெசலோ 5:21-23; எபிரெயர் 12:14.*

**2.** *இவ்விதமாக விளக்கப்படும் பரிசுத்தமாக்குதல் மனிதனின் அனைத்துப் பாகங்களுக்கும் பரவினாலும் அவனுடைய பூவுலக வாழ்க்கையில் பூரணமடையாமலிருக்கின்றது. பாவத்தின் மாசுள்ள எஞ்சிய பகுதிகள் தொடர்ந்தும் மனிதனின் அனைத்துப் பாகங்களையும் பாதித்து அவனுள் தொடர்கின்ற ஒரு போராட்டத்தை ஏற்படுத்தி ஒப்புரவாக்குதலை ஏற்க மறுக்கிறது. அத்தோடு, மாம்சம் ஆவிக்கெதிராகவும், ஆவி மாம்சத்திற்கெதிராகவும் போராடுகின்றது.*

*ரோமர் 7:18,23; கலாத்தியர் 5:17; 1 தெசலோ 5:23; 1 பேதுரு 2:11.*

**3.** *ஆவிக்கும் மாம்சத்திற்கும் இடையிலான போராட்டத்தில் பாவத்தின் மாசுள்ள எஞ்சிய பகுதிகள் சில சந்தர்ப்பங்களில் மேலோங்கப் பார்த்தாலும் கிறிஸ்துவின் பரிசுத்தமாக்கும் ஆவியளிக்கும் தொடர்ச்சியான வல்லமையினால் மனிதன் ஒரு புதுப்பிறவியாக வெற்றியடைய முடிகின்றது. இவ்வாறாக, பரிசுத்தமாக்குதலுக்குள்ளானோர் கிருபையில் வளர்ச்சியடைந்து தேவபயத்தோடு பரிசுத்தத்தின் பூரணத்துவத்தை நோக்கி முன்னேறுகிறார்கள். அவர்கள் மோட்ச நீதிச்சட்டங்களின்படி வாழ அனைத்து முயற்சிகளையும் எடுப்பதோடு தங்களுடைய தலைவரும் அரசருமான கிறிஸ்து தம் வார்த்தையில் தந்துள்ள அனைத்துக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியவும் முயல்கிறார்கள்.*

*ரோமர் 6:14; 7:23; 2 கொரிந்தியர் 3:18; 7:1; எபேசியர் 4:15,16.*

# 14
# இரட்சிக்கும் விசுவாசம்

1. தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக விசுவாசத்தின் கிருபையினால் அவர்களை விசுவாசிக்க செய்வது ஆவியானவர் அவர்களுடைய இருதயத்தில் செய்யும் கிரியையே. பொதுவாக இது கடவுளின் வசனத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் நிகழ்கின்றது. கடவுளுடைய வார்த்தையாலும், அதன் சேவையாலும் திருமுழுக்கு, திருவிருந்து, ஜெபம் மற்றும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏனைய சாதனங்களின் மூலமாகவும் விசுவாசம் ஒருவரில் வளர்ந்து வலுவடைகின்றது.

*லூக்கா 17:5; அப்போஸ்தலர் 20:32; ரோமர் 10:14,17; 2 கொரிந்தியர் 4:13; எபேசியர் 2:8; 1 பேதுரு 2:2.*

2. கடவுள் அதிகாரத்துடன் பேசும் வார்த்தையின் மூலம் வெளிப்படுத்தப்படும் அனைத்தையும் விசுவாசத்தின் மூலம் ஒரு கிறிஸ்தவன் உண்மையென்று நம்புகிறான். அத்துடன் ஏனைய எழுத்துக்கள் அனைத்திலும், உலகத்திலுள்ள அனைத்திலும் காணப்படுவதையும்விட மேலான ஒரு சிறப்புத் தன்மையை கடவுளுடைய வார்த்தை கொண்டிருப்பதை அவன் உணர்கிறான். கடவுளுடைய வார்த்தை அவருடைய பலவித குணாதிசயங்களின் மகிமையையும், கிறிஸ்துவின் தன்மையிலும் அவரது பணிகளிலும் காணப்படும் சிறப்பையும் பரிசுத்த ஆவியானவரின் செயலாற்றல்கள் அனைத்திலும் காணப்படும் அவரது வல்லமையையும் பூரணத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வகையில் ஒரு கிறிஸ்தவன் தான் விசுவாசித்த சத்தியத்தில் பூரணமாக நம்பிக்கை வைத்து திருமறையின் வெவ்வேறு பாகங்களின் பலவிதமான கோரிக்கைகளின்படி சேவை செய்ய முடிகின்றது. கடவுளின் கட்டளைகளுக்கு அவன் கீழ்ப்படிகிறான். அவரது பயமுறுத்துதல்களைக் கேட்டு அவன் நடுங்குகிறான். இவ்வுலக வாழ்க்கைக்கும் இனி வரப்போகும் வாழ்க்கைக்குமாகத் தரப்பட்ட தெய்வீக வாக்குறுதிகளை அவன் அணைத்துக் கொள்கிறான். இரட்சிக்கும் விசுவாசத்தின்

*மையமான நடவடிக்கைகள் கிறிஸ்துவோடு தொடர்புடையதாக இருக்கின்றன. ஏனெனில், நீதிமானாக்குதல், பரிசுத்தமாக்குதல், நித்திய ஜீவன் ஆகியவற்றிற்கு விசுவாசி அவரையே ஏற்றும், அவரையே பெற்றும், அவரையே சார்ந்தும் நிற்கிறான். அத்தோடு, இவை அனைத்தையும் அவன் கிருபையின் உடன்படிக்கை மூலமே பெற்றுக்கொள்கிறான்.*

*சங்கீதம் 19:7-10; 119:72; ஏசாயா 66:2; யோவான் 1:12; 15:14; அப்போஸ்தலர் 15:11; 16:31; 24:14; கலாத்தியர் 2:20; 2 தீமோத்தேயு 1:12; எபிரெயர் 11:13.*

3. *இரட்சிக்கும் விசுவாசம், பலபடிகளைக்கொண்டுள்ளது. அது பலவீனமானதாகவோ அல்லது பெலமானதாகவோ இருக்கலாம். இருந்தபோதும், இது ஏனைய எல்லாவிதமான இரட்சிக்கும் கிருபையைப்போல, பலவீனமான நிலையிலும்கூட மெய்யான விசுவாசிகளல்லாதவர்களிடம் காணப்படும் விசுவாசம், பொதுவான கிருபை ஆகியவற்றைவிட வித்தியாசமான தன்மையை உடையதாக உள்ளது. அதன் விளைவாக இரட்சிக்கும் விசுவாசம் அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளாகி பெலவீனப்பட்டாலும் நமது விசுவாசத்தை தொடக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற கிறிஸ்துவின் மூலம் கிறிஸ்தவர்கள் இரட்சிப்பின் நிச்சயத்தை அடையும்வரை வளர்ச்சியடைந்து இறுதியில் வெற்றியும் அடைகின்றது.*

*மத்தேயு 6:30; ரோமர் 4:19,20; எபேசியர் 6:16; கொலோசெயர் 2:2; எபிரெயர் 5:13,14; 6:11,12; 12:2; 2 பேதுரு 1:1; 1 யோவான் 5:4,5.*

# 15
# மனந்திரும்புதலும் இரட்சிப்பும்

1. *தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் சிலர் தாங்கள் பிறந்த ஸ்தானத்தில் தொடர்ந்திருந்து எல்லாவிதமான கேடான ஆசைகளையும், இச்சைகளையும் அனுபவித்து தங்கள் வாழ்வின்*

*பிற்பகுதியிலேயே மனந்திரும்புகிறார்கள். அப்போது, கடவுள் திட்ப உறுதியான அழைப்பின் மூலம் அவர்களுக்கு நித்திய ஜீவனைத் தரும் மனந்திரும்புதலை அளிக்கிறார்.*

*தீத்து 3:2-5.*

**2.** *இவ்வுலகில் பாவமேயில்லாது நன்மைகள் செய்யும் மனிதர் ஒருவருமே இல்லை. மனிதர்களில் மிகச்சிறந்தவர்களும் அவர்களுக்குள் இருக்கும் சீரழிவின் வல்லமையாலும் வஞ்சகத் தாலும், சோதனைகளின் பலத்தாலும் கடவுள் வெறுக்கும் பெரும் பாவங்களைச் செய்யலாம். இதனிமித்தம் பாவத்தில் விழும் விசுவாசிகள் மனந்திரும்பி இரட்சிப்புப்பெற கடவுள் கருணைகூர்ந்து கிருபையின் உடன்படிக்கை மூலமாக வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளார்.*

*பிரசங்கி 7:20; லூக்கா 22:31,32.*

**3.** *பரிசுத்த ஆவியின் மூலம் தன்னில் உள்ள பாவத்தின் பலவிதமான கேடுகளையும் உணருபவன் நற்செய்தியின் கிருபையாகிய இரட்சிக்கும் மனந்திரும்புதல் மூலம் இதை அடைகிறான். அத்தோடு, அவன் பாவத்தின் காரணமாக தன்னைத் தாழ்த்தி கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறான். இத்தாழ்மைப்படுத்தல் தேவனுக்கேற்ற துக்கம், பாவத்தில் வெறுப்பு, சுய அருவருப்பு ஆகிய குணாதிசயங்களைக் கொண்டிருக்கும். இம்மனந்திரும்புதல் கடவுளுக்கு முன்பாக அவரை மகிழ்விக்கும்விதத்தில் நிலையாகத் தொடரக் கூடியதாகவும், இலட்சியத்தையும், விடாமுயற்சியையும், பரிசுத்த ஆவி தரும் வல்லமையோடு கூடிய மன்னிப்பை நாடும் ஜெபம், கிருபையின் பலம், தீர்மானம், முயற்சி ஆகியவற்றையும் கொண்டிருக்கும்.*

*சங் 119:6,128; எசே 36:31; சக 12:10; அப்போஸ் 11:18; 2 கொரி 7:11.*

**4.** *நாம் நம்மில் கேட்டை நாடும் மரணத்தின் சரீரத்தை சுமந்து நிற்பதால் நம் வாழ்நாள் முழுவதும் மனந்திரும்புதலை நம்மில் நாம் கொண்டிருப்பது அவசியமாகிறது. ஒவ்வொரு மனிதனும் தனது மனச்சாட்சியை உறுத்துகின்ற ஒவ்வொரு குறிப்பிட்ட பாவத்திலிருந்தும் கவனத்தோடு மனந்திரும்புவதைக் கடமையாகக் கொண்டுள்ளான்.*

*லூக்கா 19:8; 1 தீமோத்தேயு 1:13,15.*

5. கிருபையின் உடன்படிக்கை மூலம் இரட்சிப்பைப் பெற்றிருக்கும் விசுவாசிகளைப் பாதுகாக்க கடவுள் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார். எனவே, மிகச் சிறிதான பாவங்களும் கண்டனத்துக்குரியதாக இருப்பினும் மனந்திரும்பும் ஒருவனைக் கண்டனத்துக்குள்ளாக்கக்கூடிய பெரிய பாவம் என்று ஒன்றில்லை. இதனால் மனந்திரும்புதலைப்பற்றி அடிக்கடி பிரசங்கிப்பது அவசியமாகின்றது.

*ஏசாயா 1:16-18; 55:7; ரோமர் 6:23.*

# 16
# நற்கிரியைகள்

1. கடவுள் தன்னுடைய பரிசுத்த வார்த்தையில் கட்டளையிட்டுள்ள கிரியைகள் மட்டுமே நன்மையானவை என்று எண்ணப்பட வேண்டும். மனிதன் தனது குருட்டு ஆர்வத்தால் செய்தவையும், வெளிப்பார்வைக்கு நல்ல நோக்கத்தோடு செய்தவைபோல் தோற்றமளிக்கும் அவனுடைய செயல்களும் நன்மையானவையல்ல. ஏனெனில் அவை பரிசுத்த வேதத்தால் அனுமதிக்கப்படாதவை.

*ஏசாயா 29:13; மீகா 6:8; மத்தேயு 15:9; எபிரெயர் 13:21.*

2. மெய்யாகவே நன்மையான கிரியைகளும், கடவுளுடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து செய்யப்படுகின்ற கிரியைகளுமே உண்மையான விசுவாசத்தின் சான்றுகளாக காணப்படுகின்றன. இவற்றின் மூலம் விசுவாசிகள் தங்களுடைய நன்றியைத் தெரிவிப்பதோடு தங்களது இரட்சிப்பின் நிச்சயத்துவத்தையும் பெலப்படுத்தி, தமது சக விசுவாசிகளையும் கட்டியெழுப்புகிறார்கள். அத்தோடு, இதன் மூலம் தங்களுடைய கிறிஸ்தவ சாட்சியையும் அலங்கரித்து தமது எதிரிகளின் நற்செய்திக்கெதிரான வாதங்களையும் தகர்க்கிறார்கள். மொத்தத்தில் தம்மைக் கிறிஸ்துவின் புதிய படைப்பாக மாற்றிய கடவுளை அவர்கள் மகிமைப்படுத்துகிறார்கள். அவ்வாறாக நித்திய ஜீவனை அடையும்படியாக பரிசுத்தத்தை வெளிப்படுத்தும் கனிகளைக் கொடுக்கிறார்கள்.

*சங்கீதம் 116:12,13; மத்தேயு 5:16; ரோமர் 6:22; எபேசியர் 2:10; பிலிப்பியர் 1:11; 1 தீமோத்தேயு 6:1; யாக்கோபு 2:18,22; 1 பேதுரு 2:15; 2 பேதுரு 1:5-11; 1 யோவான் 2:3,5.*

**3.** *நற்கிரியைகளைச் செய்யும் வல்லமை கிறிஸ்துவின் ஆவியின் மூலமாகவே வருவதன்றி விசுவாசிகளில் இயற்கையாகக் காணப் படுவதில்லை. ஆவியினிடத்தில் இருந்து ஆரம்பத்தில் அவர்கள் பெற்றுக்கொண்ட கிருபைகளைத்தவிர, அவர் விரும்பத்தக்க கிரியைகளை முழுச்சித்தத்தோடும் வல்லமையோடும் செய்வதற்கு ஆவியின் அனுக்கிரகம் அவர்களுக்குத் தேவைப்படுகின்றது. இதனால் ஆவியின் இவ்விசேஷ செல்வாக்கு இல்லாவிட்டால் அவர்கள் தங்கள் கடமையில் ஊக்கத்துடன் ஈடுபடாது கவனக்குறைவாக இருந்துவிடலாம் என்பது பொருளல்ல. மாறாக அவர்கள் தங்களில் உள்ள தேவ கிருபையை இந்நடவடிக்கைகளில் ஈடுபடும்படி ஊக்குவிக்க வேண்டும்.*

*ஏசாயா 64:7; யோவான் 15:4,5; 2 கொரிந்தியர் 3:5; பிலிப்பியர் 2:12,13; எபிரெயர் 6:11,12.*

**4.** *தங்களுடைய கீழ்ப்படிவின் மூலம் இவ்வுலக வாழ்க்கையில் இயலக்கூடிய உயர்ந்த நிலையை அடையும் விசுவாசிகள் கடவுள் அவர்களிடம் எதிர்பார்ப்பதையும்விட மேலான கிரியைகளைச் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். அத்தோடு, அவர்கள் தங்களுடைய கடமைப்படி செய்யவேண்டிய கிரியைகளும் பூரணமற்ற நிலையிலேயே காணப்படுகின்றன.*

*யோபு 9:2,3; கலாத்தியர் 5:17; லூக்கா 19:8.*

**5.** *நாம், எந்தவிதத்திலும் நமது மிகச்சிறப்பான கிரியை களாலும்கூட கடவுளிடம் இருந்து பாவ மன்னிப்பையோ நித்திய ஜீவனையோ அடையும் தகுதியைப் பெற்றுவிட முடியாது. ஏனெனில், நமது சிறப்பான கிரியைகளும்கூட எந்தவிதத்திலும் வரவிருக்கும் மகிமைக்கு சமமாக இருப்பதில்லை. அத்தோடு, கடவுளுக்கும் நமக்கும் இடையில் எல்லையற்ற இடைவெளி இருப்பதோடு, நமது எந்தவிதமான கிரியைகளும் அவருக்கு நன்மை பயக்கவோ அல்லது நாம் முன்பு செய்த பாவக்கடன்களைத் தீர்க்கக் கூடிய விலையாகவோ அமைய முடியாது. நாம் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்து முடித்தபின், நமது கடமையை மட்டுமே செய்தவர்களாய் தகுதியற்ற ஊழியராய்க் காணப்படுகிறோம். அதுமட்டுமல்லாமல் நமது*

*கிரியைகள் நன்மையானவையாக இருக்கும் வேளையில் அவை கடவுளின் ஆவியினால் செய்யப்பட்டவையாகவே இருக்கின்றன. அவை நம்முடைய கிரியைகளாக இருக்கும் வேளையில் அவை கறைபடிந்து, பலவீனத்துடன், பூரணமற்று கடவுளின் கோரிக்கைகளின் தரத்தைச் சந்திக்க இயலாத நிலையில் இருக்கின்றன.*

*சங்கீதம் 143:2; ஏசாயா 64:6; ரோமர் 3:20; 4:6; கலாத்தியர் 5:22,23; எபேசியர் 2:8,9.*

**6.** *இருந்தபோதும், விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் அவர்களுடைய கிரியைகளும் கிறிஸ்துவுக்குள் செய்யப்பட்டவையாகவே கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வுலக வாழ்வில் அவை குற்றமற்றவையாகவோ அல்லது கடவுளின் கண்டனத்திற்கு அப்பாற்பட்டவையாகவோ இல்லாமல் பலவீனமுடையவையாகவும், பூரணமற்றவையாகவும் காணப்படினும் கடவுள் கிறிஸ்துவுக்குள் அவற்றை நோக்கும்போது, அவற்றில் நேர்மையானவற்றை மனத்திருப்தியுடன் ஏற்று வெகுமதியும் அளிக்கிறார்.*

*மத்தேயு 25:21,23; எபேசியர் 1:6; எபிரெயர் 6:10; 1 பேதுரு 2:5.*

**7.** *கடவுளால் கட்டளையிடப்பட்ட கிரியைகள், அவற்றைச் செய்தவர்களுக்கும் ஏனையோருக்கும் உயர்ந்த பயன்களை அளிப்பவையாக இருந்தபோதும் மறுபிறப்படையாத மனிதர்கள் அவற்றைச் செய்யும்போது அவை பாவமானவையாகவே காணப்படுகின்றன. இதற்குக் காரணங்களாக கீழ்வருவனவற்றைக் கூறலாம்: இக்கிரியைகள் விசுவாசத்தினால் சுத்திகரிக்கப்படாத இருதயத்திலிருந்து உருவானவை. அத்தோடு அவை வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் விதத்தில் அமைந்திருக்கவில்லை. அவை கடவுளின் மகிமையை இறுதியான இலக்காகக் கொண்டும் அமையவில்லை. எனவே, அவை கடவுளைத் திருப்திப்படுத்தவோ அல்லது கிருபையை அடையும்படி ஒருவரைத் தயார் செய்யவோ இயலாதவை. இருப்பினும் அவற்றைச் செய்வதைவிட செய்யாமலிருப்பது மிகப் பாவமானதும், கடவுளால் வெறுக்கப்படுவதுமாகும்.*

*ஆதியாகமம் 4:5; 1 இராஜாக்கள் 21:27,29; 2 இராஜாக்கள் 10:30; யோபு 21:14,15; ஆமோஸ் 5:21,22; மத்தேயு 6:2,5; 25:41-43; ரோமர் 9:16; 1 கொரிந்தியர் 13:1; தீத்து 3:5; எபிரெயர் 11:4,6.*

# 17
# பரிசுத்தவான்களின் விடாமுயற்சி

1. *பரிசுத்தவான்கள் கடவுளால் திட்ப உறுதியாய் அழைக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு கடவுளால் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள். தெரிந்துகொள்ளப்பட்ட அனைவருக்கும் உரித்தான அரிதான விசுவாசத்தை அவர் அவர்களுக்குக் கொடுத்துள்ளார். அத்தகைய ஆசீர்வாதங்களை அடைந்தவர்கள் கிருபையின் ஸ்தானத்திலிருந்து முழுதாகவோ அல்லது இறுதியிலோ விழ முடியாது. ஆனால், அவர்கள் நிச்சயமாக இறுதிவரை விடாமுயற்சியுடன் கிருபையின் தொடக்கத்தில் இருந்து நித்திய ஜீவனை அடைவார்கள். ஏனெனில் அவர்களை அழைத்து ஈவுகளைத் தந்த கடவுள் ஒருபோதும் மனம்மாறமாட்டார். இதன் விளைவாக அவர்களில் அவர் நிலைபேறான வாழ்விற்கு இட்டுச் செல்லும் விசுவாசம், மனந்திரும்புதல், அன்பு, மகிழ்ச்சி, நம்பிக்கை ஆகியவற்றோடு ஆவியின் அனைத்துக் கிருபைகளையும் தொடர்ந்து தோற்றுவிப்பதோடு அவற்றை ஊட்டி வளர்க்கவும் செய்கிறார். அநேக புயல்களும், வெள்ளங்களும் அவர்களைத் தாக்கினாலும் விசுவாசத்தின் மூலம் அவர்கள் உறுதியாக நிறுவப்பட்டுள்ள தளத்தின் மீதிருந்தும் கல்லின் மீதிருந்தும் ஒருபோதும் அவர்களை அசைக்க முடியாது. அவநம்பிக்கை, பிசாசின் சோதனைகள் ஆகியவை சில காலம் கடவுளுடைய அன்பு, ஆறுதல் என்பவற்றிலிருந்து அவர்களை வழிதவறிப்போகச் செய்தாலும் மாறாக் கடவுள் தொடர்ந்தும் அவர்களுடைய கடவுளாயிருப்பதோடு அவர்கள் கிறிஸ்துவால் விலை கொடுத்து வாங்கப்பட்ட தங்களுடைய உடைமையை அனுபவிக்கும்வரை கடவுள் தன்னுடைய வல்லமையினால் அவர்களைப் பாதுகாத்து இரட்சிப்பார். ஏனெனில், அவருடைய உள்ளங்கையில் அவை செதுக்கப்பட்டிருப்பதோடு அநாதிக்காலம் முதலே அவர்களுடைய பெயர்கள் ஜீவ புத்தகத்திலே எழுதப்பட்டுள்ளன.*

*சங்கீதம் 89:31,32; மல்கியா 3:6; யோவான் 10:28,29; 1 கொரி 11:32; பிலிப்பியர் 1:6; 2 தீமோ 2:19; 1 யோவான் 2:19.*

**2.** *பரிசுத்தவான்களின் விடாமுயற்சி அவர்களுடைய சுய சித்தத்தில் தங்கியிராமல் மாறாத்தன்மையுடைய தெரிந்து கொள்ளப்படுதலின் ஆணையில் தங்கியுள்ளது. இது பிதாவாகிய கடவுளின் இலவசமான, மாறாத்தன்மையுடைய அன்பிலும், கிறிஸ்துவின் வல்லமையிலும், நிச்சயமான வெற்றியை அளிக்கும் அவருடைய தகுதியிலும், பரிந்துரைத்தலிலும், அவரோடு பரிசுத்தவான்களுக்குள்ள ஐக்கியத்திலும், கடவுளின் ஆணையிலும், பரிசுத்தவான்களில் வாசம் செய்யும் ஆவியின் நிலையான தன்மையிலும், அவர்கள் பங்குகொள்ளும் தெய்வீகத் தன்மையிலும் இறுதியாக கிருபையின் உடன்படிக்கையின் நிபந்தனைகளிலும் தங்கியுள்ளது. இக்காரணிகள் அனைத்தும் பரிசுத்தவான்களின் விடாமுயற்சியின் நிச்சயத்திற்கும், தவறாநிலைக்கும் உத்தரவாதம் அளிக்கின்றன.*

*எரேமியா 32:40; யோவான் 14:19; ரோமர் 5:9,10; 8:30; 9:11,16; எபிரெயர் 6:17,18; 1 யோவான் 3:9.*

**3.** *பிசாசாலும் உலகத்தாலும் ஏற்படும் சோதனைகளினாலும் அவர்களுக்குள்ளிருக்கும் பாவம் மேலோங்குவதற்கு எத்தனிப்ப தாலும், அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு கடவுளால் கொடுக்கப்பட்டுள்ள சாதனங்களை அவர்கள் கடைப்பிடிக்கத் தவறுவதாலும் பெருங்கேடான பாவங்களைப் பரிசுத்தவான்கள் செய்ய நேரிடலாம். அவர்கள் இந்நிலையில் சில காலம் தொடர்ந்திருந்து கடவுளின் வெறுப்பைச் சம்பாதித்து, பரிசுத்த ஆவியையும் துக்கப்படுத்தி, தங்களுடைய கிருபைகளுக்கும் ஊறு செய்து, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி மனச்சாட்சியையும் காயப்படுத்தி ஏனையோரையும் துன்பப் படுத்தி அவமானத்துக்குள்ளாக்கலாம். இதன் மூலம் அவர்கள் கடவுளின் தண்டனைகளை அனுபவிக்கிறார்கள். இருப்பினும் அவர்கள் பரிசுத்தவான்களாதலால் அவர்களுடைய மனந்திரும்புதல் புதுப்பிக்கப்பட்டு இறுதிவரை கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தின் மூலம் பாதுகாக்கப்படுகிறார்கள்.*

*2 சாமுவேல் 12:14; சங்கீதம் 32:3,4; 51:10,12; ஏசாயா 64:5,9; மத்தேயு 26:70,72,74; லூக்கா 22:32,61,62; எபேசியர் 4:30.*

# 18
# கிருபையின் நிச்சயமும் இரட்சிப்பும்

**1.** *தாம் இரட்சிக்கப்பட்டிருப்பதாகவும், கடவுளின் தயவு தம்மோடிருப்பதாகவும் தற்காலிக விசுவாசிகளும், மறுபிறப்பு அடையாதவர்களும் தவறான நம்பிக்கையையும், மாம்சத்திற்குரிய ஊக்கத்தையும் கொண்டிருந்தாலும் அத்தகைய நம்பிக்கைகள் இறுதியில் வீண்போகும். இருப்பினும், இயேசு கிறிஸ்துவை மெய்யாக விசுவாசித்து, உண்மையுடன் அவரில் அன்பு செலுத்தி, நல்மனச்சாட்சியுடன் அவருக்காக வாழ்பவர்களின் இவ்வுலக வாழ்வில் தாம் கிருபையின் ஸ்தானத்தில் இருக்கும் நிச்சயத்தை அடைவர். அவர்கள் தேவ மகிமையின் நம்பிக்கையிலும் மகிழ்ச்சி அடைவார்கள். அத்தகைய நம்பிக்கை அவர்களை ஒருபோதும் அவமானத்திற்குள்ளாக்காது.*

*யோபு 8:13,14; மத்தேயு 7:22,23; ரோமர் 5:2,5; 1 யோவான் 2:3; 3:14,18,19,21,24; 5:13.*

**2.** *இரட்சிப்பின் நிச்சயமானது ஊகத்திற்கிடமானதோ அல்லது தவறும் இயல்புடைய நம்பிக்கையில் அமைந்ததோ அல்ல. ஆனால், அது நற்செய்தியில் வெளிப்படுத்தப்படும் கிறிஸ்துவின் இரத்தத்தையும், நீதியையும் ஆதாரமாகக் கொண்ட தவறிழைக்காத விசுவாசத்தின் நிச்சயமாக இருக்கிறது. (இது கிறிஸ்துவின் வரலாற்று நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டது). அத்தோடு, இது பரிசுத்த ஆவியின் உள்ளான கிருபையின் அடையாளங்களையும் ஆதாரமாகக் கொண்டது. ஏனெனில், அவ்வித கிருபைகளுக்கே கடவுள் வாக்குத்தத்தங்களை அளிக்கிறார். மேலும் இது நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோமென்று நம்முடைய ஆவியினூடாக சாட்சியளிப்பதோடு, இரட்சிப்பின் நிச்சயமான அனுபவத்தின் மூலம் நமது இருதயத்தைத் தாழ்மையுடனும் பரிசுத்தமாகவும் வைத்திருக்கும் புத்திரசுவிகார ஆவியின் சாட்சியையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.*

*ரோமர் 8:15,16; எபிரெயர் 6:11,17-19; 2 பேதுரு 1:4,5,10,11; 1 யோவான் 3:1-3*

3. இத்தவறிழையாத இரட்சிப்பின் நிச்சயமானது இரட்சிப்பின் இன்றியமையாத பகுதியல்ல. மாறாக மெய்யான விசுவாசி அதை அடைவதற்கு அநேக காலம் காத்திருந்து பலவிதமான துன்பங்களுக்கூடாகவும் செல்ல நேரிடும். அற்புதமான வெளிப்படுத்தல் எதன் மூலமாகவும் அல்லாமல் கடவுளால் இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆவியின் மூலமாக அறிந்து கிருபையின் சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் இந்நிச்சயத்தை விசுவாசி அடைய முடியும். ஆகவே, தனது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்ளுவதில் முழுமுயற்சி எடுப்பது ஒவ்வொரு விசுவாசியினுடையதும் கடமையாக இருக்கின்றது. இதைச் செய்வதன் மூலம் பரிசுத்த ஆவியில் மேலான சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் அடைவதோடு, கடவுளிடம் மேலான அன்பையும் நன்றியறிதலையும் கொண்டு கடமையுணர்வுடைய தமது கீழ்ப்படிவில் உற்சாகமும் அதிக வல்லமையும் பெறுகிறார்கள். மேற்கூறப்பட்டவையே இரட்சிப்பின் நிச்சயத்துவத்தினால் ஏற்படுபவையாக இருப்பதோடு மனிதர்கள் இழிவான வாழ்க்கை வாழ்வதற்கு இந்நிச்சயம் வழிகாட்டியாக இருக்கமாட்டாது என்பதற்கும் உறுதியான சான்றுகளாக உள்ளன.

*சங் 77:1-12; சங் 88; 119:32; ஏசாயா 50:10; ரோமர் 5:1,2,5; 6:1,2; 14:17; தீத்து 2:11,12,14; எபிரெயர் 6:11,12; 1 யோவான் 4:13.*

4. மெய்யான விசுவாசிகள் தமது இரட்சிப்பின் நிச்சயம் சில வேளைகளில் உயர்ந்தும், சில வேளைகளில் தாழ்ந்தும் இருப்பதை உணருவார்கள். இது அதனைப் பாதுகாப்பதில் அவர்கள் கவனக்குறைவாக இருந்ததனாலோ அல்லது அவர்கள் குறிப்பிட்ட ஒரு பாவத்தைச் செய்து தங்கள் மனச்சாட்சியைக் காயப்படுத்தி ஆவியைத் துக்கப்படுத்தியதாலோ அல்லது திடீரென்றோ தீவிரமாகவோ ஏற்பட்ட சோதனையாலோ அல்லது கடவுள் தமது முகதரிசனத்தை மீளப்பெற்றுக்கொண்டு தம்மில் பயமுள்ளவர்களின் மீது இருள்படியச் செய்வதாலோ ஏற்படலாம். எது நடந்த போதிலும் கடவுளால் பிறந்த புதிய சுபாவம், விசுவாச வாழ்க்கை, கிறிஸ்துவின் மீதும் சக விசுவாசிகளின் மீதும் உள்ள அன்பு, இதய சுத்தி மற்றும் கடமையுணர்வு ஆகிய இன்றியமையாத காரியங்கள் நிலைத்திருக்கும். இவற்றின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் அவர்களில் செய்யும் செயலின் மூலமாகவும் அவர்களது இரட்சிப்பின் நிச்சயம் ஏற்ற

*காலத்தில் புதுப்பிக்கப்படும். அதற்கிடைப்பட்ட காலத்தில் இந்தக் காரியங்களின் செல்வாக்குகள் அவர்கள் முற்றிலும் அழிந்து போகாவண்ணம் அவர்களைப் பாதுகாக்கின்றது.*

*சங்கீதம் 30:7; 31:22; 45:5,11; 51:8,12,14; 77:7,8; 116:11; உன்னதப்பாட்டு 5:2,3,6; புலம்பல் 3:26-31; லூக்கா 22:32; 1 யோவான் 3:9.*

# 19

# கடவுளின் நீதிச் சட்டம்

**1.** *ஆதாமின் இருதயத்தில் எழுதப்பட்டிருந்த அவனுடைய முழுமையான கீழ்ப்படிவைக் கோரும் நியாயப்பிரமாணத்தை கடவுள் அவனுக்குத் தந்தார். அத்தோடு முக்கியமாக நன்மை தீமையை அறியத்தக்க மரத்திலிருந்த கனியை உணவாகக் கொள்ளக்கூடாது என்றும் அவனுக்குக் கட்டளையிட்டிருந்தார். இதன்மூலம் ஆதாமும், அவனது வழித்தோன்றல்களும், தனிப்பட்டதும், முழுமையானதும், துல்லியமானதும், தொடர்ச்சியானதுமான கீழ்ப்படிவிற்கு உட்படுத்தப்பட்டார்கள். கடவுள் இதனை நிறைவேற்றுபவர்களுக்கு ஜீவனை அளிப்பதாக வாக்குறுதியளித்ததோடு நியாயப்பிரமாணத்தை மீறுபவர்கள் மரணத்தைச் சந்திக்க நேரிடும் என்று பயமுறுத்தி தனது நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கக்கூடிய வல்லமையையும், ஆற்றலையும் அவனுக்குத் தந்தார்.*

*ஆதி 2:16,17; பிரசங்கி 7:29; ரோமர் 10:5; கலாத்தியர் 3:10,12.*

**2.** *முதன் முதலாக மனிதனின் இருதயத்தில் எழுதப்பட்டிருந்த நியாயப்பிரமாணம் மனிதன் பாவத்தில் வீழ்ந்த பின்பும் தொடர்ந்து பூரணமான நீதிச்சட்டமாக இருந்து கடவுளால் இரு கற்களில் எழுதப்பட்டு பத்துக்கட்டளைகளாக சீனாய் மலையில் கொடுக்கப்பட்டது. முதல் நான்கு கட்டளைகளும் கடவுளுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளையும், ஏனைய ஆறு கட்டளைகளும் சக மனிதர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளையும் எடுத்து விளக்குகின்றன. இப்பத்துக்*

*கட்டளைகளும் அறவிதி நெறிமுறை ஒழுங்குச் சட்டங்கள் (ஒழுக்க நீதிச்சட்டங்கள்) என அழைக்கப்படுகின்றன.*

*உபாகமம் 10:4; ரோமர் 2:14,15.*

**3.** *இவ்வொழுக்க நீதிச் சட்டங்களைத் தவிர கடவுள் இஸ்ரவேல் மக்களுக்கு வரப்போகும் காரியங்களை எடுத்துக்காட்டும் மாதிரிகளாக அமைந்த சடங்குமுறைச் சட்டங்களையும் அளித்தார். அவை இரு முக்கிய பகுதிகளாக அமைந்துள்ளன. ஒரு குழுவில் அவர்களுடைய ஆராதனையோடு சம்பந்தப்பட்ட, கிறிஸ்துவையும் அவருடைய கிருபைகள், நடவடிக்கைகள், பட்ட துன்பங்கள், நமக்காக அவர் பெற்றெடுத்த ஆசீர்வாதங்கள் என்பவற்றை முன்குறித்துணர்த்தும் சடங்குகள் அமைகின்றன. இன்னுமொரு குழு ஒழுக்கக் கடமைகள் பற்றிய பல்வேறு போதனைகளைக் கொண்டிருந்தது. மெய்யான மேசியாவும், நியாயப்பிரமாணத்தை அளிப்பவருமான இயேசு கிறிஸ்து புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பிதாவினால் தரப்பட்ட வல்லமையைக் கொண்டு சடங்குமுறைச் சட்டங்களை அகற்றும்வரை அவை அனைத்தும் கடவுளின் கட்டளையின்படி பின்பற்றப்பட வேண்டும்.*

*1 கொரிந்தியர் 5:7; எபேசியர் 2:14,16; கொலோசெயர் 2:14,16,17; எபிரெயர் 10:1.*

**4.** *கடவுள் இஸ்ரவேல் மக்களுக்கு அவர்கள் ஒரு நாடாகத் தொடர்ந்திருக்கும்வரை பயன்படக் கூடிய பல்வேறு நீதிமுறைச் சட்டங்களையும் அளித்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் காணப்பட்ட காரணங்களினால் அல்லாமல் அவற்றில் அடங்கி யுள்ள நீதித்தத்துவங்களின் மாறாத்தன்மையினால் அவை இன்றும் செல்லுபடியானவை.*

*1 கொரிந்தியர் 9:8-10.*

**5.** *நீதிமான்களாக்கப்பட்டவர்களும் ஏனையோரும் எப்போதுமே ஒழுக்க நீதிச் சட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவற்றில் அடங்கியுள்ள காரியங்களுக்காகவும் படைப்பாளியானவரும், நியாயப்பிரமாணத்தை அளித்தவருமான கடவுளின் அதிகாரத்திற்கு மதிப்பளித்தும் இதை அவர்கள் செய்ய வேண்டியவர்களாக உள்ளார்கள். நற்செய்தியின் மூலம் கிறிஸ்து நாம் இதற்குக் கீழ்ப்படிய வேண்டிய நிலையை அகற்றிவிடாமல்,*

*அதற்குக் கீழ்ப்படிய வேண்டிய நமது கடமைப்பொறுப்பை மேலும் வலிமைப்படுத்துகிறார்.*

*மத்தேயு 5:17-19; ரோமர் 3:31; 13:8-10; யாக்கோபு 2:8,10-12.*

**6.** *மெய்யான விசுவாசிகளை நீதிமான்களாக்கவோ அல்லது கண்டனத்துக்குள்ளாக்கவோ பயன்படும் கிரியைகளின் உடன்படிக்கையாக நியாயப்பிரமாணம் இருக்கும்வரை அது அவர்களுக்கு எந்தப் பயனையும் அளிக்காது. ஆனால், வேறு சில வழிகளில் அது அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரும் பலனளிப்பதாக இருக்கிறது. அது அவர்களுக்கு கடவுளுடைய சித்தத்தையும் அவர்களுடைய கடமையையும் எடுத்துக்கூறும் வாழ்க்கை நியதியாக இருப்பதோடு, அதன்படி நடக்கும்படியாக அவர்களைக் கட்டாயப்படுத்தியும் வழி நடத்துகிறது. அவர்களுடைய இருதயத்திலும், வாழ்க்கையிலும் காணப்படும் பாவத்தின் பாதிப்புகளை வெளிப்படுத்தி அதன்மூலம் அவர்கள் தங்களை நியாயப்பிரமாணத்தின் மூலம் சுயபரிசோதனை செய்து, தங்களுடைய பாவங்களுக்காக மிக ஆழமாக மனம் வருந்தி அவற்றின் பொருட்டு தாழ்மையுணர்வடைந்து பாவங்களை மேலும் வெறுக்கவும் செய்கிறது. அதே சமயம் நியாயப்பிரமாணம் கிறிஸ்துவின் அவசியத்தை அவர்களுக்கு தெளிவாக உணர்த்துவதோடு கிறிஸ்து நியாயப்பிரமாணத்திற்கு பூரணமாகக் கீழ்ப்படிந்ததையும் விளக்குகிறது. அவ்வாறே நியாயப்பிரமாணம் பாவத்தைக் கண்டிப்பதோடு மறுபிறப்படைந்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் காணப்படும் பாவத்தைத் தூண்டும் கேடான எண்ணங்களுக்கெதிராகப் போராடவும் தூண்டுகிறது. மறுபிறப்படைந்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்தும், அதன் தடையற்ற கண்டிப்பான விதிகளிலிருந்தும் விடுதலை அடைந்திருந்தாலும் நியாயப்பிரமாணத்தின் பயமுறுத்தல்கள் அவர்களுடைய பாவங்கள் எத்தகைய தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்பதையும், அப்பாவங்களால் இவ்வுலக வாழ்வில் அவர்கள் பட வேண்டிய துன்பங்களையும் விளக்கப் பயன்படுகிறது. நியாயப்பிரமாணத்தோடு தொடர்புடைய வாக்குறுதிகள் விசுவாசிக்கு அவர்களுடைய கீழ்ப்படிவை கடவுள் ஏற்பதையும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது எத்தகைய ஆசீர்வாதங்கள் கிட்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால், நியாயப்பிரமாணத்தை கிரியைகளின் உடன்படிக்கையாக அவர்கள் கருதினால் இவ்வாசீர்வாதங்களை அவர்கள் அடைய*

*முடியாது. நியாயப்பிரமாணம் செய்யும்படித் தூண்டும் நன்மைகளை மட்டும் செய்து தீமைகளை ஒருவர் செய்யாதிருப்பது அவர் கிருபையை அனுபவிக்காமல் நியாயப்பிரமாணத்தின் கீழ் தொடர்ந்திருக்கிறார் என்பதற்கு தகுந்த சான்றல்ல.*

*ரோமர் 3:20; 6:12-14; 7:7; 8:1; 10:4; கலாத்தியர் 2:16; 1 பேதுரு 3:8-13.*

7. *நாம் இதுவரை பார்த்த நியாயப்பிரமாணத்தின் பயன்கள் நற்செய்தியின் கிருபைக்கு முரணானவையாக அல்லாமல் அத்தோடு ஒத்துப்போகிறவையாயுள்ளன. ஏனெனில், கிறிஸ்துவின் ஆவி மனிதனின் மாம்ச சித்தத்தை அடக்கி, நியாயப்பிரமாணத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு மனிதன் பின்பற்றும்படி எதிர்பார்க்கப்படும் கடவுளுடைய சித்தத்தை அவன் சுதந்திரத்தோடும், ஆர்வத்தோடும் செய்யும்படிச் செய்கிறது.*

*எசேக்கியேல் 36:27; கலாத்தியர் 3:21.*

# 20
# நற்செய்தியும் அதன் செல்வாக்கும்

1. *மனிதனுடைய பாவத்தால் கிரியைகளின் உடன்படிக்கை முறிக்கப்பட்டு அதனால் ஜீவன் அளிக்க முடியாமல் போனதால் கடவுள் தன்னுடைய கருணையால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அழைத்து அவர்களுள் மனந்திரும்புதலையும், இரட்சிப்பையும் கொண்டுவரும் பொருட்டு பெண்ணின் வித்தாகிய கிறிஸ்துவைத் தர விருப்பத்துடன் வாக்களித்தார். இவ்வாக்குறுதியில், பாவிகள் மனந்திரும்பவும், இரட்சிப்பைப் பெறவும், பயன்தரக்கூடிய சாதனமான நற்செய்தியின் உள்ளடக்கம் வெளிப்படுத்தப்படுகிறது.*

*ஆதியாகமம் 3:15; வெளிப்படுத்தல் 7:9.*

2. *கடவுளின் வார்த்தையின் மூலமாக மட்டுமே மனிதனுக்கு கிறிஸ்துவின் இவ்வாக்குறுதியும், இரட்சிப்பும் வெளிப்படுத்தப் படுகிறது. படைப்பின் கிரியைகளோ, பராமரிப்போ, இயற்கை*

வெளிப்படுத்தும் அறிவோ மனிதர்களுக்கு கிறிஸ்துவையும் அவரது கிருபையையும் பொதுவாகவோ அல்லது மறைமுகமாகவோகூட வெளிப்படுத்த முடியாது. நற்செய்தியின் வாக்குறுதி மூலமாக வெளிப்படும் கிறிஸ்துவைப் பற்றிய அறிவைப் பெறாத மனிதர்கள் இரட்சிப்பின் விசுவாசத்தையோ மனந்திரும்புதலையோ இவற்றின் மூலமாக ஒருபோதும் அடைய முடியாது.

*நீதிமொழிகள் 29:18; ஏசாயா 25:7; 60:2,3; ரோமர் 1:17; 10:14,15,17.*

**3.** கடவுளின் இறையாண்மையுள்ள சித்தத்தினாலும், நல்விருப்பத்தினாலும் நற்செய்தியானது அதனுடைய வாக்குறுதிகளோடும் நற்செய்தியின் கீழ்ப்படிவுக்குரிய கட்டளைகளோடும், நாடுகளுக்கும் குறிப்பிட்ட தனி மனிதர்களுக்கும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் வெளிப்படுத்தப்பட்டது. நற்செய்தியை வெளிப்படுத்தும் வாக்குறுதியானது எல்லோருக்கும் பொதுவான அறிவின் மூலம் வளர்ந்த மனிதனுடைய இயற்கைத் திறமைகளின் மூலம் ஏற்பட்ட எந்த நற்பணியின் அடிப்படையிலும் கொடுக்கப்படவில்லை. அத்தகைய வளர்ச்சி ஒருபோதும் ஏற்பட வில்லை, ஏற்படவும் முடியாது. ஆகவே, எல்லாக் காலங்களிலும் கடவுளுடைய சித்தத்தின் ஆலோசனையின்படி தனிப்பட்ட மனிதனுக்கும் அல்லது நாடுகளுக்கும் சில குறிப்பிடப்பட்ட இடங்களிலோ அல்லது பரவலான பகுதிகளிலோ நற்செய்தியின் பிரசங்கமானது வெவ்வேறான அளவுகளில் (பரிமாணங்களில்) கொடுக்கப்படுகிறது.

*சங்கீதம் 147:20; அப்போஸ்தலர் 16:7; ரோமர் 1:18-32.*

**4.** கிறிஸ்துவையும், இரட்சிக்கும் கிருபையையும் வெளிப்படுத்தும் புற சாதனமாக நற்செய்தி மட்டுமே அமைவதன்றி இப்பணியைப் பூரணமாக நிறைவேற்றக்கூடிய தன்மையையும் கொண்டுள்ளது. ஆனால், பாவத்தில் மரித்துள்ள மனிதன் மறுபிறப்படைவதற்கு இதைவிட மேலான செயல் அவசியமாகின்றது. அதாவது, மனிதனின் ஆத்துமாவின் எல்லாப் பகுதிகளிலும் ஒரு புதிய ஆவியின் வாழ்வை ஏற்படுத்தக்கூடிய திட்ப உறுதியும், அசைக்க முடியாததுமான பரிசுத்த ஆவியின் கிரியை அவசியமாகின்றது. இதைத் தவிர்த்த வேறெந்த செயலும் மனிதன் மனந்திரும்ப உதவாது.

*சங்கீதம் 110:3; யோவான் 6:44; 1 கொரி 2:14; 2 கொரி 4:4,6; எபேசியர் 1:19,20.*

# 21
# கிறிஸ்தவ சுதந்திரமும் மனச்சாட்சியின் சுதந்திரமும்

1. *எல்லா விசுவாசிகளுக்கும் கிறிஸ்து விலை கொடுத்து வாங்கிய சுதந்திரம் நற்செய்தியில் இயல்பாகவே காணப்படுகின்றது. பாவத்தினால் ஏற்படும் குற்ற உணர்விலிருந்தும், அதைத் தொடர்ந்து ஏற்படும் கண்டனத்திலிருந்தும், தேவகோபத்திலிருந்தும், கடவுளின் நியாயப்பிரமாணத்தின் கடுமையான சாபத்திலிருந்தும் பெறும் விடுதலையை இச்சுதந்திரம் கொண்டுள்ளது. அத்தோடு தீமையான இவ்வுலகிலிருந்தும், சாத்தானுக்கு நம்மை அடிமையாக்கும் எல்லாக் காரியங்களிலிருந்தும், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் நமக்கு விடுதலை தருகின்றது. மேலும், துன்பங்களினால் ஏற்படும் மனக்கசப்பிலிருந்தும், மரண வேதனையின் பயத்திலிருந்தும், நித்திய தண்டனையிலிருந்தும் விடுதலை தந்து கல்லறையின் வெற்றியையும் அளிக்கிறது. மேலும், இச்சுதந்திரம் ஓர் அடிமை தன்னை ஆளுபவரில் கொண்டிருக்கும் பயத்தோடல்லாமல், குழந்தையின் பயத்துடனும், வணக்கத்துடனும் ஆத்துமாக்கள் கடவுளிடம் சுதந்திரமாக அவருக்குக் கீழ்ப்படியுமாறு வரும்படிச் செய்கிறது.*

இவ்வாசீர்வாதங்கள் அனைத்தையும் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளும் அனுபவித்திருந்தாலும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு இச்சுதந்திரம் மேலும் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. யூத சபை மேல் இருந்த சடங்குமுறைச் சட்டங்களின் சுமைகளிலிருந்து விடுதலையையும், கடவுளின் கிருபாசனத்தின் முன் மேலான தைரியத்தோடு வரக்கூடிய வாய்ப்பையும், கிறிஸ்தவ யுகத்திற்கு முன் வாழ்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த அளவிற்கு மேலான ஆவியின் அனுபவத்தையும் பெருமளவிற்கு இச்சுதந்திரம் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு வழங்குகிறது.

*லூக்கா 1:73-75; யோவான் 7:38,39; அப்போஸ்தலர் 26:18; ரோமர் 8:3,15,28; 1 கொரிந்தியர் 15:54-57; கலாத்தியர் 1:4; 3:9,13,14; 2 தெசலோனிக்கேயர் 1:10; எபிரெயர் 10:19-21; 1 யோவான் 4:18.*

**2.** *கடவுள் மட்டுமே மனச்சாட்சியின் ஆண்டவராக இருக்கிறார். அவருடைய வார்த்தைக்கு எதிரான, அதில் அடங்கியிராத சாதாரண மனிதர்களின் எந்தப் போதனைகளின் நிர்ப்பந்தத்திற்கும் நாம் உட்படவோ, அவற்றிற்குக் கீழ்ப்படியவோ அவசியமற்று அனைத்துக் கட்டுப்பாடுகளில் இருந்தும் நமது மனச்சாட்சிக்கு அவர் விடுதலை அளித்துள்ளார். அத்தகைய போதனைகளை ஏற்று அந்நிர்ப்பந்தங்களுக்கு கட்டுப்படுவது மெய்யான மனச்சாட்சியின் சுதந்திரத்தைக் காட்டிக்கொடுக்கும் செயலாகும். மனிதர்கள் தங்களுடைய சக மனிதர்களை கண்மூடித்தனமாக, கேள்வி முறையற்ற கீழ்ப்படிவிற்கு உட்படுத்த முனைவது நியாயமற்றதும், மெய்யான கிறிஸ்தவ சுதந்திரத்தை அழிக்கும் செயலுமாகும்.*

*மத்தேயு 15:9; அப்போஸ் 4:19,29; ரோமர் 14:4; 1 கொரி 3:5; 7:23; 2 கொரி 1:24; கொலோ 2:20,22,23; யாக்கோபு 4:12.*

**3.** *கிறிஸ்தவ சுதந்திரத்தின் பெயரில் பாவத்தை செய்பவர்கள் அல்லது பாவ இச்சைகளை வளர்ப்பவர்கள் நற்செய்திக் கிருபையின் பிரதான நோக்கத்தைத் தவறான வழியில் பயன் படுத்தி சுய அழிவைத் தேடிக்கொள்பவர்களாக உள்ளார்கள். இதன் மூலம் அவர்கள், தேவனுடைய மக்கள் தமது எதிரிகளின் செயல்களிலிருந்து விடுபட்டு வாழ்நாள் முழுவதும் பரிசுத்தத்துடனும், நீதியுடனும், பயத்தோடும் கடவுளுக்குப் பணி செய்யத் துணைபுரியும் கிறிஸ்தவ சுதந்திரத்தின் முக்கிய நோக்கத்தைப் பூரணமாக அழிக்கிறார்கள்.*

*லூக்கா 1:74,75; ரோமர் 6:1,2; கலாத்தியர் 5:13; 2 பேதுரு 2:18,21.*

# 22

# ஆராதனையும் ஆண்டவரின் நாளும்

**1.** *அனைத்தின் மீதும் ஆளுகையையும், இறை ஆண்மையையும் கொண்ட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று உள்ளுணர்வு காட்டுகின்றது. அவர் நீதியானவரும், நல்லவருமாக இருந்து எல்லோருக்கும் நல்லதையே செய்கிறார். ஆகவே, மனிதர்கள்*

தங்கள் முழு இருதயத்தோடும், ஆவியோடும், வல்லமையோடும் அவருக்குப் பயந்து, அவரில் அன்புகூர்ந்து, அவரைப் போற்றி, தொழுது, அவரில் நம்பிக்கை வைத்து அவருக்குப் பணி செய்யவேண்டும். ஆனால், ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரே வழிபாட்டு முறையை தனது சித்தத்திற்கிணங்க கடவுளே ஏற்படுத்தியுள்ளார். ஆகவே, நமது வழிபாட்டு முறைகள் அவரது வெளிப்படுத்தப்பட்டுள்ள சித்தத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவரை, மனிதனால் உருவாக்கப்பட்ட வழிபாட்டு முறைகள் மூலமாகவோ அல்லது பிசாசின் வழிநடத்தலின்படியோ வழிபட முடியாது. கடவுளுடைய வார்த்தையின் மூலம் ஆணையிட்டுத் தரப்படாத அனைத்து வழிபாட்டு முறைகளும், கண்களுக்குப் புலனாகின்ற கடவுளைப்பற்றிய அடையாளங்களும் (உதாரணம்: சிலைகள், கடவுளைப்பற்றிய படங்கள் போன்றவை) தெளிவாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

*யாத்தி 20:4-6; உபாகமம் 12:32; எரேமியா 10:7; மாற்கு 12:33.*

**2.** பிதா குமாரன் ஆவியாகிய கடவுளுக்கு மட்டுமே ஆராதனை உரியது. தேவ தூதர்களையோ, பரிசுத்தவான்களையோ வேறு எந்தப் படைப்புயிர்களையோ ஆராதிக்கக்கூடாது. மனிதன் பாவத்தில் வீழ்ந்தபின் மத்தியஸ்தர் ஒருவரின்றி கடவுளை வழிபட முடியாது; கிறிஸ்துவின் மத்தியஸ்தம் மட்டுமே ஏற்றக்கொள்ளத் தக்கதாகும்.

*மத்தேயு 4:9,10; 28;19; யோவான் 5:23; 14:6; ரோமர் 1:25; கொலோசெயர் 2:18; 1 தீமோத்தேயு 2:5; வெளிப்படுத்தல் 19:10.*

**3.** இயற்கையாகவே ஆராதனையின் ஒரு பகுதியாக எல்லா மனிதர்களும் தம்மை நோக்கி ஜெபம் செய்து நன்றி கூற வேண்டுமென்று கடவுள் கோருகிறார். ஆனால், அத்தகைய ஜெபங்கள் ஏற்றக்கொள்ளத்தக்கதாக அமைய பின்வருவன இன்றியமையாதவையாகும்: அவை கடவுளுடைய குமாரனின் நாமத்தில் அளிக்கப்படுவதோடு ஆவியின் துணையோடு, கடவுளுடைய சித்தத்திற்கு இணங்கியதாக அமைய வேண்டும். அதுமட்டுமன்றி அவை பயபக்தியும், தாழ்மையும், ஆர்வமும், விடாமுயற்சியும் உடையவையாய், விசுவாசம், அன்பு, அறிவாற்றல் ஆகியவற்றையும் கொண்டிருக்க வேண்டும். எல்லோருக்கும் புரியும் மொழியிலேயே கூட்டு ஜெபம் செய்யப்படல் வேண்டும்.

*சங்கீதம் 65:2; 95:1-7; யோவான் 14:13,14; ரோமர் 8:26; 1 கொரிந்தியர் 14:16,17; 1 யோவான் 5:14.*

**4.** நீதியான காரியங்களுக்கும், இப்போது வாழ்பவர்களுக்கும், இனிப் பிறக்கப்போகும் எல்லாவித மனிதர்களுக்கும் ஜெபம் செய்யப்படல் வேண்டும். ஆனால், மரணத்திற்கேதுவான பாவத்தைச் செய்தவர்களுக்கும், இறந்தவர்களுக்கும் நாம் ஜெபம் செய்யக்கூடாது.

*2 சாமுவேல் 7:29; 12:21-23; 1 தீமோ 2:1,2; 1 யோவான் 5:16.*

**5.** வேதாகமத்தை வாசிப்பதும், கடவுளின் வார்த்தையை அருளுரை செய்வதும், அதைக் கேட்பதும், சங்கீதங்களாலும், கீர்த்தனைகளாலும், ஞானப்பாட்டுக்களாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம் பண்ணுவதும், திருமுழுக்கையும், திருவிருந்தையும் கடைப்பிடித்தல் ஆகிய தெய்வீக வழிபாட்டு முறைகள் கீழ்ப்படிவோடும், அறிவுபூர்வமாகவும், விசுவாசத்தோடும், மரியாதையோடும் நடத்தப்படல் வேண்டும். அத்தோடு சிறப்பான காலங்களில் பயபக்தியோடு கூடிய தாழ்மையுடன் உணவு மறுப்பும் (உபாவசம்), நன்றி நவிலலும் பரிசுத்தத்தோடும், மரியாதையோடும் நடத்தப்படல் வேண்டும்.

*யாத்திராகமம் 15:1-9; எஸ்தர் 4:16; சங்கீதம் 107; யோவேல் 2:12; மத்தேயு 28:19,20; லூக்கா 8:18; 1 கொரிந்தியர் 11:26; எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16; 1 தீமோத்தேயு 4:13; 2 தீமோத்தேயு 4:2.*

**6.** இச்சுவிசேஷக் காலங்களில் நாம் ஆராதனை செய்பவராலோ அல்லது ஆராதனை நடத்தப்படும் இடத்தாலோ ஜெபமோ அல்லது ஆராதனையோ வேறு எந்த அம்சங்களோ பயனிறைவடைவதில்லை; ஏனெனில் ஆவியோடும், உண்மையோடும் கடவுளை நாம் எல்லா இடங்களிலும் ஆராதிக்க வேண்டும். உதாரணமாக, குடும்ப வழிபாட்டினாலும், தங்களுடைய தனி வழிபாட்டினாலும், பொதுவான சபை வழிபாட்டினாலும் கிறிஸ்தவர்கள் அவரை ஆராதிக்க வேண்டும். இத்தகைய வழிபாடுகள் கடவுளுடைய வார்த்தையின் அடிப்படையிலும், பராமரிப்பின் அடிப்படையிலும் செய்யப்பட வேண்டும். விசுவாசிகள் அவற்றை சுய உணர்வோடு நிராகரிக்கவோ, அல்லது கவனக்குறைவினால் தவிர்க்கவோ கூடாது.

*சங்கீதம் 55:17; மல்கியா 1:11; மத்தேயு 6:6; யோவான் 4:21; அப்போஸ்தலர் 2:42; 10:2; 1 தீமோத்தேயு 2:8; எபிரெயர் 10:25.*

**7.** *இயற்கையின் விதிகளின்படி எல்லோருக்கும் பொதுவான, கடவுளால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலம் அவருடைய ஆராதனைக்காக ஒதுக்கப்பட வேண்டும்; ஆகவே, தனது வார்த்தையின் மூலம் கடவுள் தனக்காக ஏழு நாட்களில் ஒரு நாளை பரிசுத்த ஓய்வு நாளாக அமையும்படியாக நிர்ணயித்துள்ளார். இது எல்லா மனிதர்களும், எல்லாக் காலங்களிலும் கடைப்பிடிக்க வேண்டிய மாறாத, ஒழுக்கம் சார்ந்த, தொடர்ந்து பின்பற்ற வேண்டிய கட்டளையாகும். உலகம் ஆரம்பித்த காலம் முதல் கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள்வரை ஓய்வு நாள் வாரத்தின் இறுதி நாளாக இருந்தது. ஆனால், கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளுக்குப்பின் இது வாரத்தின் முதல் நாளாக மாற்றமடைந்து ஆண்டவரின் நாள் என்று அழைக்கப்படுகிறது. வாரத்தின் இறுதி நாளான ஏழாவது நாள் ஆராதனையின் நாளாக இருந்த முறை ஒழிக்கப்பட்டுவிட்டதால், வாரத்தின் முதல் நாள் உலக முடிவு பரியந்தம் கிறிஸ்தவ ஓய்வு நாளாகத் தொடர வேண்டும்.*

*யாத்திராகமம் 20:8; அப்போஸ்தலர் 20:7; 1 கொரிந்தியர் 16:1,2; வெளிப்படுத்தல் 1:10.*

**8.** *தமது இருதயத்தை ஆராதனைக்காக முறையாகத் தயார் செய்து உலகத்துக்குரிய காரியங்களையும், வீட்டுக் காரியங்களையும் ஏற்கனவே நிறைவேற்றி முடித்தபின் தமது சொந்த வேலைகள் சம்பந்தமானதும், வேலைத்தளம் சம்பந்தமானதும், உலக இன்பப்பொழுதுபோக்கு பற்றியதுமான சிந்தனைகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து, முழுநாளிலும் பரிசுத்தமாக இளைப்பாறி பொதுவானதும், தனிப்பட்டதுமான கடவுள் வழிபாட்டுக் காரியங்களுக்கும், இன்றியமையாததும், கருணைக்கிடமானதுமான கடமைகளுக்கும் தம்மை ஒப்புக்கொடுத்து மனிதர்கள் ஓய்வு நாளைக் கடவுளுக்கென்று பரிசுத்தமாக வைத்திருத்தல் அவசியம்.*

*நெகேமியா 13:15-22; ஏசாயா 58:13; மத்தேயு 12:1-13.*

# 23
# நீதியுள்ள ஆணையிடுதலும் உறுதிமொழிகளும்

1. *நியாயபூர்வமான உறுதிமொழி எடுத்தல் ஒரு சமய வழிபாட்டுச் சடங்காகும். இவ்வாறாக உறுதிமொழி எடுப்பவர் கடவுளின் சத்தியத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் மனதில் கொண்டு பயபக்தியுடன் தான் எடுத்த உறுதிமொழிக்கு சாட்சியாக இருக்குமாறும், அவ்வுறுதிமொழியில் காணப்படும் உண்மை அல்லது பொய்யின் அடிப்படையில் தன்னை நியாயந் தீர்க்கும்படியும் கடவுளை வேண்டுகிறார்.*

*யாத்திராகமம் 20:7; உபாகமம் 10:20; 2 நாளாகமம் 6:22,23; எரேமியா 4:2.*

2. *பயபக்தியுடனும், மரியாதையுடனும் கடவுளின் பெயரில் எடுக்கப்படும் உறுதிமொழியே நியாயபூர்வமானது. பயபக்திக்குரியதும், மரியாதையுள்ளதுமான அப்பெயரின் மூலம் கண்மூடித்தனமாகவோ, வீணாகவோ அல்லது வேறு எந்தப் பெயரைப் பயன்படுத்தியோ உறுதிமொழி எடுப்பது பாவமானதும், வெறுக்கப்பட வேண்டியதுமான செயலுமாகும். முக்கியமானதும், பெருஞ்சிறப்பு வாய்ந்ததுமான காரியங்களுக்காகவும், சத்தியம் நிலை நாட்டப்பட வேண்டிய நிலைமையிலும், சச்சரவுகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வருமுகமாகவும் எடுக்கப்படும் உறுதிமொழிகளுக்கு கடவுளின் வார்த்தை ஒப்புதலளிக்கின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சட்டபூர்வமான அதிகாரமுள்ளவர்களால் சுமத்தப்படும் நியாயபூர்வமான உறுதிமொழிகளை எடுப்பது அனுமதிக்கப்படுகின்றது.*

*நெகேமியா 13:25; மத்தேயு 5:34,37; 2 கொரிந்தியர் 1:23; எபிரெயர் 6:16; யாக்கோபு 5:12.*

3. *கடவுளின் வார்த்தைக்கு இணக்கமான உறுதிமொழிகளை எடுப்பவர்கள் தாம் செய்யும் காரியத்தின் பொறுப்பை உணர்வதோடு, தமக்குத் தெரிந்த உண்மையைத் தவிர வேறு எதையும் கூறாமலிருப்பதில் மிகக் கவனம் செலுத்தல் அவசியம்.*

*கண்மூடித்தனமாகவும், பொய்யாகவும், வீணாகவும், எடுக்கப்படும் உறுதிமொழிகளால் கடவுள் எரிச்சலூட்டப்படுகிறார். இதனால் ஒரு நாடே துன்பத்திற்குள்ளாகியது.*

*லேவியராகமம் 19:12; எரேமியா 23:10.*

**4.** *எடுக்கப்படும் உறுதிமொழி சாதாரணமானதாகவும், வழமையாகப் பயன்படுத்தப்படும் சொற்களைக் கொண்டும் அமைந்திருப்பதோடு இரு பொருள் கொண்டதாகவோ அல்லது அரைகுறை மனத்துடனோ இருக்கக்கூடாது.*

*சங்கீதம் 24:4.*

**5.** *கடவுளுக்காக மட்டுமேயன்றி வேறெந்த படைப்புயிர் களுக்காகவும் வாக்குறுதிகள் எடுக்கப்படக்கூடாது. எடுக்கப்படும் வாக்குறுதிகள் இம்மையும் பிழையாது, உண்மையோடு கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஆனால், ரோமன் கத்தோலிக்க சபையோடு தொடர்புடைய, திருமணமாகாமல் மதகுருவாக இருந்து எடுக்கப்படும் வாக்குறுதிகளும், வறிய வாழ்க்கை முறையும், இடைவிடாத கீழ்ப்படிதலும் மேலான பரிசுத்தத்தின் அடையாளங்களாக இல்லாமல் வெறும் மூட நம்பிக்கையாகவும், பாவத்தின் சூழ்ச்சிகளுமாக இருப்பதால் கிறிஸ்தவர்கள் இவற்றைப் பின்பற்றக்கூடாது.*

*ஆதியாகமம் 28:20-22; சங்கீதம் 76;11; மத்தேயு 19:11; 1 கொரிந்தியர் 7:2,9; எபேசியர் 4:28.*

# 24
# குடிமக்களின் அரசு

**1.** *உலகத்தில் எல்லோருக்கும் மேலான ஆண்டவரும் அரசருமாகிய கடவுள் மக்களின் நன்மைக்காகவும், தனது மகிமைக்காகவும் தன்கீழாக அரசையும், உயர் அதிகாரிகளையும் சமுதாயத்தை ஆள்வதற்காக ஏற்படுத்தியுள்ளார். இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும், நல்வழிகளில் நடக்கும் எல்லா*

*மனிதர்களையும் பாதுகாத்து ஊக்குவிப்பதற்காகவும், தீமை செய்பவர்களைத் தண்டிப்பதற்காகவும் கடவுள் அவர்களுக்கு வாழ்க்கை மீதும், மரணத்தின் மீதும் அதிகாரத்தைத் தந்துள்ளார்.*

*ரோமர் 13:1-4.*

**2.** *கிறிஸ்தவர்கள் பொதுப்பணிக்கு அழைக்கப்படும்போது அதனை ஏற்று அக்கடமைகளைச் செய்வது நியாயபூர்வமானதே. அவ்வாறு செய்யும்போது அவர்கள் பணிபுரியும் அரசுகள், நாடுகளின் நல்ல சட்டங்களுக்கு ஏற்புடையதான நீதியையும் சமாதானத்தையும் நிலைத்திருக்கச் செய்வது அவர்களது கடமையாகும்.*

*2 சாமுவேல் 23:3; சங்கீதம் 82:3,4; லூக்கா 3:14.*

**3.** *மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக ஆட்சியாளர்களைக் கடவுள் நியமித்திருப்பதால் கிறிஸ்தவர்கள் வெறுமனே தண்டனை யிலிருந்து தப்புவதற்காகவன்று தங்களுடைய மனச்சாட்சியின் நிமித்தமும், ஆண்டவரின் பொருட்டும் தம்மை ஆளுபவர்களின் எல்லா நீதிச்சட்டங்களுக்கும் அடங்கி நடத்தல் வேண்டும். அரசர்களுக்காகவும், அதிகாரத்தில் இருக்கும் அனைவருக்காகவும், அவர்களுடைய ஆட்சிக்குக் கீழுள்ளவர்கள் பக்திவிருத்தியும், நேர்மையும் உடையவர்களாய் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ விண்ணப்பங்களையும் ஜெபத்தையும் செய்தல் வேண்டும்.*

*ரோமர் 13:5-7; 1 தீமோத்தேயு 2:1,2; 1 பேதுரு 2:17.*

# 25
# திருமணம்

**1.** *ஓர் ஆணுக்கும், பெண்ணுக்குமிடையிலேயே எப்போதும் திருமணம் நடக்க வேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் ஆண் ஒரு மனைவிக்குமேல் வைத்திருப்பதோ அல்லது ஒரு பெண் ஒரு கணவனுக்கு மேல் வைத்திருப்பதோ நீதியானதல்ல.*

*ஆதியாகமம் 2:24; மல்கியா 2:15; மத்தேயு 19:5,6.*

*2. கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் துணையாக அமையவும் கடவுளுடைய நீதிப்படி மனித வர்க்கம் அதிகரிக்கவும், ஒழுக்கமற்ற வாழ்விலிருந்து அவர்களைத் தடுக்கவும் கடவுள் திருமணத்தை ஏற்படுத்தினார்.*

*ஆதியாகமம் 1:28; 2:18; 1 கொரிந்தியர் 7:2,9.*

**3.** *அனைத்து மனிதர்களும் அறிவுபூர்வமான மனம் விரும்பி திருமண உறவிற்கு உட்படலாம். ஆனால், கிறிஸ்தவர்கள் ஆண்டவருக்குள்ளாகத் திருமணம் செய்வது அவர்களுடைய கடமையாகும். இதனால் கிறிஸ்தவ விசுவாசிகள் புற சமயத்தைச் சார்ந்தவர்களுடனும், உருவ வழிபாடு செய்பவர்களுடனும் திருமணத் தொடர்பு வைத்தலாகாது. பக்திவிருத்தியுடையவர்கள் தீயவாழ்க்கை வாழ்பவர்களுடனும், கண்டிப்புக்குரிய போதனைகளைப் பின்பற்றுபவர்களுடனும் திருமணத்தில் பங்குகொள்வது தகுதியற்ற செயலாகும்.*

*நெகேமியா 13:25-27; 1 கொரி 7:39; 1 தீமோ 4:2; எபி 13:4.*

**4.** *வேதாகமத்தால் தடைசெய்யப்பட்டுள்ள இரத்தத் தொடர் புடைய உறவினர்களுடன் திருமணத் தொடர்பு வைத்தலாகாது. அத்தகைய முறைகேடான தொடர்புகள் ஏற்படின் நாட்டுச் சட்டங்களின் மூலமாகவோ அல்லது அத்தகைய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாலோ அவ்வுறவுகள் சட்டபூர்வமாக்கப்பட முடியாது. அத்தோடு அத்தகைய வாழ்க்கை நடத்துபவர்கள் கணவனும் மனைவியுமாக ஒருபோதும் முறையாக வாழவும் முடியாது.*

*லேவியராகமம் 18; மாற்கு 6:18; 1 கொரிந்தியர் 5:1.*

# 26
# திருச்சபை

1. *ஆவியின் உள்ளார்ந்த கிரியையையும், கிருபையின் சத்தியத்தையும் பொருத்தளவில் உலகளாவிய சபை கண்ணுக்குப் புலனாகாததொன்றாகும். அது திருச்சபையின் தலையாகிய*

*கிறிஸ்துவுக்குள் முன்பிருந்தவர்களும், தற்போதிருக்கிறவர்களும், இனிப்பிறக்கப் போகின்றவர்களுமாகிய தெரிந்துகொள்ளப் பட்டவர்களின் முழு எண்ணிக்கையையும் தன்னுள் கொண்டுள்ளது. திருச்சபையானது எல்லோரையும் எல்லோருக்குள்ளும் நிறைவு செய்யும் கிறிஸ்துவில் நிறைவு பெறும் அவரது மனைவியும் சரீரமுமாகும்.*

*எபேசியர் 1:10,22,23; 5:23,27,32; கொலோ 1:18; எபிரெயர் 12:23.*

**2.** *தங்களுடைய விசுவாசத்தை நற்செய்திக்கு எதிரான முரண்பாடுள்ள தவறான போதனைகளின் மூலம் அழிக்க முற்படாமலும், பரிசுத்தமற்ற வாழ்க்கை வாழாமலும் நற்செய்தியை விசுவாசித்து கிறிஸ்துவின் மூலம் கடவுளுக்கு அடிபணிந்து வாழும் உலகெங்குமுள்ள அனைவரும் கண்களுக்குப் புலனாகும் பரிசுத்தவான்களாகக் கருதப்பட வேண்டும். எல்லா உள்ளூர் சபைகளும் அத்தகையோரையே கொண்டு அமைய வேண்டும்.*

*அப்போஸ் 11:26; ரோமர் 1:7; 1 கொரி 1:2; எபேசியர் 1:20-22.*

**3.** *உலகில் காணப்படும் எல்லாத் தூய சபைகளும் கலவைகளாலும், தவறுகளாலும் பாதிக்கப்பட்டபோதும் அவற்றில் சில கிறிஸ்தவ சபைகள் என்று அழைக்கப்பட முடியாதபடிக்கு மேலும் கீழான நிலையை அடைந்து 'பேய்களின் குடியிருப்பாக' உள்ளன. இருப்பினும் தன்னை விசுவாசித்து, தனது பெயரைத் தாங்கியவர்களைக் கொண்ட இராஜ்யத்தைக் கிறிஸ்து இவ்வுலகில் எப்போதுமே கொண்டிருந்ததோடு உலக முடிவுவரையும் அத்தகைய இராஜ்யத்தைக் கொண்டிருப்பார்.*

*சங்கீதம் 72:17; 102:28; மத்தேயு 16:18; 1 கொரிந்தியர் 5; 2 தெசலோனிக்கேயர் 2:11,12; வெளிப்படுத்தல் 2; 3; 12:17; 18:2.*

**4.** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே திருச்சபையின் தலைவராக உள்ளார். பிதாவின் நியமனத்தின் மூலம் சபையை அழைக்கவும், நிறுவவும், கட்டளையிடவும், ஆளவும் சகல அதிகாரமும் வேறெவருக்கும் இல்லாதவகையில் இறை ஆண்மையுடன் அவருக்கே தரப்பட்டுள்ளது. ரோமன் கத்தோலிக்க சபைத் தலைவரான போப்* (Pope) *அந்திக் கிறிஸ்துவாக இருப்பதாலும், வேதத்தில் 'பாவமனிதன்' என்றும், 'கேட்டின் மகன்' என்றும் அழைக்கப்பட்டிருப்பதாலும், கடவுளுக்கெதிராகவும் கிறிஸ்துவுக்கெதிராகவும் திருச்சபையில் தன்னை உயர்த்தி மகிமைப்*

*படுத்திக் கொள்வதாலும் எந்தவிதத்திலும் திருச்சபையின் தலைவராக அமைய முடியாது. கர்த்தர் தம்முடைய வருகையின் பிரசன்னத்தாலே இவர்களை அழிப்பார்.*

*மத்தேயு 28:18-20; எபே 4:11,12; கொலோ 1:18; 2 தெசலோ 2:2-9.*

5. *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனக்குக் கொடுக்கப் பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழு முகமாக வேதபிரசங்கத்தின் மூலமாகவும், தனது ஆவியின் மூலமாகவும் பிதாவினால் தன்னிடம் கொடுக்கப்பட்டுள்ளவர்களை உலகத்திலிருந்து தன்னிடத்தில் அழைத்துக்கொள்கிறார். அவ்வாறு, தம்மால் அழைக்கப்படுபவர்கள் திருச்சபைகளை நிறுவி அவற்றின் பொது நலன்களில் அக்கறைகொண்டு, பொது வழிபாட்டையும் இவ்வுலகில் இருக்கும்வரை நடத்த வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார்.*

*மத்தேயு 18:15-20; 28:20; யோவான் 10:16; 12:32.*

6. *கிறிஸ்துவின் தெய்வீக அழைப்பின் காரணமாகவும், அவரது அழைப்பிற்கு கீழ்ப்படிவதின் அடையாளமாக கிறிஸ்துவின் மீது தாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதன் மூலமும், அதன்படி வாழ்வதாலும், இத்திருச்சபை அங்கத்தவர்கள் பரிசுத்தவான் களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் போதனை களின்படி ஆர்வத்துடன் ஒருவரோடொருவர் ஐக்கியத்தில் வர உடன்படுவதுடன், கடவுளின் சித்தத்தின்படி ஆண்டவருக்கும் மற்றவர்களுக்கும் தம்மை ஒப்புக்கொடுத்து நற்செய்தியின் கோரிக்கைகளையும் முழு மனத்துடன் ஏற்றுக்கொள்கின்றனர்.*

*அப்போஸ் 2:41,42; 5:13,14; ரோமர் 1:7; 1 கொரி 1:2; 2 கொரி 9:13.*

7. *வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவ சித்தத்தின்படி ஒன்று சேர்க்கப்பட்ட இத்திருச்சபைகள் ஒவ்வொன்றிற்கும் அவர்கள் கடைப்பிடிக்கும்படியாக தாம் நியமித்துள்ள வழிபாட்டு முறைகளையும், ஒழுங்கு முறைகளையும் கொண்டு நடத்த அவசியமான அனைத்து வல்லமையையும், அதிகாரத்தையும் ஆண்டவர் தந்துள்ளார். அத்தோடு, இவ்வதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தத் தேவையான எல்லாக் கட்டளைகளையும், விதிகளையும் அவர் திருச்சபைகளுக்குத் தந்துள்ளார்.*

*மத்தேயு 18:17,18; 1 கொரிந்தியர் 5:4,5,13; 2 கொரிந்தியர் 2:6-8.*

**8.** கிறிஸ்துவின் சித்தப்படி ஒன்று சேர்க்கப்பட்டு பூரணமாக ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் உள்ளூர் சபை பணியாளர்களையும், அங்கத்தவர்களையும் கொண்டிருக்கும். அழைக்கப்பட்டதும், ஒன்று சேர்க்கப்பட்டதுமான சபைகளினால் கிறிஸ்துவின் நியதிப்படி தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படும் பணியாளர்கள்: மூப்பர்களும், உதவியாளர்களுமாவர். கடவுளால் ஆணையிடப்பட்டவற்றை நிறைவேற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளைச் செய்வதும், தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்காக தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதும் அவர்களது சிறப்பான பொறுப்பாகும். உலக முடிவுவரை அத்தகைய ஏற்பாடுகள் திருச்சபையில் தொடர வேண்டும்.

*அப்போஸ்தலர் 20:17,28; பிலிப்பியர் 1:1.*

**9.** கிறிஸ்துவின் நியமனத்தின்படி சபையில் மூப்பராக இருக்கத் தகுதி பெற்று, பரிசுத்த ஆவியிடம் அதற்குரிய வரங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் முழுச் சபையின் உடன்பாட்டுடன் அத்தகைய பணிக்குத் தெரிவுசெய்யப்பட்டு அழைக்கப்பட வேண்டும். சபையில் ஏற்கனவே மூப்பர்கள் இருந்தால், இவ்வாறாகத் தெரிவு செய்யப்பட்டவர்களை அவர்கள் உபவாசம் செய்து, கரங்களை வைத்து ஜெபித்து பயபக்தியுடன் அப்பணிக்கு நியமிக்க வேண்டும். இதேவிதமாகவே உதவிக்காரர்களும் முழு சபையின் உடன்பாட்டுடன் தெரிவு செய்யப்பட்டு கரங்களை வைத்து ஜெபித்து அப்பணிக்கு நியமிக்கப்பட வேண்டும்.

*அப்போஸ்தலர் 6:3,5,6; 14:23; 1 தீமோத்தேயு 4:14.*

**10.** போதகர்கள் கிறிஸ்துவின் சபைகளில் வேதத்தைப் போதித்தும், ஜெபித்தும் மனிதர்களுடைய ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருப்பதன் மூலமும் கிறிஸ்துவின் பணியில் விடாது தொடர்ச்சியாக ஈடுபட வேண்டியிருப்பதால் அவர்கள் பணிபுரியும் சபைகள் தங்களுடைய திறமைக்குத் தகுந்தபடி அவர்களுக்குத் தகுந்த மரியாதைகளை அளிப்பதுமட்டுமன்றி இவ்வுலகிற்குரிய தொழில்களில் அவர்கள் ஈடுபட வேண்டிய அவசியமின்றி வசதியுடன் வாழ்வதற்கும், மற்றவர்களுக்கு விருந்துபசாரம் செய்வதற்கும் தேவையான சகல பொருளாதார உதவிகளையும் செய்ய வேண்டியது அவர்கள் பணிபுரியும் சபைகளின் கடமைப் பொறுப்பாகும். இவ்வாறான ஏற்பாட்டை இயற்கை விதியும், நற்செய்தியை அறிவிக்கிறவர்கள்

*நற்செய்தியினாலேயே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று ஆணையிட்டுள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தெளிவான கட்டளைகளும் கோருகின்றன.*

*அப்போஸ்தலர் 6:4; 1 கொரிந்தியர் 9:6-14; கலாத்தியர் 6:6,7; 1 தீமோத்தேயு 3:2; 5:17,18; 2 தீமோத்தேயு 2:4; எபிரெயர் 13:17.*

11. *தொடர்ந்து ஊக்கத்துடன் வேதத்தைப் பிரசங்கிப்பது மூப்பர்கள் அல்லது போதகர்களின் கடமையாயினும் அது அவர்களுக்கு மட்டுமே முழுமையாக உரித்தான பணி என்று கருதப்படக்கூடாது. ஏனெனில், பரிசுத்த ஆவியானவர் தகுந்த வரங்களைக் கொடுத்து ஏனையோரையும் அத்தகைய ஊழியத்திற்கு தகுதியாக்கலாம். இந்நிலையில் அத்தகைய மனிதர்கள் திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவ்வூழியத்திற்கு அழைக்கப்பட்டபின் அதைச் செய்ய வேண்டும்.*

*அப்போஸ்தலர் 11:19-21; 1 பேதுரு 4:10,11.*

12. *சந்தர்ப்பம் கூடிவருகின்ற வேளையில் எல்லா விசுவாசிகளும் உள்ளூர் சபைகளுடன் தம்மை இணைத்துக்கொள்ளும் கடமைப் பொறுப்பைக் கொண்டுள்ளார்கள். ஆகவே, கிறிஸ்துவின் கட்டளையின்படி திருச்சபை ஐக்கியத்தின் சலுகைகளை அனுபவிக்க அனுமதிக்கப்பட்ட அனைவரும் அதன் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கும், அரசாங்கத்திற்கும் கட்டுப்படுகிறார்கள்.*

*1 தெசலோனிக்கேயர் 5:14; 2 தெசலோனிக்கேயர் 3:6,14,15.*

13. *திருச்சபையின் ஏனைய அங்கத்தவர்களின் நடத்தையினால் பாதிப்புற்ற ஓர் அங்கத்தவர் அத்தகைய நிலைமையைத் தீர்க்குமுகமாக வேதத்தில் காணப்படும் போதனைகளின்படி நடந்த பின், சபையின் சமாதானத்தைக் குழப்பாமலும், மற்ற அங்கத்தவர்களால் பாதிக்கப்பட்ட காரணத்தால் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமலிருக்காமலும், திருநியம அனுசரிப்பு ஆகியவற்றைத் தவிர்க்காமலும், சபையானது இதைக்குறித்து மேலும் நடவடிக்கைகளை எடுக்கும்வரை கிறிஸ்துவில் தங்கியிருத்தல் வேண்டும்.*

*மத்தேயு 18:15-17; எபேசியர் 4:2,3.*

14. *உள்ளூர் சபைகளைச் சார்ந்த அங்கத்தவர்கள் அனைவரும் எல்லா இடங்களிலுமுள்ள எல்லாச் சபைகளின் நன்மைக்காகவும்,*

வளர்ச்சிக்காகவும் ஜெபம் செய்யக் கடமைப்பட்டிருப்பதோடு எல்லாச் சமயங்களிலும் தம்மிடம் வரும் எல்லா விசுவாசிகளுக்கும் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரம்புகளுக்குட்பட்டு தங்களுடைய வரங்களாலும், கிருபைகளாலும் உதவ வேண்டும். ஆகவே, கடவுளின் பராமரிப்பு அளிக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி திருச்சபைகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு ஐக்கியத்தில் வந்து இத்தகைய பலாபலன்களை அனுபவிக்க வேண்டும்.

*சங்கீதம் 122:6; ரோமர் 16:1,2; எபேசியர் 6:18; 3 யோவான் 8-10.*

15. கோட்பாடு அல்லது சபை ஆட்சியமைப்பு குறித்து பிரச்சனைகளோ அல்லது கருத்து வேறுபாடுகளோ ஏற்பட்டு அதில் தனியொரு சபையோ அல்லது பல சபைகளோ சம்பந்தப்பட்டிருந்து அவற்றின் சமாதானம், ஐக்கியம், வளர்ச்சி ஆகியவை ஆபத்தை எதிர்நோக்கினாலோ அல்லது ஒரு சபையின் அங்கத்தவர்கள் சத்தியத்திற்கும், சபை ஆட்சி முறைக்கும் புறம்பான சபையின் ஒழுங்கு நடவடிக்கை முறைகளால் பாதிக்கப்பட்டிருந்தாலோ ஐக்கியத்தில் வரும் பல சபைகள் இத்தகைய சந்தர்ப்பங்களில் தங்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மூலம் கருத்து வேறுபாடுள்ள விஷயம் பற்றி கிறிஸ்துவின் சித்தப்படியான தங்களுடைய ஆலோசனையை எல்லாச் சபைகளுக்கும் வழங்கலாம். அதேவேளை அவ்வாறு கூடிவரும் பிரதிநிதிகள் தமக்கு எத்தகைய சபை அதிகாரங்களும் வழங்கப்படவில்லை என்பதையும், தங்களுடைய முடிவுகளை திருச்சபைகள் மீது திணிக்கும் அதிகாரமும் தமக்கு இல்லை என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

*அப்போஸ் 15:2,4,6,22,23,25; 2 கொரி 1:24; 1 யோவான் 4:1.*

# 27
# பரிசுத்தவான்களின் ஐக்கியம்

1. எல்லாப் பரிசுத்தவான்களும் விசுவாசத்தாலும், பரிசுத்த ஆவியாலும் தங்களுடைய தலையாகிய கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் அவர்கள் கிறிஸ்துவோடு

*ஒரே ஆளாக இணைந்துவிடுகிறார்கள் என்று பொருளல்ல. இருப்பினும், அவர்கள் கிறிஸ்துவின் கிருபைகளிலும், துன்பங்களிலும், மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும், மகிமையிலும் ஐக்கியத்தை அனுபவிக்கிறார்கள். அத்தோடு அவர்கள் ஒருவரோடொருவர் அன்பால் இணைக்கப்பட்டிருப்பதால் ஏனையோரின் அனுபவங்களிலும், கிருபைகளிலும் பங்குகொள்வதோடு ஆவிக்குரியதும், இவ்வாழ்வுக்குரியதுமான காரியங்களில் பரஸ்பரம் நன்மை தரக்கூடிய பகிரங்கமானதும், தனிப்பட்டதுமான சேவைகளை செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள்.*

*யோவான் 1:16; ரோமர் 1:12; 6:5,6; 1 கொரிந்தியர் 3:21-23; 12:7; கலாத்தியர் 6:10; எபேசியர் 4:15; பிலிப்பியர் 3:10; 1 தெசலோனிக்கேயர் 5:11,14; 1 யோவான் 1:3; 3:17,18.*

**2.** *தமது விசுவாச அறிக்கையின்படி பரஸ்பர நலன்களை ஊக்குவிக்கும் கடவுள் வழிபாடு மற்றும் வேறு சிறப்பான சேவைகள் மூலம் பரிசுத்தவான்கள் பரிசுத்த ஐக்கியத்தையும் ஆத்மீகக் கூட்டுறவையும் பராமரிக்கத் தம்மை ஒப்புக்கொடுத்துள்ளனர். அவர்கள் தங்களுடைய ஆற்றலுக்கும் வசதிக்கும் தகுந்தவாறு இவ்வாழ்வுக்குரிய காரியங்களில் ஒருவருக்கொருவர் துணைசெய்ய வேண்டிய கடமைப்பாட்டையும் கொண்டுள்ளனர். நற்செய்திக் கட்டளையின்படி பரிசுத்தவான்கள் தம்மைச் சுற்றிவர இருக்கும் குடும்பத்தார் மத்தியிலும், சபை மக்கள் மத்தியிலும் பங்குகொள்ளும் இவ்வைக்கியம் கடவுள் அளிக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, எல்லா இடங்களிலும் ஆண்டவருடைய பெயரைத் தாங்கி நிற்கும் எல்லா விசுவாசிகள் மத்தியிலும் விஸ்தரிக்கப்பட வேண்டும். அதேவேளை பரிசுத்தவான்கள் இவ்விதமாக ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளும் ஐக்கியம் எந்த மனிதனும் சொந்தமாகக் கொண்டுள்ள சொத்துக்களின் உரிமையை அகற்றவோ அல்லது மீறவோ மாட்டாது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.*

*அப்போஸ்தலர் 5:4; 11:29,30; 1 கொரிந்தியர் 12:14-27; எபேசியர் 4:28; 6:4; எபிரெயர் 3:12,13; 10:24,25.*

# 28
# திருமுழுக்கும், திருவிருந்தும்

1. *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து திருமுழுக்கு மற்றும் திருவிருந்தாகிய திருநியமங்களைத் தெளிவாகவும் இறை ஆண்மையுடனும் ஏற்படுத்தி தனது திருச்சபையில் உலக முடிவுவரை அவை தொடரும்படியாக நியமித்துள்ளார்.*

*மத்தேயு 28:19,20; 1 கொரிந்தியர் 11:26.*

2. *இப்பரிசுத்த திருநியமங்கள் கிறிஸ்துவின் ஆணையின்படி தகுதிபெற்று அழைக்கப்பட்டவர்களால் மட்டுமே அனுசரிக்கப்பட வேண்டும்.*

*மத்தேயு 28:19; 1 கொரிந்தியர் 4:1.*

# 29
# திருமுழுக்கு

1. *திருமுழுக்கு இயேசு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட புதிய ஏற்பாட்டு திருநியமமாகும். திருமுழுக்கு பெற்ற ஒருவருக்கு கிறிஸ்துவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் உள்ள ஐக்கியத்தையும், கிறிஸ்துவோடு அவர் இணைக்கப்பட்டதையும், அவரது பாவங்கள் மன்னிக்கப்பட்டதையும் வெளிப்படுத்தும் அடையாளமாகக் காணப்படுகின்றது. திருமுழுக்கு பெற்றவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தன்னைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்துள்ளதால் புதிய ஜீவனுள்ளவராய் வாழ்க்கை நடத்துவார் என்பதையும் இது எடுத்துக்காட்டுகின்றது.*

*மாற்கு 1:4; அப்போஸ்தலர் 22:16; ரோமர் 6:3-5; கலாத்தியர் 3:27; கொலோசெயர் 2:12.*

2. *கடவுளிடம் மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிய சித்தங்*

*கொள்பவர்கள் மட்டுமே இத்திருநியமத்திற்கு முறையாகத் தம்மை ஒப்புக்கொடுக்கக் கூடியவர்கள்.*

*மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:41; 8:12,36,37; 18:8.*

**3.** *இத்திருநியமத்தின் வெளிப்புறச் சாதனமாக தண்ணீர் பயன்படுத்தப்பட்டு, பிதா, குமாரன், ஆவி ஆகியோரின் பெயரில் விசுவாசிக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட வேண்டும்.*

*மத்தேயு 28:19,20; அப்போஸ்தலர் 8:38.*

**4.** *இத்திருநியமத்தின் முறையான அனுசரிப்புக்கு அமிழ்த்தல், அதாவது விசுவாசியின் முழு உடலையும் தண்ணீரில் முழுவதுமாக தாழ்த்தல் அவசியமாகும்.*

*மத்தேயு 3:16; யோவான் 3:23.*

# 30
# திருவிருந்து

**1.** *இயேசு கிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே நாளில் திருவிருந்தை ஏற்படுத்தித் தந்தார். கிறிஸ்துவின் மரண பலியைக் காட்டவும், அவரைத் தொடர்ந்து நினைவு கொள்ளவும், உலக முடிவு பரியந்தமும் திருவிருந்து அவரது சபைகளில் அனுசரிக்கப்பட வேண்டும். கிறிஸ்துவின் பலியினால் ஏற்பட்ட அனைத்துப் பலாபலன்களும் பரிசுத்தவான்களுக்கு உரியது என்பதை நிரூபிக்கவும் இது ஏற்படுத்தப்பட்டது. மேலும், கிறிஸ்துவில் அவர்களுடைய ஆத்மீக சக்தியையும் வளர்ச்சியையும் விஸ்தரிக்கவும் கிறிஸ்துவுக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யும்படி அவர்களை கிறிஸ்துவோடு இணைக்கும் அனைத்தையும் உறுதிபெறச் செய்யவும் இது ஏற்படுத்தப்பட்டது. விசுவாசிகளுக்கு கிறிஸ்துவுடனும், ஒருவருக்கொருவருடனும் இருக்கும் ஐக்கியத்தைக் கட்டுவதாகவும் உறுதிப்படுத்துவதாகவும் திருவிருந்து இருக்கிறது.*

*1 கொரிந்தியர் 10:16,17,21; 11:23-26.*

**2.** இத்திருநியமத்தின் மூலம் கிறிஸ்து பிதாவுக்கு பலியாகக் கொடுக்கப்படுவதில்லை. அதுமட்டுமன்றி உயிரோடிருப்பவர்களுடையதும், மரித்தவர்களினதும் பாவ நிவாரணத்திற்காக இதன் மூலம் எந்தப் பலியும் செலுத்தப்படுவதில்லை. கிறிஸ்து சிலுவையில் எப்போதைக்குமாக ஒரே தடவை தன்னையே பலியாகக் கொடுத்ததை நினைவுகூருவதாகவே திருவிருந்து இருக்கிறது. அத்தோடு கல்வாரியில் ஒரே தடவை நிகழ்ந்த அந்தச் செயலுக்காக கடவுளுக்குக் கொடுக்கக்கூடிய ஆத்மீகத் துதியாகவும் இது இருக்கிறது. ஆகவே, போப் (Pope) கொடுக்கும் மாஸ் (Mass) என்று அழைக்கப்படும் பலி சகிக்கமுடியாததாகவும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் பாவ நிவாரணத்திற்கான ஒரே பரிகாரப்பலியான கிறிஸ்துவின் பலியைப் பாதிக்கிறதாகவும் இருக்கிறது.

*மத்தேயு 26:26-28; 1 கொரிந்தியர் 11:24; எபிரெயர் 9:25,26,28.*

**3.** இத்திருநியமத்தை அனுசரிக்கும்போது தன்னுடைய போதகர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஜெபம் செய்யுமாறும், ரொட்டியையும், திராட்சை இரசத்தையும் ஆசீர்வதித்துப் பரிசுத்தமாகப் பயன்படுத்தும்படியும் வழி நடத்துகிறார். அவர்கள் ரொட்டியைக் கையில் எடுத்து அதை உடைத்தபின், கோப்பையையும் கையில் எடுத்து அவை இரண்டையும் விசுவாசிகளுக்குக் கொடுப்பதோடு தாமும் அதேவேளை அத்திருவிருந்தில் கலந்துகொள்ள வேண்டும்.

*1 கொரிந்தியர் 11:23-26.*

**4.** கோப்பையை ஆத்துமாக்களுக்கு கொடுக்க மறுப்பதும், திருவிருந்தின் சாதனங்களை ஆராதிப்பதும், அவற்றை உயர்த்திப் பிடிப்பதும், அவற்றை மகிமைப்படுத்தும்படியாக தூக்கிச் செல்லுவதும், சமய ஆசாரங்களுக்காக அவற்றை ஒதுக்கி வைப்பது போல் நடிப்பதும், திருவிருந்தின் தன்மைக்கு எதிரானதும், அதை ஏற்படுத்திய கிறிஸ்துவின் நோக்கங்களுக்கும் மாறானவையாகும்.

*யாத்திராகமம் 20:4,5; மத்தேயு 15:9; 26:26-28.*

**5.** திருவிருந்தின் வெளிப்புறச் சாதனங்களான ரொட்டியும், திராட்சை இரசமும் முறையாக திருவிருந்திற்காக தயார் செய்து வைக்கப்படும்படியாக கிறிஸ்து நியமித்துள்ளார். இவை இரண்டும் சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவரோடு

*அடையாளபூர்வமான தொடர்புடையவையாக இருந்தபோதும், சில வேளைகளில் அவை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருள்களின் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. அதாவது, கிறிஸ்துவின் சரீரமும், இரத்தமும் என அவை அழைக்கப்படுகின்றன. அவை திருவிருந்தில் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலையிலேயே தமது தன்மையிலும், சாரத்திலும் எந்தவித மாற்றமுமடையாமல் ரொட்டியாகவும், திராட்சை இரசமாகவும் இருக்கின்றன.*

*1 கொரிந்தியர் 11:26-28.*

**6.** *திருவிருந்தின் நியமங்களான ரொட்டியும், திராட்சை இரசமும் ஆசாரியர் அதைக் கையாளும்போதோ அல்லது வேறு விதத்திலோ மாற்றமடைந்து கிறிஸ்துவின் சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகின்றன என்ற "பொருள் மாற்றமைவுத் தத்துவம்"* (Transubstantiation) *வேதாகமத்திற்கு முரணானது மட்டுமல்லாமல் பொது அறிவுக்கும், காரணகாரிய சிந்தனைக்கும் முரணானது. அத்தோடு, இது திருவிருந்தின் தன்மையையே தூக்கி எறிகின்றது. இப்போதனை சகலவிதமான சிலை வழிபாட்டிற்கும், மூட நம்பிக்கைகளுக்கும் காரணமாக இருந்துள்ளது.*

*லூக்கா 24:6,39; அப்போஸ்தலர் 3:21; 1 கொரிந்தியர் 11:24,25.*

**7.** *திருவிருந்தில் பங்குகொள்ளத் தகுதியுடையவர்கள் புறத்தில் கண்ணுக்குப் புலனாகிற ரொட்டியையும், திராட்சை இரசத்தையும் உட்கொண்டாலும், அதேவேளை கிறிஸ்துவின் மரணத்தினால் ஏற்பட்ட பலன்கள் அனைத்தையும் சிலுவையில் மரித்த கிறிஸ்துவின் மூலம் பெற்று அனுபவிக்கிறார்கள். இதை அவர்கள் ஒரு மனிதனுடைய சரீரத்தையும், இரத்தத்தையும் உண்பதால் அனுபவிப்பதுபோல் இல்லாமல் தம்முடைய விசுவாசத்தால் அகத்தில் அனுபவிக்கிறார்கள். திருவிருந்தில் ரொட்டியையும், திராட்சை இரசத்தையும் விசுவாசிகளுடைய சரீர புலன்கள் உணவாகக்கொள்வது போல், அவற்றின் மூலம் கிறிஸ்துவின் சரீரமும், இரத்தமும் விசுவாசிகள் தம்முடைய விசுவாசத்தால் கிறிஸ்துவில் ஆத்மீக அனுபவத்தை அடைவதற்காகக் கொடுக்கப்படுகிறது. ஆனால், அவை எந்த விதத்திலும் மாம்ச ரீதியில் கொடுக்கப்படுவதில்லை.*

*1 கொரிந்தியர் 10:16; 11:23-26.*

8. திருவிருந்தில் அபாத்திரமாய் கலந்துகொள்கிறவர்கள் கிறிஸ்துவின் சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் எதிராகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய புசித்தலும், பாணம் பண்ணுதலும் அவர்களைத் தெய்வீகத் தண்டனைக்குக் கீழ் கொண்டுவருகின்றன. ஆகவே, அறியாமையுடையவர்களும், பரிசுத்தமற்றவர்களும், கிறிஸ்துவோடு ஐக்கியத்தில் வரும் தகுதியற்று திருவிருந்தில் கலந்து கொள்ளும் தகுதியில்லாதவர்களாயிருக்கிறார்கள். அந்நிலையில் அவர்கள் தொடர்ந்திருப்பார்களானால் அவர்களைத் திருவிருந்தில் கலந்துகொள்ள அனுமதித்தலாகாது. அவ்வாறு அனுமதிப்பது கிறிஸ்துவுக்கு எதிரான பெரும் பாவத்தை செய்ததாகும்.

*மத்தேயு 7:6; 1 கொரிந்தியர் 11:29; 2 கொரிந்தியர் 6:14,15.*

# 31

# மரணத்திற்குப்பின் மனிதனின் நிலையும் மரித்தோரின் உயிர்த்தெழுதலும்

1. இறந்தபின் மனிதர்களுடைய சரீரம் மண்ணை அடைந்து அழுகிப்போகின்றன. ஆனால், அவர்களுடைய நித்தியமான ஆவிகள் இறக்காமலும், உணர்வற்ற நிலையை அடையாமலும், உடனடியாக தம்மைப் படைத்த கடவுளை அடைகின்றன. நீதிமான்களின் ஆவிகள் மரணத்தின்போது தங்களுடைய பரிசுத்தம் பூரணமடைந்து பரலோகத்தை அடைகின்றன. அங்கே அவர்கள் கிறிஸ்துவோடிருந்து, மகிமையின் ஒளியில் கடவுளின் முகத்தைப் பார்த்துக்கொண்டு, தங்களுடைய சரீரங்களின் முழு விடுதலைக்கான நாளை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள். கேடானவர்களின் ஆவிகள் நரகத்திற்கு தள்ளப்பட்டு, கடுமையான இருளில் வேதனையை அனுபவித்து நியாயத்தீர்ப்பு நாளுக்காகக் காத்திருக்கின்றன. மனித சரீரங்களை விட்டகன்ற ஆவிகள் ஒன்றில் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ இருக்கின்றன. இவை தவிர்ந்த வேறு எந்த இடத்தைப் பற்றியும் வேதம் போதிக்கவில்லை.

*ஆதி 3:19; பிரசங்கி 12:7; லூக்கா 16:23,24; 23:43; அப்போஸ் 13:36; 2 கொரி 5:1,6,8; பிலி 1:23; எபி 12:23; 1 பேதுரு 3:19; யூதா 6,7.*

2. *கடைசி நாளில் இவ்வுலகில் உயிரோடிருக்கும் விசுவாசிகள் இறக்காது உடனடியாக மாற்றமடைவார்கள். இறந்த அனைவரும் தாங்கள் எப்போதும் கொண்டிருந்த அதே சரீரத்துடன் உயிர்த்தெழுந்து தங்களுடைய ஆவிகளுடன் நிரந்தரமாக இணைக்கப்படுவார்கள். இருப்பினும் அவர்களுடைய சரீரம் தன்மையில் வேறுபட்டதாக இருக்கும்.*

*யோபு 19:26,27; 1 கொரிந்தியர் 15:42,43,51,52; 1 தெசலோ 4:17.*

3. *கிறிஸ்துவின் வல்லமையால் அநீதியானவர்களின் சரீரங்கள் அவமதிப்பிற்காக உயிர்த்தெழும். தன்னுடைய ஆவியால் கிறிஸ்து நீதிமான்களின் சரீரங்களை மகிமைக்காக உயிர்த்தெழச்செய்து தன்னுடைய மகிமையான சரீரத்தைப்போல மாற்றி அமைப்பார்.*

*யோவான் 5:28,29; அப்போஸ்தலர் 24:15; பிலிப்பியர் 3:21.*

# 32
# இறுதி நியாயத்தீர்ப்பு

1. *இயேசு கிறிஸ்துவால் நீதியுடன் இவ்வுலகை நியாயந்தீர்க்க கடவுள் ஒரு நாளை நியமித்திருக்கிறார். பிதா, குமாரனுக்கு நியாயத்தீர்ப்பிற்கான சகல அதிகாரத்தையும் வல்லமையையும் தந்துள்ளார். அந்நாளில் விழுந்துபோன தேவதூதர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். அதேபோல் உலகத்தில் வாழ்ந்திருந்த அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்கள் தங்களுடைய எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் எல்லாவற்றிற்கும் கணக்குக் கொடுப்பதற்கும், தாங்கள் இவ்வுலக வாழ்வில் செய்துள்ள நன்மை தீமைகளின் அடிப்படையில் வெகுமதியைப் பெற்றுக்கொள்ளவும் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு சிம்மாசனத்திற்கு முன்பாக தோன்றுவார்கள்.*

*பிரசங்கி 12:14; மத்தேயு 12:36; 25:32-46; யோவான் 5:22,27; அப்போஸ்தலர் 17:31; ரோமர் 14:10,12; 1 கொரிந்தியர் 6:3; 2 கொரிந்தியர் 5:10; யூதா 6.*

**2.** *தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நித்திய இரட்சிப்பின் மூலம் தமது கருணையின் மகிமையை வெளிப்படுத்தவும், தன்னால் புறக்கணிக்கப்பட்டவர்களின் அதாவது கேடானவர்களும், கீழ்ப்படியாதவர்களும் நித்திய அழிவின் மூலம் தமது நீதியின் மகிமையை வெளிப்படுத்தவும் கடவுள் நியாயத்தீர்ப்புக்கென்று ஒரு நாளைத் தீர்மானித்துள்ளார். அந்நாளில் நீதிமான்கள் நித்திய ஜீவனையும், தேவனுடைய சந்நிதானத்தில் மனமகிழ்ச்சியையும், மகிமையையும் நித்திய வெகுமதியாகப் பெற்றுக்கொள்வார்கள். ஆனால், கடவுளை அறியாத, இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிய மறுத்த கேடானவர்கள் நித்திய வேதனையை அடையும்படி நியமிக்கப்பட்டு கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.*

*மத்தேயு 25:21,34,46; மாற்கு 9:48; ரோமர் 9:22,23; 2 தெசலோ 1:7-10; 2 தீமோத்தேயு 4:8.*

**3.** *எல்லா மனிதர்களும் பாவத்தைச் செய்வதை தடுப்பதற்காகவும், உபத்திரவத்தில் நீதிமான்களுக்கு அதிக ஆறுதலைக் கொடுப்பதற்காகவும் நியாயத்தீர்ப்பு நாள் வருகிறது என்பதை நாம் நம்ப வேண்டுமென்று கிறிஸ்து எதிர்பார்க்கிறார். அதற்காகவே அந்நாளை அவர் மிகவும் இரகசியமாக வைத்திருக்கிறார். மனிதர்கள் எல்லாத் தன்னம்பிக்கைகளையும் உதறித்தள்ளி, ஆண்டவர் எந்நேரத்தில் வருவார் என்ற அறியாமையுடன், எப்போதும் கவனத்துடன் இருந்து "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்; சீக்கிரமாய் வாரும்" என்று சொல்லத் தயாராய் இருப்பதற்காக கிறிஸ்து இவ்வாறு செய்தார்.*

*மாற்கு 13:35-37; லூக்கா 12:35-40; 2 கொரி 5:10,11; 2 தெசலோ 1:5-7; வெளிப்படுத்தல் 22:20.*